14 March 1934

...0, Nov 1931 பிரஜோற்பத்தி௵ கார்த்திகை
REGD. No. M. 1190.







# ஆனந்த போதி

# ANANDA BODHINI.

Vol. 17. பொருளடக்கம் No. 5.

1. கடவுள் வணக்கம் ... 321
2. அரும்பொருள் விளக்கம் ... 322
3. கோவில்கள் மடங்கள் ... 323
4. குதிரைக் குழு ... 329
5. கொற்கைப் பெருந்துறை ... 331
6. தமிழ் மக்களின் பொழுது விளையாட்டு, மேனாட்டுத் தத்துவம் 335,337
7. தமிழ்ப்பாவைச் சிறப்பு ... 341
8. "அங்கதன் அருந்திறல்" ... 344
9. மேனாட்டு விழுச் செல்வம் ... 350
10. மூடபக்தியின் சிறப்பு ... 354
11. லைப் இன்ஷியூரன்ஸ் பகுதி ... 360
12. உலகத்தில் பெரிய பொருள் எது? 365
13. வரிலி மோக்ஷம் ... 370
14. பெண்ணின் கடமைகள் ... 377
15. பத்திரிகை, ஓர் ஐய வினா 381, 383
16. அழிப்பான் கதைத் திரட்டு ... 385
17. யார் தாழ்த்தப்பட்டவர் பிரதிநிதி? 388
18. தேவதாசி முறை, ஓர் மறுப்பு 391, 393
...வல்:-சீல அறையின் மர்மம் ... 395
...க்கம் ... 400





## "ஆனந்தபோதினி"

### சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா, ஸிலோன் ... ... | 1—0— |
| | பினங், ஸிங்கபூர், தென்ஆப்ரிக்கா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—8—0 |
| கடந்துகொண்டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) சந்தாதாராய்ச் சேருகிறவர்கள் பூரணமாகப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தாத் தொகையை முன்னடிச் செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமூ முதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடி மாத சஞ்சிகை முதல், பத்திரிகை அனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகையை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ் 3—அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) அந்தக் கமிஷன் 2-அணு, வி. பி. க்குத் தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-5-6-அதாவது 6-அணு சேர்த்து ரூபா 1-6-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினல் 1-2-0 மட்டுமே யாகும். ஆதலால் முன்னடி மணியர்டர் அனுப்பிப் பத்திரிகை பெற்றுக் கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதி வரையில் பார்த்து அதற்கு மேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் அவ்விவரத்தைத் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரைய மனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புது விலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது அனுப்பினலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மத தூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியவைகளாகவும் எழுதவேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |


*Telephone* No. 3005. *Telegram*:—"Ananda Bodhini," Madras.

விலாசம்:—நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி"
6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.


ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.


(ALL RIGHTS RESERVED.)



| தொகுதி 16 | பிரமோதூதஸு பங்குனிமீ கஉ 1931ஸு மார்ச்சுமீ 14உ | பகுதி 9 |
|---|---|---|


### கடவுள் வணக்கம்.

காயாத மாமீது கல்லேறு செல்லுமோ
கடவுளி யாங்களடியேம்
கர்மபந் தத்தினாற் சன்மபந் தம்பெறக்
கற்பித்த தன்னருளே
வாயார வுண்டபேர் வாழ்த்துவது நொந்தபேர்
வைவதுவு மெங்களுலக
வாய்பாடு நிற்கநின் வைதிக வொழுக்கு நீனோ
வாழ்த்தினாற் பெறுபேறுதான்
ஓயாது பெறவொன முறையிட்ட தாற்பின்ன
குளறுவது கருமமன்றும்
உபயநெறி யிதென்னி லுசிதநெறி யெந்தநெறி
உலகிலே பிழைபொறுக்கும்
தாயான கருணையு முனக்குண் டெனக்கினிச்
சஞ்சலங் கெடவருள் செய்வாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்தசிவமே.

---

விதியை யும்விதித் தென்னை விதித்திட்ட
மதியை யும்விதித் தம்மதி மாயையில்
பதிய வைத்த பசுபதி நின்னருட்
கதியை யெப்படிக் கண்டு களிப்பதே.

---

அந்தக் கரண மடக்கத் தறப்பதுவே
உனது [illegible] றவினுக்கன் றெத்தாய் பராபரமே.

## அரும்பொருள் விளக்கம்

(1) இதனால் உலக இயற்கையை வெளியிட்டுத் தமது சஞ்சலங்கெட அருள் செய்யுமாறு வேண்டுகின்றார்.

(இ-ள்.) எல்லாப் பொருள்களிலும் நிறைந்த அகண்ட வஸ்துவான உண்மை அறிவு ஆனந்த வடிவமாகிய சிவமே! பழுக்காத மரத்தின்மீது கல் எறியப்படுவது இல்லை. பழுத்த மரத்திற்குத்தான் கல்லெறி. நீ கடவுள்—நாங்கள் அடிமைகள். வினைப்பிணிப்பால் பிறவிப் பிணிப்பை அடையும்படி கற்பித்து வைத்தது உன்கருணையே. வாயார உண்டவர் வாழ்த்துவதும், நொந்தவர் தூற்றுவதும் எங்கள் உலக வழக்கம். நிற்க, உன்னுடைய ஒழுக்க நூல் உன்னை வாழ்த்தினால் அடையத்தக்க வீட்டின்பத்தைத் தவறாமல் அடைவர் என்று முழங்குகின்றது. எனவே கண்டபடி உளறுதல் நற்காரியம் அல்ல. வைதல் வாழ்த்தல் ஆகிய இரண்டு நெறிகளில் எது தகுந்தவழி? உலகத்தில் குழந்தைகளின் குற்றங்களைப் பொறுக்கும் தாயின் கருணை உன்னிடமும் அமைந்திருக்கின்றது. இனி அடியேனுக்குத் துக்கம் அறும்படி அருள் செய்வாய் என்க.

அருள் நிறைந்த இறைவனிடத்தன்றி அன்பர்கள் முறையிடார்கள் என்பதனைக் குறிப்பிக்க "காயாத மரமீது கல்லெறு செல்லுமோ" என்றனர். பிராரப்த வினையின்படி யாவும் உண்டாமென்று தேராது நன்மை அடைந்தபோது ஏத்துவதும் தீமை வந்தபோது தாழ்த்துவதும் உயிர்களின் இயற்கை என்பார் "வாயார உண்டபேர்........வாய்பாடு" என்றனர். நின்னை வாழ்த்தினால் பேறனைத்தும் தவறாமல் உண்டாகும் என்று நூல்கள் முறையிட அங்ஙனம் செய்யாது வீண் காலங் கழித்து—வினைக்கேற்பத் தீமை வந்த காலத்தில் நின்னைத் தாழ்த்திப் பிதற்றுதல் நன்றன்று என்பார் "வைதிக..............ளறுவது கருமமன்றாம்" என்றார். வாழ்த்தியவர்களை வாழ வைப்பதும் வைதவர்களை மன்னிப்பதும் உனக்குரிய கருணை யென்பார் "உலகிலே ழைபொறுக்கும் தாயான கருணையு முனக்குண்டு" என்றனர்.

(2) இதனால் இறைவனது அருட்கதியைக் கண்டு களிப்பது அருமை ங்கின்றார்.

ப (இ-ள்) விதியையும் வகுத்து, அவ்விதிக் கிடமாக என்னையும் வகுத்து, வதென்று அமைத்த மதியையும் வகுத்து, அம்மதியை மாயையில் அழுத் (பதியே! உனது அருளாற் கிடைக்கும் கதியினைக் கண்டு மகிழ்வது தங்கள்? என்க.

விரோத

வும் எழு (இ-ள்) எந்தையே! மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய அந் கள் ஒடுங்கும்படி துறத்தலே எத்தகைய துறவினும் சிறந்ததாகும்

Life S

ஜீவி

—0

Telep டில் ஆலயங்களுக்காக விடப்பட்டிருக்கும் மானி 20—0—0

விலாச மான வருவாய்களை கல்வியினிமித்தம் da Bodhini," Madras.

6, லாப யார், "ஆனந்தபோதினி"

பால் பெட்டி நெ. 167, மதராஸ்.

187507

# ஆனந்தபோதினி

பிரமோதூத

வரு பங்குனிமீ 1உ

## "தேவதாசி" முறை.

சைவ—வைணவத் திருக்கோவில்களில் "தேவதாசிகள்" என்ற அருமைப் பெயரால் பல பெண்கள் பண்டைக் காலந்தொட்டு இருந்து வருகின்றனர். மக்கள் மனத்தூய்மை பெற்று, இம்மை மறுமை இன்பங்களை அடைவதற்கு ஆதாரமாய் விளங்கும் இறைவன் உறைவிடங்களில் "தேவதாசி"கட்கு ஆக்கம் அளித்து நிலைபெறச் செய்தல் என்னமுறை என்பது எமக்கு விளங்கவில்லை. முற்காலத்தில் இருந்த பெரியோர் "தேவதாசிகள்" ஏற்பாட்டை என் நோக்கத்தோடு செய்திருப்பினும், தற்காலத்தில் அவ்வேற்பாடு நமது உயரிய இந்து தருமத்தில் ஒரு பெரும் பீடையாக மாறி நிற்கின்றது என்பதை யாரும் மறுக்கத் துணியார் என்று நம்புகின்றோம். "தேவதாசிகள்" கோவில்கட்கு இன்றியமையாதவர்களா? அவர்கட்கு அங்கு என்ன வேலை? அதனால் மக்கள் அடையும் பயன் என்ன? "தேவதாசிகள்" ஏற்பாடு மக்கள் ஒழுக்கத்துக்கு ஊறு விளைப்பது இல்லையா? என்பன போன்ற ஒரு சில விஷயங்களைக் குறித்துச் சுருக்கமாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மக்கள் வாழ்க்கையின் நோக்கம் உண்டு, உடுத்து, உறங்கி விஷய இன்பம் நுகர்தல் மட்டும் அல்ல. பிறவிப் பிணியை வேரோடு களைந்து எங்கும் நிறைந்த இறைவனது அருட்சோதியில் இரண்டறக் கலத்தலே மக்கள் வாழ்க்கையின் நோக்கம் ஆகும். இதற்கு ஞானம் கைகூடவேண்டும். ஞானம் அடைய, யோகம் இதற்குக் கீழ்ப்படி

---

உனது சத்தமான நம்பிக்கையே உன்னைப் பாதுகாக்கும்.

யாகிய சோபனமாம். எல்லா மக்களும் முதலில் யோக ஞான மார்க்கங்களைத் தெரிந்து நடக்கும் அறிவும் ஆற்றலும் பெற்றவரல்லர். இறைவனை அருவமாக உபாசிக்கத் தகுந்தவரே இம் மார்க்கங்களில் பிரவேசிக்கத் தகுந்தவராவர். இத்தகைய முயற்சிகளால் கடவுளிடம் பக்தி முதிர்ந்து தூய்மைபெற்ற மனமுடையவராய் இருத்தல் வேண்டும். மனதை ஒரு வழிப்படுத்தித் தம் வயமாக்கும் சக்தி பெற்றவரே யோகஞான மார்க்கங்கட்கு அதிகாரிகள். இத்தகையோர் உலகில் மிகச் சிலரே.

கீழ்நிலையில் உள்ள மக்கட்கே சரியை கிரியை நெறிகள் வகுக்கப்பட்டன. சரியை கிரியை மார்க்கங்களை வழுவற நடத்தவே கோவில்களும் புராணங்களும் ஏற்படுத்தப் பெற்றிருக்கின்றன. விக்கிரகாராதனையையும் புராணங்களையும் வெறுத்துக் கண்டிப்போரின் தொகை நாளுக்கு நாள் நமது நாட்டில்—ஏன்? உலகத்திலேயே பெருகி வருகிறது. இதற்குக் காரணம் என்ன? கோவில்களிலும் புராணங்களிலும் காளாவட்டத்தில் பல ஊழல்கள் நிறைந்து விட்டமையும், உண்மை உணராமையுமே அத்தகைய வெறுப்புக்கும் பழிப்புக்கும் காரணம் என்று கருதுகின்றோம்; நாட்டு முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் கோவில்களும் புராணங்களும் தடைகளாக நிற்கின்றன வென்றும், இவைகளை அறவே ஒழித்துவிட வேண்டும் என்றும் "தீவிர சமூக சீர்திருத்த வாதிகள்" கிளர்ச்சி செய்கின்றனர். இவர்களது கொள்கைகளை எந்த அளவு மதிக்கலாம் என்ற ஆராய்ச்சியில் இறங்க இப்பொழுது நாம் விரும்பவில்லை. மனதை ஒரு வழியில் நிலைக்கச் செய்யவும், பக்தி உண்டாகவும் சகுண உபாசனை—கடவுளை உருவமாகப் பாவிப்பது இன்றியமையாத சாதனம் என்பது எமது அபிப்பிராயம். மேல்நிலைக்குச் சென்றவர்கட்கு உருவ வழிபாடு தேவை இல்லை. உருவ வழிபாட்டிற்குரிய புனித ஸ்தலங்கள் கோவில்களே. நமது நாட்டுப் புண்ணிய-புனித ஸ்தலங்கள் இப்பொழுது எந்நிலையில் இருக்கின்றன? அதை உன்னும்போது உள்ளங் குழைகின்றது. திருக்கோவில்களில் நிறைந்துள்ள எல்லாக் குறைகளையும் எடுத்து விரிக்கிற் பெருகும். கீழ்நிலையில்—பக்குவப்படாத மனதையுடைய மக்கட்கு என்று ஏற்பட்ட திருக்கோவில்களில் "தேவதாசிகள்" எற்றுக்கு? என்ற கேள்வியையே இப்பொழுது நாம் எழுப்புகின்றோம்.

---

தங்களுக்குக் கண்டு அதிகப்படியான மீதம் வைத்திருப்போர் ஏழைகளுக்குத் துரோகம் செய்கிறவர்களே.



நேயர்களே! இக் கேள்விக்கு என்ன விடை அளிக்கின்றீர்கள்? இறைவனுக்குக் கைங்கரியம் செய்ய என்பீர்களோ? ஆனால் அவர்கள் எத்தகைய கைங்கரியம் செய்கின்றனர் என்பதைச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். முற்காலத்தில் நம் முன்னோர் நன்னோக்கத்தோடு விட்ட மானியப் பொருள்களை உண்டு திருக்கோவில்கட்கு வந்து ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும் பாமர மக்களின் மனங்களைப் பாழ்படுத்தும் கைங்கரியத்தைத் தவிர வேறு கைங்கரியம் அவர்கள் செய்வதாக எமக்கு விளங்கவில்லை. பஞ்சேந்திரியங்களையும் அடக்கி ஒடுக்கி, துறவுக்கோலம் பூண்டு, அல்லும் பகலும் ஆண்டவனைத் தொழுது, கோவிற் பிரசாதத்தையே தமக்குரிய உணவாகக் கொண்டு, பூசனைக்குரியமாலை தொடுத்துக் கொடுத்து, உரிய காலங்களில் அருட்பாக்களை ஓதி, உலக விவகாரங்களில் ஈடுபடா திருப்போரே "தேவதாசிகள்" எனின்—அத்தகைய தேவதாசிகள் இப்பொழுது யாண்டுளர் என்றே கேட்கின்றோம்?

பெரிய புண்ணிய க்ஷேத்திரங்கட்குத் திருவிழாக் காலங்களில் ஏராளமான பொருட் செலவுடன், தூரதேசத்திலிருந்தும் மக்கள் வருகின்றனரே—அவர்கள் வந்து காண்பது என்னை? "தேவ்தாசிக"ளின் ஆட்டங்களும், வாண வேடிக்கைகளுமே அம் மக்கள் மனங்களைக் கவர்ந்து நிற்கின்றன என்பது மிகையாமோ? இந்நிலையில் மனதை ஒரு முகப்படுத்தி—ஏகாக்கிரச் சித்தத்துடன் இறைவனைத் தொழ எத்தகையோராலும் இயலுவதில்லையே! இதுவா மனதை ஒரு முகப்படுத்துவதற்குச் சாதனம் செய்யத் தூண்டும் மார்க்கம்? இந்தச் சந்தர்ப்பத்தில் இப்பொழுது நாட்டில் நடைபெற்றுவரும் திருவிழாக்களைப்பற்றி ஒரு சிறிது கூறுதல் பொருந்தும் என்று நினைக்கின்றோம். எந்த க்ஷேத்திரத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கு நடைபெறும் திருவிழாக்களில் வீண் செலவுக்குக் காரணமான ஆடம்பரங்களே நிறைந்திருக்கின்றன. மக்கள் மனங்களில் பக்தி அரும்புவதற்குரிய அம்சங்கள் சிறிதும் இல்லை என்றே கூறவேண்டும். நாடகம்—தெருக்கூத்துகளைக் கண்டால் தோன்றும் எண்ணந்தான் தற்காலத் திருவிழாக்களைக் கண்டாலும் தோன்றுகிறது. கடவுணெறிபற்றிய அறிவு வளர்ச்சிக்குரிய ஏற்பாடுகள் திருவிழாக் காலங்களில் சுத்த சூனியம். சந்தைக் கூட்டத்திற்கும் திருவிழாக் கூட்டத்திற்கும் வேற்றுமை கிடையாது. கடவுளுணர்ச்சியும் சமய அறிவும் மக்களிடையே அருகிவரும் இந்நாளில் ஏன் அவை பெறத்தக்க ஏற்பாடுகளைச் செய்யக்கூடாது என்று கேட்கின்றோம்? முற்காலத்தில் இத்தகைய சந்தர்ப்பங்களில் சமய ஞானம் பெருகத்தக்க சொற்பொழிவுகளும், புராணப் பிரசங்கங்களும், வாதப் பிரதிவாதங்களும் நடைபெறுமாறு

---

தார்க்கோலால் குத்தும் வண்டிக்காரன் மாட்டின் வருத்தத்தைக் கவனிப்பதில்லை.

ஏற்பாடு செய்திருந்ததாகப் பண்டை நூற்கள் வாயிலாக உணர்கின்றோம். இவ்வுண்மை ஐம்பெருங்காவியங்களுள் ஒன்றாகிய மணிமேகலையில் விழாவறை காதையிலும் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றது. பொதுவாக இந்தியாவிலும் சிறப்பாகத் தென்னாட்டிலும் கோவில்களும் மடங்களும் ஏராளம். இவற்றிற்குப் பண்டைத் தமிழ் மன்னர்களாலும், பொருள் படைத்த பெருவள்ளல்களாலும் விடப்பட்ட மானியங்கட்கோ எல்லை இல்லை. இம்மானியங்களைத் தவிர இக்காலத்து மக்களும் அளவற்ற பொருள்களைக் காணிக்கையாகத் தருகின்றனர். இப்பொருள்களெல்லாம் திருவிழாக்களின் பேரால் விழலுக்கிறைத்த நீராகவே வீணிற் செலவழிந்து கொண்டிருக்கின்றன. உண்மைச் சமயப் பற்றுடைய பேரறிஞர் ஏனோ இவ்வுண்மையை அறிந்தும் அறியாதவராகவே இருந்துவருகின்றனர். ஒவ்வொரு புண்ணிய க்ஷேத்திரத்திற்கும் ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கான மக்கள் யாத்திரையாக வந்து வந்து வாளா திரும்புகின்றனர் என்றே கூறி வருந்த வேண்டியிருக்கிறது. ஆண்டவனைக் கண்குளிரக் கண்டு தொழவேண்டும் என்ற வேட்கை மீக்கூர்ந்து வரும் அன்பர்கள் மக்கட் பெருக்கின் நெருக்கத்தால் அப்பேறு வாய்க்கப் பெறாமல் "தேவதாசி"களின் ஆடல் பாடல்களையும், வாண வேடிக்கைகளையும் மட்டும் கண்டு திரும்பும் காட்சியை இன்றும் கண்கூடாகக் காணலாம். மேலே எடுத்துக் காட்டியவற்றைக் கொண்டு யாம் திருவிழாக்களை நடத்தக்கூடாது என்று கூறுவதாகத் தப்பெண்ணம் கொள்ளாமலிருக்க நேயர்களை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆனால் அவை ஆடம்பரத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அறிவுடைமையை அடிப்படையாகக் கொண்டு விளங்க வேண்டும் என்றே பெரிதும் விரும்பி வற்புறுத்துகின்றோம்.

"தேவதாசிகள்" என்று பேர் வைத்துப் பெண்களைக் கொண்டு வந்து கோவில்களில் ஆட்டிவைத்து ஆபாசப்படுத்துவது ஒரு நாளும் அறிவுடைமை ஆகாது. இம்முறை இளைஞர்களின் ஒழுக்கக் கேட்டிற்குப் பெரிதும் காரணமாய் நிற்கின்றது என்பதை எல்லாரும் ஒப்புக்கொண்டு தீரவேண்டும். சமீபத்தில் சென்னைத் திருவல்லிக்கேணியில் தெப்போற்சவம் நடைபெற்றது. தெப்பத் தேரின் அலங்காரம் வருணனைக்கு எட்டாதது என்றுதான் கூறவேண்டும். திருக்குளமும், தேரும், கோயிலும், கோயிலைச் சார்ந்த சுற்றுப் பக்கங்களும் மிளிர்ந்த தோற்றத்தைக் கண்டு தேஜோமயமான தேவேந்திர உலகம் அல்லது வைகுண்டம் என்றே பலரும் கருதினர். தெப்பத்தேர் அடிமுதல் நுனிவரை மின்சார விளக்குகளாலும் பன்னிறப் பூமாலைகளாலும் மிக விசித்திரமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. தேரின் நெற்றியில் மின்சார விளக்குகளாலேயே தென்

இந்தியர் செலவழிக்கும் அநாவசியச் செலவுகளில் கல்யாணச் செலவும் ஒன்று.



கலைத் திருமண்!-ஸ்ரீ சூர்ணத்துக்குச் சின்னஞ்சிறு செந்நிற விளக்குகள்!-நேயர்களே! எவ்வாறு இருந்திருக்கும் என்று நீங்களே பாவனை செய்துபாருங்கள். இத்தகைய அணித்தேரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள் திருமுன் "தேவதாசி"களின் தெய்வத் திருநடனம்!-ஆடல்! பாடல்! அன்பர்களே! வந்திருந்த ஆண் பெண் அடங்கலும் யாரைக்கண்டு தரிசித்தனர் என்று எண்ணுகின்றீர்கள்? வந்திருந்த கூட்டத்தில் பெருமாளைக் கண்டு தொழும் எண்ணம் ஆயிரத்தில் ஒருவருக்கு எழுந்ததோ இல்லையோ என்பதில் எமக்குப் பெரிய சந்தேகம். "அவள் பெரிய குதிர்போலிருக்கிறாள்—இவள் கொஞ்சம் பரவாயில்லை—அந்தச் சிறுகுட்டி அழகாயிருக்கிறாள்—ஆனால் ஆடத் தெரியவில்லை—பாட்டுச் சுமாராய்ப் பாடுகிறாள்-பூஜை செய்கிற ஐயங்கார் கவனம் எங்கே இருக்கிறது என்று பார்" என்று பலரும் பலவிதமாய்ப் பேசிக் கொர்ண்டும் ஏசிக்கொண்டும் போனதை யாம் கண்ணாரக் கண்டு காதாரக் கேட்கும்போது எமது இருதயம் துடித்தது! அந்தோ ராமாநுஜர் கண்ட வைஷ்ணவமே! நம்மாழ்வார் போற்றிய வைஷ்ணவமே! ஆண்டாள் அவதரித்த வைஷ்ணவமே! உனது புறக்காட்சி இந்நிலைக்கும் வந்துவிட்டதே!—என்று ஏங்கினோம்! வருந்தினோம்!

"முற்காலத்தில் கோவில்களில் 'தேவதாசிகள்' நல்லொழுக்கம் வாய்ந்தவர்களாய்ப் புலனடக்கத்துடன் கடவுள் திருப்பணி செய்து வந்தார்கள்; இக்காலத்தில் ஒரு சிலர் தீய ஒழுக்கினராய் வழுவிவிட்டனர். இதற்காகத் 'தேவதாசி' முறையையே அடியோடு ஒழித்துவிடுதல் நன்றன்று. அவர்கள் கோவில்களில் இருக்க வேண்டும்; வேண்டுமானால் அறிவு கொளுத்திச் சீர்திருத்தலாம்" என்று ஒரு சில "அறிஞர்" வாதிக்கின்றனர். தேவதாசி முறை ஒழிப்புக்கு எதிர்ப்பிரசாரமும் செய்கின்றனர்! நாட்டு முன்னேற்றத்திலும், சமூக சீர்திருத்தத்திலும் பெண்கள் விடுதலையிலும் "பூரண அநுதாபம்" உள்ள இவ் "வறிஞர்" இவ்வாறு எதிர்ப்பதின் ரகஸியம் என்ன என்று எமக்கு விளங்கவில்லை. "தேவதாசிகள்" முற்காலத்தில் நல்லொழுக்கத்துடன் புலன்களை அடக்கித் தெய்வத் திருப்பணியைமட்டும் செய்துவந்திருப்பார்களானால் "தேவதாசி"களின் பரம்பரை எவ்வாறு கிளைத்துக்கொண்டு வருகிறது என்னும் கடாவிற்கு இவர்கள் என்ன விடை அளிப்பார்களோ யாம் அறியோம். பொதுமகளிர், விலைமகளிர், வரைவின் மகளிர் என்ற பேரால் நமது நாட்டில் ஒரு பெண் சமூகம் இருந்து வருகிறதே—இது எந்தப் பரம்பரையைச் சார்ந்து வருகிறது? இதற்கு மூலம் எது? இந்தச் சமூகத்துக்கும், கோவில் "தேவதாசி"கட்கும் தொடர்பு உண்டா இல்லையா? என்னும் வினாக்களுக்கும் அவ் "வறிஞர்" என்ன


உனது மரியாதையை இழக்க—நீ கடன்படுவது முதற்படி.

விடை அளிப்பார்களோ யாம் அறியோம். விலைமகளும் தன்னைத் "தேவதாசி" "தேவடியாள்" என்றே பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறாள். இந்த வகுப்பைச் சேர்ந்த மகளிரின் இழிநிலையும், அவர்களால் நாட்டில் நிகழும் ஒழுக்கக் கேடும், பொருள் நஷ்டமும் அளவில் அடங்குமா என்று கேட்கின்றோம்? "தேவதாசி" முறை இருக்கவேண்டும் என்கிறவர்கள் பொதுமகளிரையும் ஆதரிக்கிறவர்களாகவே விளங்குகிறார்கள். "தேவதாசிகள்" பெருமையுடையவர்—மதிக்கத்தக்கவர் என்ற எண்ணம் நமது நாட்டில் அணுவளவும் இல்லை. ஒருவனைப் பார்த்து நாய், 'பேய் என்றாலும் சகித்துக் கொள்ளுகிறான். "தேவடியாள் மகனே" என்றால் தலைகால் தெரியாமல் சினந்து சீறுகிறான். இத்தகைய பெருமையையா நமது தெய்வத் திருக்கோவில்கள் அநுபவிக்க வேண்டும்? நேயர்களே! சற்றே சிந்தித்துப் பாருங்கள்! "தேவதாசி" முறை திவ்யமானது. தேவதாசிகள் கோவில் திருப்பணி செய்கிறார்கள். நமது பண்டைக் கலைகளை (சங்கீதம்—நாட்டியம்) வளர்க்கிறார்கள்; அவர்கட்கு மோக்ஷம் கிடைக்கிறது" என்று வாதிக்கின்றவர்களை நோக்கி யாம் ஒன்று கேட்கின்றோம். திவ்யமானதும், பண்டைக் கலைகளை வளர்க்கக் கூடியதும், மோக்ஷம் கிடைக்கக் கூடியதுமாகிய இம்முறை குறிப்பிட்ட ஒரு சில பெண்களுக்குமட்டும் அன்றி எல்லாருக்கும் வேண்டியதே. ஒவ்வொருவரும் மோக்ஷம் வேண்டும் என்றே விழைகின்றனர். ஆனால் தங்கள் குடும்பத்தில் பிறக்கும் பெண்களுக்கு இம்முறை சிறந்தது என்று கற்பிக்கின்றனரா? இதற்கு என்ன மறுமொழி கூறுவர்? என்று அறிய விரும்புகின்றோம். ஒன்றுமறியாத பெண்களுக்குப் பொட்டுக் கட்டித்தானா கலைகளை வளர்க்க வேண்டும்? உண்மை நாகரிகமும், ஒழுக்கமும், சமய அறிவும் ஜீவநாடிகளாக விளங்கும் நமது நாட்டில் "தேவதாசி" முறை பிறநாட்டினர் முன்னிலையில் நம் மக்களைத் தலைகுனியச் செய்து வருகிறது என்று இப்பொழுது சுருக்கமாகக் கூறி முடிக்கின்றோம்.

சமீபத்தில் கொச்சி சமஸ்தான சட்டசபையில் "தேவதாசி" முறையை ஒழிக்கும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது. கொச்சி மகாராஜாவின் அங்கீகாரம் பெற்றபின் அது விரைவில் அமுலுக்கு வரும். மைசூர்—திருவாங்கூர் சமஸ்தானங்களிலும் இத்தகைய தீர்மானங்கள் முன்னரே நிறைவேற்றப் பெற்றிருக்கின்றன. சென்னை சட்ட சபையிலும் டாக்டர். முத்துலக்ஷ்மி ரெட்டி அவர்களால் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேறியிருக்கிறது. இத் தீர்மானங்கள் எல்லாம் காரியத்தில் நற்பயன் தரத்தக்க நன்னாளை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். விரைவில் திருவருள் கூட்டி முடிப்பதாக. ஓம் தத் ஸத்.

---

பலரின் உழைப்பினாலேயே ஒருவன் பணக்காரனாக முடிந்தது.




# நற்றமிழ் நந்தி.

(ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.)

"கல்வியே கரையிலாத காஞ்சிமாநகரம்" என்று செஞ்சொற் கவிஞரால் சிறப்பிக்கப்பெற்ற நன்னகரில், முன்னாள் பல்லவமன்னர் ஆணைசெலுத்துவா ராயினர். சான்றோர் மலிந்த தொண்டை நாட்டை ஆண்டுவந்த இம்மன்னர், காடுகெடுத்து நாடாக்கிக் குளந்தொட்டு வளம்பெருக்கினமையால், காடவர் என்று கவிநலம் சான்ற புலவரால் புகழப் பெற்றார். இத்தகைய மன்னருள் புலவர்பாடும் புகழமைந்த நந்தி மன்னன், செழுந் தமிழ்ச்சுவை தேரும் செல்வனா யமைந்தான். முத்தமிழ்க் கலைகளையும் முறையாய் ஆய்ந்து, பழுத்த தமிழ்ப்புலமை சான்ற பல்லவநந்தியைத் தமிழ்நந்தி யென்றே செந்நாப்புலவர் சீராட்டிப் போந்தார். அந்திமாலையில் விண்ணையும் மண்ணையும் விழுங்கி விரிந்த இருளாய கருநெருப்பினிடையே எழுந்த நிலாவாய வெண்ணெருப்பின் வெம்மைக்கு ஆற்றாத ஓர் தலைமகள்

"மண்ணெலாம் உய்யமழைபோல் வழங்குகரத்
தண்ணுலாமாலைத் தமிழ்நந்தி நன்னாட்டில்
பெண்ணிலாவூரிற் பிறந்தாரைப் போலவரும்
வெண்ணிலாவே இந்தவேகம் உனக்காகாதே"

என்று திங்களைப்பழித்துரைக்கும் மொழிகளில், தமிழ்ச்சுவை யறிந்த நந்தியின் தண்மையும் வண்மையும் தழைத்திலங்கக் காணலாம். கைம்மாறு கருதாது மழைபொழிந்து வளம்பெருக்கும் கார்மேகம்போல், செஞ்சொற் கவிஞரது மனந்தழைக்கப் பொன்சொரிந்த நந்தியின் நந்தாப்புகழைப் புலவர் மனமாரப்புகழ்ந்து வாயார வாத்தினார்கள். வீரத்தோள்களில் விரையுறு நறுமலர் மாலையும் பண்ணார்ந்த செஞ்சொல் மாலையும் புனைந்த பல்லவமன்னனைத் "தண்ணுலாமாலைத் தமிழ்நந்தி" என்று தமிழ்க்கவிஞர் நிறைந்த மொழிகளாற் புகழ்ந் துரைத்தார். "தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று நல்லிசைப் புலவரால் சிறப்பிக்கப்பெற்ற நாட்டைத் "தமிழ்நந்தி நன்னாடு" என்று வியந்துரைத்தார். நால்வகை வளங்களும் நிறைந்து, நற்றவஞ் செய்

---

உனது நாட்டு மக்களின் சந்தோஷத்தினாலேயே உன் மனம் நிம்மதியடையட்டும்.

வார்க்கிடமாய் விளங்கிய தொண்டை நன்னாடு, நந்தியின் ஆட்சியில் புலவர் நாடாகவும் இலங்கிய பான்மையால், பொன்னாட்டை யொக்கும் நன்னாடென்று புலவர் புகழ்ந்துரைத்த முறை பொருத்த முடையதாகும்.

இத்தகைய தமிழ்நந்தியைப் பிரிந்த தலைமகள், மாலையில் மலரும் மையல் நோயால் நையலுற்று, காதலின் வெம்மைக்கு ஆற்றாது கூறும் மொழிகள் செந்தமிழ்ச்சுவை தேரும் செவிகளிற் செழுந்தேன் சொரிவனவாகும்.

செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச்
சந்தன மென்றாரோ தடவினார்—பைந்தமிழை
ஆய்கின்ற கோன்நந்தி ஆகம் தழுவாமல்
வேகின்ற பாவியேன் மெய்.

என்றெழுந்த தெள்ளுதமிழ்க் கவியின்சுவை கற்றோர் கருத்தை அள்ளுவதாகும். அட்டாக்கலைய செவ்வாய் அணிநலங் கருகிக் காமக்கட்டழல் எரிப்ப, மெல்லிய மஞ்சத்திற் சாய்ந்திருந்த மங்கையின் மேனியில், பன்னீர் கலந்த சந்தனத்தைத் தோழியர் பூசியபொழுது, பொறுக்கலாற்றாத வெம்மையால் வருந்திய அந்நங்கை கூறும் மொழிகள் அழகு வாய்ந்தனவாம். காதலனைக் காணாது கரிந்து பொரிந்து கிடந்ததன் மேனியில், செந்தீயின் சாற்றை வடித்தெடுத்து எவரோ தடவிய கொடுமையை நினைந்து தலைமகள் கொதிக்கின்றாள். தலையாய அன்புவாய்ந்த தோழியர், செழுஞ்சீதச் சந்தனமென்று, செந்தழலின் சாற்றைப் பிழிந்து பூசாராதலின், "ஆரோ தடவினார்" என்று அலமருகின்றாள். இவ்வாறு உள்ளத்துள்ளே புகுந்து, வெம்மை விளைத்த காதலனாய வேந்தனை "பைந்தமிழை ஆய்கின்ற கோன்நந்தி" என்று அருமை சான்ற சொற்களால் புகழ்ந்துரைக்கின்றாள். கூற்றையும் ஆடல்கொண்ட கும்பகர்ணன் காற்றையும் கனலையும் பிழிந்து சாறுகொள்ளும் பெற்றியான் என்று கல்வியிற் பெரிய கம்பர் அருளிய சொல்லின் சுவை ஈண்டு நுகர்ந்து இன்புறத் தக்கதாகும்.

இவ்வாறு செந்தமிழின் சுவை தேர்ந்த நந்தி மன்னன், அக்காலத்தில் ஒப்புயர்வற்ற வீரனாய் விளங்கினான், படை வலியும் புயவலியும் படைத்த பல்லவன், "திருவின் செம்மையும், நிலமகளுரிமையும் பொதுவின்றி யாண்ட புரவலன்" என்று புலவர் கூறும் புனைதுரையால் இவ்வுண்மை இனிதறியப்படும். பாண்டிய மன்னனான வரகுணனைத் தெள்ளாற்றுப் பறந்தலையில் வென்று பொன்னி நாட்டையும் கன்னி நாட்டையும் அடிப்படுத்திய பல்லவன் பெருமை தென்னாடெங்கும் பரவிற்று. நந்தியின் படைவலியை நினைந்த பொழுது பகையரசர் மனம் பறையடித்ததென்று பாவலர் பாராட்டி மகிழ்ந்தார்.

"தோள்துணையாக மாவெள்ளாற்று மேவார்க்கடந்த அண்ணல் நந்தி!நின்
திருவரு நெடுங்கண் சிவக்குமாகில் செருநர் சேரும் பதிசிவக்கும்மே
நிறங்கிளர்புருவம் துடிக்கின் நின்கழல் இறைஞ்சாமன்னர்க்கு இடக்
[துடிக்கும்மே

எத்தனை இடர்ப்பட்டாலும் அவைகளைத் தைரியத்துடன் எதிர்த்து ஒழிப்பதுவே ஆண்மையாகும்.



கடுவாய்போல்வளை அதிரநின்னொடு மருவாமன்னர் மனந்துடிக்கும்மே."
என்று கவிஞர்கூறும் மொழிகள் கனிந்தநயம் வாய்ந்தனவாம். நந்தியின் நெடுங்கண் சீற்றத்தாற் சிவக்குமாயின், பகைவேந்தர்பதிகள் செங்குருதியாற் சிவக்குமென்றும், நந்தியின் புருவம் கோபத்தால் துடிக்குமாயின், பகையரசர் இடத்தோள் துடிக்குமென்றும், நந்தியின் போர்ச்சங்கம் முழங்குமாயின் மருவா மன்னர் மனம் கலங்குமென்றும், கவிஞர் பல்லவ மன்னனது வீரத்தைப் பாரித்துரைத்தார். இன்னும்,

"ஓடரிக் கண்மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியம் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென் மலர்க்குழல்சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தொள்ளாற்றில் விண்ணருளிச் செ...
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த்தாண்டன்
காடவற்கு முன்தோன்றல் கைவேலைப்பாடி
காஞ்சிபுரம்பாடி ஆடாமே ஊசல்."

என்றெழுந்த இன்கவியில் தொண்டை நன்னாட்டின் தலைநகராய காஞ்சி நகரின் தொன்மையும், அந்நகரில் அஞ்சா நெஞ்சனாய் வீற்றிருந்த நந்தியின் வன்மையும் அழகுற இலங்கக் காணலாம். (தொடரும்.)

பெண்கள் முன்னேற்றம்!-அர்த்தம் ஆயிற்று ?



பண்டை நிலை. இடைக்கால நிலை. நவீன நிலை.

இவர்களைப் பார்த்து நீங்களே அர்த்தம் செய்துகொள்ளுங்கள்.




# "நான் இந்தியாவுக்கு ஏன் வந்தேன்"

## சகோதரி-மீராபாயின் அற்புத வரலாறு

(R. ரங்கநாயகி)

**(இது "பாரதி" என்னும் தெலுங்கு மாதப் பத்திரிகையில், மாகண்டி. பாபி நீடுகாரு பி. எஸ். ஸி. (கார்னெல்) எம். எஸ். ஸி. (காலிபோர்னியா) ஆந்திர ஸெனட் சபை உறுப்பினர் எழுதிய கட்டுரையின் மொழிபெயர்ப்பு.)**

மஹாகவி ரவீந்திர நாதரின் சாந்திநிகேதனம் இந்தியாவிலுள்ள யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றாக விளங்குகிறது. பலதிறப்பட்ட ஜாதிகளின் நாகரிகம், இலக்கியம், கலைகள் முதலியவைகளைப் பார்ப்பதற்கும், படிப்பதற்கும், பாண்டித்தியம் அடைவதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் அரிய சந்தர்ப்பம் அளிக்கும் சாதனம் விசுவபாரதியாகும். இவ்விடத்தில் பல்வேறு நாடுகளில்—மாகாணங்களிலிருந்து வந்த பண்டிதர்கள் எப்பொழுதும் புத்தறிவு பெற்றவண்ணமா யிருக்கின்றனர். இத்தகைய அரும்பெறல் ஸ்தாபனத்தைக் கண்டு களிக்கும் பேறு எனக்கு ஒரு சமயம் வாய்த்தது. கல்கத்தா காங்கிரஸுக்குப் போய்ச் சாந்திநிகேதனத்தில் சிறிதுநாள் தங்கினேன். அப்போது சகோதரி மீராபாய் அம்மையாரைத் தரிசிக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. மகாத்மா காந்தியடிகள் தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு பரம்புரத்துக்குப் போய்க்கொண் டிருந்தபோது, மறுநாள் மெயிலில் மீராபாய் பரம்புரம் வருவார் என்றும், அவரை ஏலூர் ஸ்டேஷனில் சந்தித்துப் பாலும் பழமும் கொடுக்கவேண்டும் என்றும் கட்டளையிட்டார். அவ்வாறே அடுத்தநாள் மெயிலுக்குப் போய்த் தேடிப்பார்க்க, அவ்வம்மையார் மூன்றாவது வகுப்புப் பெண்கள் கம்பார்ட்மெண்டில் வீற்றிருந்தார். அவர் அணிந்திருந்த ஆடைகளைக் கண்டவுடன் அவரை ஒரு ஆங்கில மாது என்று நினைக்க முடியவில்லை. மூட்டையிலிருந்து ஒரு செம்பை எடுத்து நாங்கள் கொடுத்த பாலை வாங்கி ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டார். இந்தச் செம்பையே அவர் சாந்திநிகேதனத்துக்கு வந்திருந்தபோது தம் கையாலே துலக்கிக் கொண்டிருந்தார். பழக்கத்தால் வாழ்வை எவ்வளவு எளிதாக்கிக்

எப்பொழுதும் சந்தோஷமுள்ளவனாயிரு.



கொள்ளலாம் என்பதற்கு இந்த அம்மையாரின் வாழ்க்கையே திருஷ்டாந்தமாய் விளங்குகின்றது. ஒருநாள் தமது வாழ்க்கையின் பழைய நிலை என்ன?—தற்கால மாறுதல் எவ்வாறு உண்டாயிற்று என்பதைக் கூறினார். வாழ்க்கையை இரண்டு கூறாக வருணித்தார். 1. ஐரோப்பிய நாட்டில் தம் வாழ்வு. 2. இப்பொழுது காந்தியடிகளோடு காலங்கழிக்கும் புது வாழ்வு.

இந்த அம்மை பழைய கிறிஸ்தவ சம்பிரதாயங்களை அநுசரிக்கும் ஒரு ஆங்கிலக் குடும்பத்தில் பிறந்த பெண்மணி. இளமையில் இவருக்குக் குதிரைச் சவாரி என்றால் மிகுந்த விருப்பம். வாழ்க்கையின் நோக்கத்தைப்பற்றி எப்பொழுதும் மனதில் ஒருவித உறுதி யில்லாமலே இருந்தார். பாரமார்த்திக விசாரணையில் மூழ்கியும் ஒன்றும் தெளிவில்லாமல் இருந்தார்—மனவமைதியின்றித் தத்தளித்துக்கொண்டிருந்தார். பதினைந்தாவது வயதில் பெட்வினின் ஆஸ்திரேலியா நாட்டுச் சங்கீதம் கேட்டமையால் மனதில் கொஞ்சம் உற்சாகம் பிறந்தது. தகப்பனார் கடற்படையில் ஒரு பெரிய உத்தியோகஸ்தர்—அட்மிரல். தகப்பனாரோடு அநேக தேசங்கட்குச் சென்று பல துறைமுகப் பட்டினங்களையும் பார்த்துக் கொண்டிருந்தார். பதினைந்தாவது வயதில் லண்டன் நகருக்குச் சென்றபோது, அந்தக் காலத்து நாகரிகத்தின் கேடுகளை முதன் முதலாகக் கண்டார். எங்கு பார்த்தாலும் அமைதிக் குறைவே! பெண்களின் ஷோக்குகளுக்கும், பழக்கங்கட்கும் ஒரு எல்லையே இல்லாமலிருந்ததாம். ஏழைகட்கு வாழ்வில்லை—சௌக்கியம் இல்லை. வறுமை வளர்ந்துகொண்டிருந்தது. பணக்காரர்களிடையே அநாவசியமான தேவைகளும் பழக்க வழக்கங்களும் பெருகி யிருந்தன. அதனால் அவர்களிடையே வருவாய்க்கு மீறிய செலவுகள் ஏற்பட்டுக் கொண்டே இருந்தமையால் அவர்களுக்கும் சௌக்கியம் இல்லாமல் இருந்தது. இந்த அம்மையார் தமது மனச்சாந்தியி னிமித்தம் சங்கீதத்தில் காலங்கழித்து வந்தார். இந்நிலையில் ஐரோப்பியப் பெரும்போர் ஆரம்பமாயிற்று. அம்மையாரின் மனம் மேலும் கொஞ்சம் குழப்பம் அடைந்தது. நாகரிகத்தின் மீதிருந்த நம்பிக்கை முழுதும் மாறிவிட்டது. ஒவ்வொரு அநீதியான காரியத்துக்கும் கிறிஸ்து நாதரின் பெயரை உபயோகித்துக் கொண்டிருந்தனர். மனவமைதியின் பொருட்டுச் சங்கீதத்தில் தேர்ச்சி யடையவேண்டும் என்று ஆசை மேன்மேலும் வளரவே அதைக் கற்கத் தொடங்கினார் நமது அம்மையார். பிரான்சு மொழியையும் பயில ஆரம்பித்தார். பிரான்சு மொழியை நன்கு கற்றுகொள்ள வேண்டும் என்று பாரிஸ் நகருக்குச் சென்றார். அறிஞர் ரொமெயின் ரோலண்டு ஸ்விட்ஜர்லாந்தி லிருந்தபோது, அவரைப் பார்க்க வருவதாக ஒரு நிருபம் வரைந்தார். அவர் வந்து காணுமாறு தமது கைப்பட ஒரு பதில் நிருபம் விடுத்திருந்தார். பதில் கிடைத்த பின்னர் அம்மையார் அவரைக் காணச் சென்றார். அப்பொழுது இந்தியாவைப்பற்றி அம்மையாருக்கு ஒன்றும் தெரியாது. பதினேழாவது வயதில் இந்தியாவுக்கு வந்திருந்தார். அப்பொழுது பெரிய பெரிய உத்தியோகஸ்தர்கள், மகாராஜாக்கள், ராணிகள்—முதலியவர்களைப் பார்த்தாரே யொழிய உண்மை இந்தியாவைப் பார்க்கவில்லை. ரொமெயின் ரோலண்டு வாயிலாகவே முதன் முதலில் இந்தியாவைக் குறித்துத் தெரிந்துகொண்டார். அவரது வாழ்வுக்குரிய நன்னெறி, ரொமெயின் ரோலண்டு வாயிலாகத்தான் கிடைக்கும், இன்றேல் இல்லை என்று பூரணமாக நம்பினார்.

உனது மரணாவஸ்தையிலும் உனது மானத்தைக் காப்பாற்றப் பிரியப்படு.

அவர் மிகுந்த அன்போடு வரவேற்றிருந்தார். ஆனால் மிஸ். ஸ்லேட் தமது உள்ளத்தை விரிக்க முடியாமல்—பெரிதும் ஏமாற்றம் அடைந்து சொந்த வீட்டுக்குத் திரும்பினார். இவ்வாறு உற்சாகங் குன்றியிருக்கும்போது, தாராளமாய் மனம்விட்டுக் கலந்து பேசும்பொருட்டு மறுபடியும் ரொமெயின் ரோலண்டினிடமிருந்து ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. இந்தத் தடவை சென்றபோது தமது உள்ளக்கிடையை நன்றாக விரித்துரைத்தார். ஒரு சிறிது சாந்தி கிடைத்தது. அப்பொழுது மகாத்மா காந்தியடிகளைப்பற்றித் தாம் எழுதிய புஸ்தகத்தைக் குறித்து ரொமெயின்ரோலண்டு சொன்னார். காந்தியடிகளின் பெயர் புதிதாக இருந்தது. ரொமெயின்ரோலண்டு, மகாத்மாகாந்தியடிகள் இக்காலத்து கிறிஸ்துநாதர் என்று சொன்னபோது, அடிகள் தமது மோக்ஷ குருவாக விளங்குவார் என்று அம்மையார் நினைக்கவில்லை. வீட்டுக்கு வந்த பிறகு திருப்தியும் மனச்சாந்தியும் பெற்றிருந்தார். தகப்பனாருடன் எகிப்து நாட்டுக்குப்போனார். இங்கே கழுதைகளின்மீது பிரயாணம் செய்தார். இரண்டு மூன்று மாதங்கட்குப் பின்னர் மறுபடியும் பாரிஸ் நகருக்கு வந்தார். அப்பொழுது ரொமெயின் ரோலண்டு வரைந்த காந்தியடிகளின் சரிதத்தை வாங்கிப் பலமுறை படித்தார். காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு அமைதிக் குறைவு, அதிருப்தி முதலிய குழப்ப இருள் சூழ்ந்திருந்த தமது வாழ்க்கைக்குப் புதிய ஒளியாய்த் திகழ்ந்தது. புயலினால் தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு கப்பலுக்குக் கலங்கரை விளக்கம்போல் ஆயிற்று. காந்தியடிகளைத் தரிசித்து அவருக்குச் சேவை செய்யவேண்டும் என்று முடிவுசெய்து அதற்கான முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்துவிட்டார். அடிகளின் நூல்களை யெல்லாம் திருப்பித் திருப்பிப் பலதடவை படித்தார். வாழ்க்கையையும் உணவையும் கிரமமாய் மாற்றிக்கொண்டார். இவ்வாறு தம்மைத் தகுதியாக்கிக்கொள்ள ஓராண்டு பழகினார். இச் சந்தர்ப்பத்தில்தான் மகாத்மா காந்தியடிகள் தீவிரமான உபவாசம் இருந்தது. அந்நாட்டில் இருந்தவர்கள் காந்தி இறந்து போனார் என்று பேசிக்கொண்டார்களாம். இந்த அம்மையார் அதைச் சகிக்கவில்லை—நம்பவும் இல்லை. காந்தியடிகளின்மீது பக்தி மேன்மேலும் வளர்ந்தது. ரொமெயின் ரோலண்டைக்கண்டு பேசிய பின்னர், ஆச்சிரமத்திற்கு வரத் தீர்மானித் திருப்பதாகக் காந்தியடிகட்குக் கடிதம் வரைந்தார். 1925-ம் ஆண்டு ஆகஸ்டில் காந்தியடிகளும் வருமாறு பதில் எழுதினார். அக்டோபர் 25-ம் நாளில் கப்பலுக்குப் பிரயாணமானார். அப்பொழுது ரோலண்டு இவ்வாறு கூறினார்:—"நீ எவ்வளவு அதிருஷ்டசாலி! தற்கால கிறிஸ்து நாதரிடம் போகிறாய்! நீ எவ்வளவு அதிருஷ்டசாலி! எவ்வளவு அதிருஷ்டசாலி!"

உடனே லண்டனுக்குச் சென்று தம்மிடமிருந்த வஸ்துக்களை யெல்லாம் தாய் தந்தையர்கட்குக் கொடுத்துவிட்டு விடை பெற்றுக்கொண்டார். ஒரு ஆங்கிலப் பெண்ணுக்கு இருக்கவேண்டிய சாமான்கள் ஒன்றும் இல்லாமல்—புஸ்தகங்களைமட்டும் எடுத்துக்கொண்டு புறப்பட்டு, நவம்பர் 2-ஆம் நாளில் தமது வாழ்க்கையின் ஆதர்சமாகிய சபர்மதிக்கு வந்து சேர்ந்தார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் ஸ்டேஷனுக்கு வந்து வரவேற்றார். காந்தியடிகள் "அன்பு நிறைந்த குழந்தாய் வருக" என்று தழுவினார். அந்நாள் முதல் மகாத்மா காந்தியடிகளை "நீங்களே அன்னை—நீங்களே தந்தை—நீங்களே மோக்ஷ குரு" என்று சரணடைந்து விட்டார். அன்று முதல் மகாத்மா

மனிதர்களுக்கு கவலை அதிகரிப்பது பைத்தியத்திற்கு அஸ்திவாரம்.



காந்தியடிகளும் அம்மையாருக்கு அன்னையாய், தந்தையாய், மோக்ஷ குருவாய் விளங்கி வருகிறார். மிஸ். ஸ்லேட் மீராபாய் சோதரியாக மாறினார். அந்நாள் முதல் அவருக்குப் புதிய பிறவி! ஆகாரம் மாறிற்று. ஆசாரங்கள் மாறின. ஆன்மா விகசித்தது. விலை யுயர்ந்த கவுன்களும், தொப்பிகளும், மேஜோடுகளும், ஸ்லிப்பர்களும் அணிந்து அநுபவித்த பெரிய அட்மிராலின் அருமை மகள்—ஆங்கில மங்கை—சாதாரண எளிய வாழ்வினராய்—உலகம்போற்றும் உத்தமரின் வளர்ப்புக் குழந்தையாய்—சிஷ்யையாய்—இந்தியப் பெண்மணியாய்—மிகுந்த பயிற்சி யுடையராய்—நமது மீராபாய் ஆகிவிட்டார். மறு பிறவி எங்கேயோ இருக்கிறது என்று கேள்விப்படுகிறோம். ஆனால் எவ்வாறு இருக்கும் என்பதற்கு அம்மையாரின் வாழ்வு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. மில்டன் "We can make hell of heaven, heaven of hell" "நரகத்தைச் சுவர்க்கமாகவும், சுவர்க்கத்தை நரகமாகவும் செய்துகொள்ளும் சக்தி நமக்குள் இருக்கிறது" என்றார். அது இவ் வம்மையாருக்கு நன்கு பொருந்துகின்றது. மேனாட்டில் தாம் பிறவி எடுத்தமைக்கு ஏதோ பாவம் செய்திருக்க வேண்டும் என்றார் அம்மையார். போக போக்கியங்கள்—தந்தையார் உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பதால் அதிகாரபலம்—வெள்ளை நிறமா யிருப்பதில் ஒரு அகங்காரம்—ஆதிக்கம்--எல்லாம் இருந்தும் மனச் சாந்தி இல்லாமற் போய் விட்டது! விடுதலைக்குரிய நன்னெறி காண முடியவில்லை. வீடு சபர்மதி ஆச்சிரமம், தாய் தந்தையார் காந்தியடிகள், தாய்நாடு இந்தியா—இந்நிலை சுவர்க்கமாகத் தோன்றுகிறதாம் அம்மையாருக்கு! வாழ்வின் உயரிய நோக்கம் கண்டுபிடித்து விட்டார். ஆச்சிரமத்தில் அம்மையாருக்கு வேலைக்காரர் இல்லை. வெள்ளைக்காரர்களும், நம்மவரிற் சிலரும் "உண்பதற்கே வாழ்" (Live to eat) என்னும் முறையைக் கடைப்பிடித் திருக்கின்றனர். ஆனால் அம்மையார் "வாழ்வதற்கு—அதாவது தேவையான அளவு உண்க" (Eat to live) என்னும் தத்துவத்தைக் கடைப்பிடிக்கத் தொடங்கிவிட்டார். ஒரு சந்நியாசிக்கோலம் பூண்டிருக்கிறார். பழைய ஆசாரமுள்ள பிராமண விதவையைப் போல் தலையை முண்டனம் செய்து கொண்டிருக்கிறார். ராட்டினம் சுழற்றுகிறார். காந்தியடிகளுக்குப் பாத பூஜை செய்து கீதாபாராயணம செய்கிறார். ஆச்சிரமத்தில் முதலாண்டில் ஆன்மார்த்த சம்பந்தமான உபதேசங்கள்—பாராயணங்கள் முதலியவை போதிக்கப் பெற்றார் இரண்டாவதாண்டில் ஹிந்தி மொழியில் புலமை அடைந்தார். மூன்றாவதாண்டில் பட்டை போடல், நூல் நூற்றல் முதலிய தொழில்களில் தேர்ச்சி அடைந்தார். இங்ஙனம் மூன்றாண்டுகள் ஆச்சிரமத்தில் பயிற்சிபெற்ற பின்னரே, தொண்டாற்றத் தகுதி வாய்ந்தவராய் வெளியில் கிளம்பினார். தேசத் தொண்டாற்றுகின்றவர்கள் இவ் வம்மையாரிடமிருந்து எத்தனைப் பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றன! மூன்றாண்டுகள் சிக்ஷைபெற்ற பின்னரே வெளியில் வந்திருக்கிறார். இந்தியாவுக்கு வந்த பிறகு எங்கும் சொற்பொழிவுகள் நிகழ்த்தச் செல்லவில்லை. பின்னர் இராஜபுனத்தில் பெண்களுக்குள் கதர்ப் பிரசாரம் செய்யும் பொருட்டு காந்தியடிகள் அனுப்பினார். அங்கே ஒட்டகங்களின் மீதேறி கிராமங்களில் சுற்றுப் பிரயாணம் செய்தும், ராட்டினங்கள் வைக்க ஏற்பாடு செய்தும்—அரிய ஊழியம் புரிந்தார். நமது தாய் நாட்டுக்கு வேண்டியவர்கள் இத்தகைய உண்மைத் தொண்டர்கள் அன்றோ? ஸ்வாமி விவேகா

எவருடைய பெருமையும் அவர்கள் இறந்த பிறகுதான் வெளியாகிறது.

னந்தர் ஒரு ஆங்கிலப் பெண்மணியை ஆகர்ஷிக்கும் ஆற்றல் வாய்ந்து, அ அம்மை தமது வாழ்நாளை நமது தாய்நாட்டுக்குச் சமர்ப்பணம்செய்யுமாறு செ திருந்தார். அந்த அம்மைக்கு இந்தியா முக்தி அளித்தது. அவர் தமது வாழ் இந்தியாவுக்கு அளித்தார். அவரது திருநாமம் சகோதரி நிவேதித! இ பொழுது மகாத்மா காந்தியடிகள் சகோதரி மீராபாய் அம்மையாரை ஆகர்ஷி திருக்கிறார். காந்தியடிகள் வாழ்க! மீராபாய் வாழ்க! சகோதரி மீராபா அம்மையார் இந்தியாவே சுவர்க்கம் என்று எண்ணுகிறார்! காந்தியடிகளே மோக்ஷம் என்று நம்புகிறார். இதற்காக அவ்வம்மையார் இப் புண்ணிய பார பூமிக்கு ஆத்மார்ப்பணம் செய்திருக்கிறார். ரெவரண்ட் ஆண்ட்ரூஸ் அவர்க இதுபோலவே தமது சக்தி புத்திகளை யெல்லாம் நமது தாய் நாட்டுக்கு தானம் செய்துவிட்டார். ஆஹா! நமது பாரத மக்களேயன்றி பிறநாட்டு மக்க ளும் அரிய தியாகம் செய்கின்றனரே! எத்துணை அருமை; இன்னும் எத்து ணைக்காலம்—எத்துணை மக்கள் இவ்வாறு தங்கள் உடல் பொருள் ஆவிகளை அர்ப்பணம் செய்ய வேண்டுமோ?

குறிப்பு:—சகோதரி மீராபாய் அம்மையார் காந்தியடிகள் சிறை சென்ற பின் நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து தமது அரிய—உணர்ச்சியுள்ள—சொற்பொழிவுகளின் வாயிலாக மக்களைத் தட்டி எழுப்பி வருகிறார்.




நோயாளி:—"டாக்டர் சொன்னார்—நீங்கள் என்னை ஒரு தாயாரைப் போல் பார்த்துக்கொள்ள வேணுமென்று"

நர்ஸ்:—"நான் அப்படி இல்லையா என்ன?"

நோயாளி:—"இல்லையே! இரவில் நான் கஷ்டப்படும்போது தாயா யிருந்தால் முத்தம் கொடுப்பாளே!"

# பாரதியாரும் அவர் பாடலும்

(அகரம். வீ. கிருஷ்ணஸாமி எழுதியது.)

நந்தமிழ் நாடு நல்லிசைப் புலவர்கள் பல்லோர் தோன்றுதற்கு இருப்பிடமென்னும் பண்டைப் புகழ் குன்றுவண்ணம்—அத்தகைய கவிஞர்களோ, புலவர்களோ இந்நாளில் தோன்றவில்லை யென்னும் சொல்லை அடித்தோட்ட, சமீப காலத்திலே செந்தமிழ் நாட்டில் தோன்றி அச்செம் மொழியிலே சுவை கெழுமிய பாடல்கள் பல வியற்றிப் பணியாற்றி மறைந்த வர் சுப்பிரமணிய பாரதியார் என்பது தமிழுலகம் நன்கறியும்.

பாரதியார் பாடல்களில் இவரது அருங்குணங்கள் பலவினிலும் சிறந்த தாகிய கவிதாசக்தி, சுதந்தர தாகம், மாற்றலரை வாயடக்கும் ஆற்றல், புத்திக் கூர்மை, இயற்கை எழில் கண்டின்புறல் முதலிய பல மிளிர்கின்றன. இவை களால் இப்புலவரது புகழ்மணம் தமிழக முழுவதும் பரவியது. பிறிதுல கும் சிறிதறிய நேர்ந்தது. இவ்வரிய ஆற்றல்களைக் காலப் போக்கிற்குத் தக்க வாறு சாலவும் உபயோகித்த உத்தம விலக்கணம் உயர் கவிஞர் நம் பாரதியா ருக்கே பொருந்துவ தாகும். அவர், மக்கள்தம் மனநிலையினை நன்கு கவனித் தார். தொன்மை முறைகள் இக்காலத்திற்குப் பயன் நல்காவென நன் குணர்ந்தார். பெரும்பயன் அளிக்கும் வழி, புது முறை காணுதலே எனக் கண்டார்.

அஃதாவது என்னை? எளிய நடையில், எளிய பதங்களால் எளிய உவ மைகளுடன் தம்மனத்திற் றோன்றும் பொருண்மைக் கேற்றவாறு இடத்திற் குத் தக்க யாப்புட னமைத்த திறனே. அத்திறனே அவர் கவி நயங்களில் ஒன்றாய்க் கனிந்திலங்குகிறது. அஃதே தமிழிலக்கியத்திற்கும் மறுமலர்ச்சி அளித்தது. உண்மைக் கவிஞர் தம்மனத்திற் றோன்றும் உண்மை உணர்ச் சியை அதே அளவில் பிறர் உள்ளத்திலும் உதிக்கச் செய்யவும், அவ்வுணர்ச்சி யில் தாம் கண்ட உண்மையைப் பிறரும் அவ்வளவிலே காணுமாறு செய்யவும் தக்க வன்மை உள்ளார் என்பது ஊன்றி நோக்குவார்க்குப் புலனாகும்.

பாஞ்சாலி சபதத்தில்,

"சீரிய நண்பன் கண்ணன் கழலாணை
காத்தடங் கண்ணி யெந்தேவி—அவள்
கண்ணிலும் காண்டிவ வில்லினுமாணை"

என்ற விஜயனது சூளுரையில், ஆழ்ந்திருக்கும் பொருட்சுவையுடன் இவ்வடி களின் எளிய பதங்களின் அமைப்பும் கவனிக்க. முன்னே கண்ணன் கழ லாணை, பின் பாஞ்சாலியின் கண்ணில் ஆணை, இறுதியில் காண்டிவத்தில் ஆணை

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" சான்று பிரகலாதாழ்வார் மார்க் கண்டேயர் சரிதமாகும்.

என்றார். என்னே இப்பொருளாழம்! வெற்றித் தருவது கடவுள். அறநெறி உய்ப்பவள் இல்லக் கிழத்தி. அவ்வற நெறி சென்று வெற்றிபெற அருந்துணையாய் இருப்பது ஆன்ம சக்தி. (கடவுள் தந்த காண்டிவம். தர்ம யுத்தத்திற் உபயோகப்படுத்த). ஆதலின் அர்ச்சுனன் ஆணை மொழிகளில் நிறைந்த பொருள்—ஆண்டவன் (கடவுள்) துணை, தேவி அறங்காட்டுவாள், தெய்வம் வெற்றி அளிக்கும் என்பதாகும். இக்கருத்தை எத்துணை எளிய மொழிகளில் அமைத்திருக்கிறார்! வீரரசமும் சோகரசமும் ததும்பும் இப் பாஞ்சாலி சபதத்தில், திருதராஷ்டிரன் பாண்டவரைச் சூதுக் கழைத்துவரும்படி விதுரனிடம் கூறியவுடன், 'நடுநிலை தவறா ஞானியாம்' விதுரன்,

> "போச்சுது! போச்சுது! பாரதநாடு!
> போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்!
> ஆச்சரியக் கொடுங்கோ லங்கள் காண்போம்!"

என்று கூறுவதையும், விதுரன் பாண்டவர்தம் பதிக்குச் செல்லும் வழியிலே,

> பாரதர்தந் நாட்டினிலே நாசமெய்தப்
> பாவியேன் துணைபுரியும் பான்மை என்னே"

என்றும் கூறியிரங்குவதையும் நோக்குவார்க்கு எழில் நலங்கனிந்த இந்திய நாட்டின்மீது அன்பும் ஆர்வமும் பெருகாமலிராது. இவ்வாறு பொருளாழம் ததும்பும் பாடல்கள் பல.

ஆன்றோர் கருத்தை அழகுற—புதியதோர் ஒளி தந்து அவைகளைப் பலவிடங்களில் உபயோகித்துள்ளார். எளிய உவமைகளால் பொருள் விளங்க வைத்துள்ள விடம் பலவெனினும் அவைகளில் ஒன்றே ஈண்டு நோக்குவோம். பார் புகழும் தேவி பாஞ்சாலியை மாயச் சூதாட்டிற்கு மாபெரும் பணயமாக வைக்க மாமன் சகுனி சொன்னவுடன் 'கெடுமதி நிறைந்த' துரியோதனன் அடைந்த ஆனந்தத்தை உவமித்து அமைத்திருக்கும் முறை உள்ளுவார் தமக்கு உவகை அளிப்பதாகும்.

> "நன்று நன்றென்று சுயோதனன்—சிறு
> நாயொன்று தேன் கலசத்தினை—எண்ணித்
> தின்று முவகையில் வெற்று நா—வினைத்
> தோய்த்துச் சுவைத்து மகிழ்தல் போல்"

என்றார். இதுபோல் பல எளிய உவமைகளினால் அரிய விஷயங்களை நன்கறியச் செய்துள்ளார்.

இனி இவ்வருமையான பாடல்கள் செய்தருளிய பாவலர் தம் மொழிப் பற்றையும் தேசப்பற்றையும் சிறிது ஆராய்வோம்.

> 'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்
> தேன்வந்து பாயுது காதினிலே'

என்ற ஒப்பற்ற அடிகளை உற்று நோக்குக. இவ்வடிகளினின்றும் செவ்விய ஓசையும் கருத்தும் செவிக்குச் செல்லுதல் சிந்திக்கத் தக்கதாகும். பின்னே

---

தெரியாதவர்களிடமும் நாம் மரியாதையாய் நடந்துகொண்டால் அவர்களும் நம்மிடம் மரியாதை காட்டத் தவறுவதில்லை.



> 'எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
> சக்தி பிறக்குது மூச்சினிலே'

எனும் அடிகளும் ஓர் சக்தியை அளித்து உற்சாகப்படுத்துதல் தெரிந்ததே.

> 'வள்ளுவன் தன்னையே உலகினுக்குத் தந்து
> வான்புகழ் கொண்ட தமிழ் நாடு'

என்றார். உள்ளுவார்க் கமுதாம் வள்ளுவர் குறள் எம்மதத்தினரும் சம்மதத்துடன் ஏற்கப் பொதுவாய் விளங்குந் தன்மை கண்டு ஒவ்வொரு நாட்டினரும் இப் பொய்யா மொழியைத் தத்தம் மொழிகளில் மொழிபெயர்த்திருக்கும் தன்மை தமிழ்நாட்டிற்கே ஓர் பெரும் புகழ் தருவதாயிருக்கிறது. இங்ஙனம் பொன்னிலுஞ் சிறந்த மதிப்பில்லா மாணிக்கத்தை உலகினுக்குத் தந்த வள்ளுவனாரை சிறப்பித்தார் நம் பாரதியார்.

பாரதியாரது பாஷாபிமானமும், தேசப்பற்றும் அவரது பாக்களில் பலவிடங்களிலும் கனிந்து ஒழுகுகின்றது.

> "சிறந்து நின்ற சிந்தையொடு தேய நூறு வென்றிவள்
> மறந்த விர்ந்தந் நாடர்வந்து வாழி சொன்ன போதினும்
> இறந்து மாண்பு தீரமிக்க வழ்மை கொண்ட போழ்தினும்
> அறந்தவிர்க் கிலாது நிற்கும் அன்னை வெற்றி கொள்கவே."

***

> "அறுபது கோடி தடக்கை களானும்
> அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
> செறுவது நாடி வருபவரைத்துகள்
> செய்து கிடத்துவள் தாய்"

என்று பாரத நாட்டிற்கு ஜெய வாழ்த்துக் கூறுகிறார். பின்னும் தமிழ்மொழி வளர்ச்சி வேண்டுமென்றும் அதற்காக,

> "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
> மொழியிற் பெயர்த்தல் வேண்டும்;
> இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
> மொழியில் இயற்றல் வேண்டும்;
> மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
> சொல்வதிலோர் மகிமையில்லை;
> திறமான புலமையெனில் வெளி நாட்டோர்
> அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்."

என்றும் வெகு செவ்வையாய்ச் சொல்லியுள்ளார். மீண்டும் தமிழன்னை தமிழ் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுவதாய்க் கூறும் பாடல்களில்

---

கல்வி அறிவு தரும், கற்பை நிலை நிறுத்தும், இல்வாழ்விற்கு ஏற்ற இசையெல்லாம் சொல்விக்கும் ஆதலால் பெண்களுக்குக் கல்வி அவசியம் போதிக்கப்படல்வேண்டும்.

"புத்தம் புதியகலைகள்-பஞ்சபூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே-அந்த மேன்மைக்கலைகள் தமிழினில் இல்லை"
"சொல்லவுங் கூடுவதில்லை—அவை சொல்லுந்திறமை தமிழ்மொழிக்கில்லை;
மெல்லத்தமிழினிச் சாகும்—அந்த மேற்குமொழிகள் புவிமிசை யோங்கும்"
"என்றந்தப்பேதை யுரைத்தான்-ஆ! இந்த வசையெனக் கெய்திடலாமோ!
சென்றிடுவீ ரெட்டுத்திக்கும்-கலைச்,செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்குச்
[சேர்ப்பீர்"

என்று வருத்தத்துடனும் கோபத்துடனும் தமிழறிஞர்களை வேண்டுகின்றார். இன்னோரன்ன பல பாக்களில் அடக்க முடியா தன்பினை வெளியிடுகின்றார் என்பது தெளிவாகும். தமிழன்னைக்குத் தமிழறிஞர் செய்யவேண்டுவது இப்பணியே. இத்தகைய தாய்மொழிப்பற்றும் தாய்நாட்டன்பும் சுதந்தர உணர்ச்சிக்குக் காரணமாகின்றன என்று யான் கூறவும் வேண்டுமோ! இப்பற்றே சுதந்தரதேவியின் திருத்தாள்களி லடிபணியச் செய்கின்றது.

"நின்னருள் பெற்றிலாதார் நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங்கல்வி கேள்வி படைத்துயர்ந் திட்டாரேனும்
பின்னரும் எண்ணிலாத பெருமையிற் சிறந்தாரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம் அணிகள் வேய்பிணத்தோ டொப்பார்
தேவி! நின்ஒளி பெறாத தேயமோர் தேயமாமோ
ஆவியங்குண்டோ? செம்மை அறிவுண்டோ? ஆக்கமுண்டோ?
காவியநூல்கள் ஞானக்கலைகள் வேதங்களுண்டோ
பாவியரன்றோ நின்றன் பாலனம் படைத்திலாதார்?

என்று சுதந்தரதேவியை வணங்கும் முறையும் சுதந்தரத்தின் பெருமையும் யாவரும் போற்றத் தக்கதே.

ஓவியவல்லோனும் காவிய வல்லோனும் ஒன்றில் ஒருமைப் படுகின்றனர். அஃதாவது ஓவியன் தான்காணும் இயற்கைப் பொருளுருவின் திறங்களைப் பலவகை நிறங்கொண்டு துகிலிகையால் அழகுபெறக் கிழியில் தீட்டிக் காட்டுகின்றான். காவியம் செய்யும் கவிஞனும் அவ்வியற்கைப் பொருளுருவின் திறங்களை தன் கற்பனாசக்தி, சொல், இசை, முதலியவைகளால் தம் பாட்டுக்களில் கனிந்து தோன்ற எடுத்துக் காட்டுகின்றான். பாரதியார் அங்ஙனம் இயற்கைப் பேரெழிலில் ஈடுபட்டின்புற்றா ரென்பது அவர்பாக்களில் பெரிதும் தெரியக் கிடக்கின்றது.

கானப்பறவை கலகலெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடைக் காட்டுமிசைகளிலும்
ஆற்று நீரோசை அருவியொலியினிலும்
நீலப்பெருங் கடலெங் கோரமுமே தானிசைக்கும்
ஓலத்திடையே யுதிக்கு மிசையினிலும்
...............
நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்

என்னும் பாட்டும்



தங்கமுருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பிய தோர்இங்கிதமோ?
சோதிகவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ
கண்ணையினி தென்றுரைப்பர் கண்ணுக்குக் கண்ணாகி
விண்ணை யளக்குமொளி மேம்படுமோ ரின்பமன்றோ
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தைசெய்யும்
மேலவரும் அஃதோர் விரியுமொளி யென்பாரேல்
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை யொப்புளதோ?
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி விந்தைசெயும் ஜோதிதனைக்
காலைப்பொழுதினிலே கண்விழித்து நான் தொழுதேன்.

என்னும் பாட்டும் மேற்கூறியதற்குப் போதிய சான்றாகும். ரசம் சொட்டும் கவிதையானமைந்த குயிற்பாட்டின் நயம் ஆராய்ந் தின்புறத்தக்கது.

வீரகவியாக விளங்கிய பாவலர் பாரதியாரின் பாடல்களில் ஒவ்வொரு இடத்தும் வீரரசம் பொங்கித் ததும்புதல் நோக்கத் தக்கது. இக்கவிகள் உணர்ச்சியற்ற மனிதனையும் உண்மை மனிதனுக்கும் உயரிய சக்தி படைத்தன வாகும்.

பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளைகொண்டு
போகவோ?—நாங்கள் சாகவோ?
அழுது கொண்டிருப்போமோ? ஆண்பிள்ளை
அல்லமோ? உயிர் வெல்லமோ?

இப்பாட்டு எத்துணைச் சக்தி அளிக்கும் என்பது சொல்வதற்குத் தக்க சொற்களே இல்லை என்று சொல்லலாம். 'பாஞ்சாலி சபதத்'தினின்றும் ஓர் உதாரணத்துடன் இவ்வங்கத்தை முடிக்கிறேன். பாஞ்சாலியைத் துரியோதனன் தன் இளையோன், குழல்பற்றிச் சபைக்கிழுத்து வரும் வழியில் ஊரிலுள்ளோர் கண்டு 'என்ன கொடுமை' யிதுவென்று பார்த்திருந்தார். அப்பெண்ணணங்கைத் துஷ்டன் துச்சாதனனிட மிருந்து விடுவியாது வாயிரக்கம் மட்டும் காட்டிக்கொண்டிருந்தனர் அம்மக்கள் எனக் கூறும் பாக்களை ஊன்றி நோக்குவார்க்கு, வீரம் செறிந்த அவரது நெஞ்சப் பான்மையும் நீதிக்குழைத்தல் என்னும் உயரிய நெறியும் தெரியும். அப்பாக்களில்

'வீரமிலா நாய்கள் விலங்கா மிளவரசன்
தன்னைமிதித்துத் தராதலத்திற் போக்கியே
பொன்னை யவளந்தப் புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென நின்று புலம்பினார்
பெட்டைப்புலம்பல் பிறர்க்குத் துணையாமோ?'

றார். இதிலிருந்து பேச்சு அன்பில் வெறுப்புற்றவர் என்பதும் உண்மையுடன்கூடிய அனுஷ்டானமே வேண்டுபவர் என்பதும் விளங்குவ தாகும்.

"தனியொருவனுக் குணவிலை யெனில் ஜகத்தினை அழித்திடுவோம்"

என்பதையும் நோக்குக. பாரதியாரது உள்ளத்தின் உணர்ச்சியை உள்ளங்கை நெல்லிக்கனியென்ன அவரது பாக்களில் காணலாம். பாரதநாட்டின் பண்டைப் பெருமையை மனத்திருத்தித் தற்கால வுலகிற்கேற்ப, அதைப் புகழெய்தல் செய்யவேண்டுமெனும் பேரவாவும், பல்வகைக் கைத்தொழில்களும் செய்து, பாரினில் சிறந்தது பாரதநாடு எனப் பகருவோம் எனும் கருத்துக்களும் அடங்கிய பாக்கள் படித்தின்புறற் பாலன.

'வெள்ளிப்பனிமலையின் மீதுலவுவோம்—அடி
மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்
எங்கள் பாரததேசமென்று தோள்கொட்டுவோம்.
*　　*　　*　　*
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்.
*　　*　　*　　*
காவியஞ் செய்வோம் நல்லகாடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம் நல்லஊசிகள் செய்வோம்
உலகத்தொழி லனைத்தும் உவந்து செய்வோம்'

என்று வீர உற்சாகத்துடன் கர்ஜ்ஜனை செய்கிறார் பாரதியார்.

பாரதியார் இத்துடன் இளைஞர்களுக்கும் குழந்தைகளுக்கும் அறிவூட்டும் முறையில் செய்துள்ள, 'புதிய ஆத்திசூடி'யும், பாப்பா பாட்டும்-இனிது இனிது என்றே கூறி நிறுத்துவோம். அதில்,

'பாதகஞ் செய்பவரைக்கண்டால்—நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா' என்றார்.

பாரதியார் 'பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி' எனும் தலைப்பீந்து பாடியுள்ள பாக்கள் அவருடைய பணிவுடன்கூடிய உள்ளன்பின் உருவத்தை எடுத்துக் காட்டுகின்றன.

இங்ஙனம் பாக்களில் வந்துள்ள பன்னயங்களையும் பகுத்துக் காட்டுதல் விரிவுக் கிடங்கொடுக்கும். இச்சிறு கட்டுரையில் வந்துள்ள சில நயங்களை போல், அவரது பாடல்களையும் மற்றும் உரைநடை நூல்களையும் ஊன்றி நோக்கி ஆழ்ந்து சிந்திப்பார்க்கே பாரதியார் அமைத்துள்ள பொருள் நுட்பங்களும் சீரிய கருத்துக்களும் உயரிய லட்சியங்களும் அவ்வுணர்ச்சியுடன் கூடிய அடிகளில் புலப்படும். மற்றோர் அவர்தம் பாடல்களை வெள்ளைப்பாக்கள் என்று கூறலாம். ஆனால், அவைகள் எல்லாம் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் உயர்ந்த இனத்தைச் சேர்ந்த பாக்களாகும் என்பதே எனது கருத்து.

---

அநேகர் பிரயாசையோடும் அதிகப் பொருட் செலவோடும் கல்வி கற்றிருக்கிறார்கள். ஆனால் அது யாருக்கும் பிரயோஜனமற்றதாக நடந்துகொள்வது பெரும் பேதமையாகும்.

லைப் அஷ்யூரென்ஸ் என்கிற

# ஜீவிய ஊர்ஜிதம்.

(இன்ஷியூரென்ஸ்.)

இக்காலத்தில் நமது தேசத்தில் இன்ஷியூரென்ஸ் கம்பெனிகள் அனேகம் வழங்கி வருகின்றன. இக்கம்பெனிகளை ஜனங்களுக்கு அறிமுகப்படுத்திவரும் ஏஜெண்டுகள் அநேகரையும் நாம் அறிவோம். மேனாடுகளில் இக்கம்பெனிகள் அத்தியாவசியமாய்ப் பாராட்டப்பட்டு வருகின்றன. இக்கம்பெனிகள் செய்யும் வியாபாரம் என்ன? லைப் இன்ஷியூரென்ஸ் என்பது என்ன?

லைப் அஷ்யூரென்ஸ் பொதுவாகப் பணம் சேர்த்துவைக்க வசதியான ஒரு முறையென்று சொல்லலாம். பணம் சேர்த்துவைக்க அநேக முறைகள் வழங்கி வருகின்றன. பணத்தைப் பெட்டியில் பூட்டி வைக்கலாம்; நகைகளாகச் செய்துவிடலாம்; நிலங்களாக மாற்றிவிடலாம்; வேண்டுவோருக்குக் கடன் கொடுக்கலாம்; வியாபாரத்தில் உபயோகிக்கலாம்; கோவாபரேடிவ் நிதிகளில் பங்குகள் எடுத்துக்கொள்ளலாம் அல்லது பாங்குகளில் கட்டிவைக்கலாம். இவைகளை முறையே கவனிப்போம்.

பெட்டியில் பூட்டி வைத்திருக்கும் பணம் வளராது. செல்வம் சென்றுகொண்டே யிருந்தால்தான் அழகு. தற்காலத்தில் உலகமெங்கும் பணமுடையாக இருப்பதன் காரணம் சில தேசங்கள் தங்களிடத்தி லிருக்கும் தங்கத்தை வெளியிடாமல் பத்திரப்படுத்தி யிருப்பதுதான் என்று பத்திரிகைகளில் படிக்கிறோம். அன்றியும் பெட்டியில் வைத்திருந்தால், முதல் கரைந்து நாளடைவில் உண்ண உடுக்கப் போதுமான பொருளில்லாமல் போய்விடும்.

நமது தேசத்தில் ஸ்திரீகள் நகைகளை அபரிமிதமாகச் செய்து போட்டுக்கொள்வது சகஜமாக யிருக்கிறது. ஏனெனில் நகைகள் அணிந்துகொண்டிருக்கும்போது தங்கள் உத்தரவன்னியில் அவைகளை விற்க ஒருவருக்கும் முடியாதென்று ஸ்திரீகளுக்குத் தைரியம். ஆயினும் நகைகள் தேய்ந்து மதிப்புக் குறைந்து விடுகின்றன.

நிலங்களாக மாற்றுவதில் நம் நாட்டு ஜனங்களுக்குப் பிரமை யதிகமாயிருக்கின்றது. ஸ்தாவரப் பொருள் என்றால் எல்லோருக்கும் திருப்தியாகவிருப்பது நியாயம். ஆயினும் நிலங்களும் நாளடைவில் மதிப்புக் குறைவதை நாம் பார்க்கிறோம். வீடுகளும் இப்படியே. மேலும் ஆற்றோரங்களில் இருக்கும் பூமிகளே அதிக பலிதம் தரக் கூடியவை. ஆனால் ஆறுகள் பெருக்குற்றால் நிலங்கள் எல்லாம் பாழாய் விடுகின்றன.

கடனுக்குப் பணம் கொடுத்து அனேகர் ஜீவிக்கிறார்கள். நூற்றுக்கு 12, 18, 20 ரூபாய் வட்டியும்கொடுக்க அனேகர் சித்தமாக இருக்கிறார்கள்.

பொதுவாக வட்டி அதிகம் கொடுக்கத் தயாரா யிருப்பவருக்குப் பணம் அதிக அருமை யென்பது நிச்சயம். அப்படிப்பட்டவர் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயன்றவரையில் கஷ்டப்பட்டாலும் கூடாமல் போகிறது. அனேகர் கடன் கொடுத்தவர் தொல்லையைப் பொறுக்கமாட்டாமல் சர்க்கார் ஆதரவைப் பெறத் தீர்மானித்து விடுகிறார்கள். அப்படி இன்ஸால்வெண்டு பத்திரம் தயாரித்த பிறகு கொடுத்த பணத்தில் ஒன்றிற்குக் கால் வருவதும் சிரமந்தான். ஆகையால் கடன் கொடுத்துப் பணம் சம்பாதிக்க எண்ணுவது அபாயகரமானது. அன்றியும் பணத்தை யெல்லாம் வட்டிக்குக் கொடுத்துவிட்டால் தன்னுடையதென்று கொஞ்சத் தொகையும் இல்லாமல் போய்விடுகிறது.

வியாபாரத்தில் பணத்தை யெல்லாம் செலவழித்து அனேகர் பொருள் சம்பாதிக்கிறார்கள். வியாபாரத்தில் லாபமும் நஷ்டமும் மாறி மாறி வரக்கூடும். லாபமே வரும் என்று சொல்வதற்கில்லை. ஒருசால் நஷ்டம் நேரிட்டால் எப்படித் தம் குடும்பத்தைப் பாதுகாப்பார்கள்? உன்னத ஸ்திதியிலிருப்பவர் அநேகர் எளிய நிலையை அடைகிறார்கள் என்பது கண்கூடு. இவர்கள் சிறிது முன்ஜாக்கிரதையாக விருந்து சிறிது பணத்தையாவது வியாபாரத்தில் ஈடுபடுத்தாமல் வைத்திருந்தால் ஆபத்துக் காலத்தில் உதவியாயிருக்கும். ஆகையால் பொருளை யெல்லாம் வியாபாரத்தில் உபயோகப்படுத்துவது தவறு.

கோவாபரேடிவ் சங்கங்களில் பங்குள்ளோருக்குக் கடன்வாங்க வசதியாக இருக்கும். முக்கியமாக இந்தச் சாதனத்தைத் தவிர வேறொன்றும் இம்முறையிலிருப்பதாகத் தெரியவில்லை.

நிதிகளில் பொருள் சேர்த்து வைப்பது நன்மையான முறை. வேண்டும் போது பணம் பெற்றுக் கொள்ளலாம். ஆயினும் வாரத்தில் ரூ. 100-க்கு மேல் வசூலிக்க முடியாது. தொகை அதிகமாக இருந்து ஏக காலத்தில் வேண்டுமென்றிருந்தால் மூன்று மாதத் தவணை கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். சாதாரணமாக நிதிகள் ஸ்திரமாகவே யிருக்கின்றன. இருந்த போதிலும் காரணமின்றி நிதியைக் குறித்து ஏதேனும் ஒரு வதந்தி கிளம்பிவிட்டால் ஜனங்கள் ஓடோடியும் சென்று தாம் கட்டியிருக்கும் பணத்தைத் திருப்பிக் கேட்பர். இதனால் ஸ்திரமான நிதியும் நிலைகுலைந்துவிடும். பொருள் நம் கைக் கெட்டாததாக யிருந்தா லொழிய சேர்த்துவைத்த பொருள் சீக்கிரத்தில் ஏதாவதொரு முகாந்தரத்தைக்கொண்டு வெளியாகிவிடும்.

மேற்கூறிய முறைகளின் பாதகங்களை யெல்லாம் தவிர்த்துச் சாதகங்களை மாத்திரம் திரட்டி இவைகளைத் தவிர இன்னும் சில வெகு அத்தியாவசியமான அனுகூலங்களுடன் கூடிவிளங்கும் திவ்ய முறைக்கே லைப் இன்ஷியூரன்ஸ் என்று பெயர். இதன் அம்சங்களைப்பற்றி அடுத்த கட்டுரையில் ஆராய்வோம்.

தொடரும்

[குறிப்பு:—லைப் இன்ஷியூரென்ஸைப்பற்றி விவரமாக அறிய விரும்புவோர் ஆனந்தபோதினி வாரப்பதிப்பில் வெளியாகும் கட்டுரைகளைப் படிக்கலாம்.]

---

படித்த அறிவாளர் பலர் சாப்பாட்டுக்கில்லாது தயங்குகிறார்கள். கொடுத்தாதரிப்பார் யாருமில்லை. பிரசங்கம் செய்வதற்குக் கைம்மாறு நீண்ட வரவேற்பு பத்திரமே தரப்படுகிறதாம்.

# கனவின் பலன்

(வி. சங்கா ஐயர்.)

(590-ம் பக்கத் தொடர்ச்சி)

18. கண்ணாடியைக் காண்பது அசுபம், குடும்பக் கலகம் ஏற்படும்.

19. பழைய பாதரட்சை அணிவதாகக் கனவுகண்டால் தரித்திரம்.

20 (a) சதுரங்கம் ஆடுவதாகக் கனவுகண்டால் கலகம்.

(b) சூதாடுவதாகக் கனவு கண்டால் நஷ்டம்.

(c) சங்கீதம் தான் பாடுவதாகக் காண்பதால் சிந்தையும் விசாரமும் உண்டாகும்.

21. கனவிற் பசியினால் வருந்துவது கெடுதி.

22 (a) தான் அன்னமுண்டதாகக் கனவு கண்டால் குடும்பத்தில் கலகம் ஏற்படும். வியாபாரத்தில் நஷ்டமுண்டாகும்.

(b) அன்னம் உண்ணுவதாகக் கண்டால் பந்துக்கள் நாசம்.

23 (a) தாகத்தினால் வருந்துவதாகக் கனவிற் கண்டால் மனோ ஆத்திரம் உண்டாகும்.

(b) அழுக்கு ஜலம் சாப்பிடுவதாகக் கனவு கண்டால் வியாதி.

24. விஷம் சாப்பிட்டதாகக் கனவு கண்டால் ஜீவனம் கெட்டுப் போகும், காரிய நாசம்.

25 (a) அன்னம் தான் சமைப்பதாகக் கனவு கண்டால் சேவகா விருத்தி ஏற்படும்.

(b) லங்கணங்கள் செய்வதாகவும் அவை தீர்ந்து போவதாகவும் கனவு கண்டால் சினேகிதர்களுக்குக் கெடுதி.

26 (a) பால் தயிர் இவைகளை எடுத்துப் போகும்போது தவறி வீழ்ந்ததாகக் கனவு கண்டால் க்ஷீணதசை ஏற்படும்.

(b) மோர் குடிப்பதாக கனவு கண்டால் தனக்குள்ள தனத்திற்குமேல் அபிவிருத்தி யில்லை.

27. இலை கீரைகளைக் கண்டால் வியாதி.

28. காய்களைத் தான் சமைப்பதாகக் கனவு கண்டால் தான் நம்பியிருக்கும் சினேகிதர்கள் மோசம் செய்வார்கள்.

29. வெல்லம் சருக்கரை முதலிய தித்திப்புப் பதார்த்தங்களைத் தின்றால் வறுமை.

---

சிறு வயதில் தாலியை இழந்த ஒரு பெண்ணுக்குத் தன் கற்பை எப்படிக் காப்பாற்றுவது என்பது தெரிவில்லையாம்? ஆண்மகனோ தன் மனைவி உயிர் நீத்தவுடன் புது மனைவி தேடிவிடுகிறான்.

30 (a) கிச்சிலி, பலாக்காய், நாரத்தங்காய் முதலிய காய்களையும் பழங்களையும் தின்றதாகக் கனவு கண்டால் புண் சிரங்கு உண்டாகும். தனக்கு மற்றவர் பார்த்து கேலிபண்ணக்கூடிய நடத்தை யேற்படும்.

(b) எலுமிச்சம்பழத்தைத் தின்றதாகக் கனவிற் கண்டால் வீட்டில் கலகம் ஏற்படும்.

31. பழங்கள் பழுக்காத காலத்தில் பழுத்ததாகக் கனவு கண்டால் வியாதி.

32. மிளகாய், மிளகு, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, பெருங்காயம் முதலான கார வஸ்துக்களைச் சாப்பிட்டதாகக் கனவு கண்டால் தன் கீழ்ப் படிந்த வேலைக்காரர்களோடு கலகம்.

33. ஷை கார வஸ்துக்களை அரைத்துத் தின்றதாகக் கண்டால் வர்த்தகத்தில் நஷ்டம்—துர் அதிர்ஷ்டம்.

34. உப்பு, மோர், பருத்தி, தோல், விறகு இவைகளைக் கனவு காண்பது தீமை.

35. எள்ளைக் கண்டால் நெருங்கிய பந்துக்களில் மரணம் ஏற்படும்; தனக்குப் பொருள் நஷ்டம்.

36. சோளம் துவரை இவைகளைக் கனவிற் கண்டால் அம்மை வார்க்கும், அதனால் தொல்லை.

37. வியாதியில்லாதவர்கள் ஔஷதங்களைக் கனவிற் கண்டால் வியாதி.

38. கசப்பு, காரம், புளிப்பு முதலிய மருந்துகளைத் தின்றால் வீட்டில் விரோதம்.

39. தாம்பூலத்தைப் போட்டுக் கொண்டால் சிநேகிதர்களோடு விரோதம்.

40. கீழே சிந்திய வெற்றிலை பாக்குகளைப் பொறுக்கியதாகக் கனவிற் காணுவது கெடுதல்.

41. ஜாதிக்காயைப் பார்ப்பதால் ஜீவனத்தில் மாறுபாடு உண்டாகும்.

42. அனேக வஸ்துக்கள் நிறைந்த சந்தைக் கடைத் தெருவில் குதிரையேறிப்போய் அவ்விடத்தில் இறங்குவது கெடுதல்.

43. பக்ஷிகள் பறக்கமுடியாமல் ஆகாயத்தில் தவிப்பதாகக் கனவிற் கண்டால் ஐசுவரியவந்தர்களுக்கும் தரித்திரம் உண்டாகும்.

44 (a) பக்ஷிக் கூண்டுக்காகச் சாமான் அகப்படாம லிருந்தால் எண்ணிய காரியம் இல்லை.

(b) கூண்டில் முட்டைகள் குஞ்சுகள் இல்லாவிட்டாலும் பழுதான கூண்டாக இருந்தாலும் காரிய நாசம்.

45. தன்னுடைய வீட்டிலோ அல்லது வீட்டின் முற்றத்திலோ முட்டைகளோடுகூடிய பக்ஷிக் கூட்டை அல்லது அதிலிருக்கும் முட்டைகளை, குஞ்சுகளை எறிந்துவிட்டதாகக் கண்டால் தரித்திரம்.

---

லாகிரி வஸ்துக்களை நீங்கள் உபயோகித்து வருவீர்களானால் அதை நாளடைவில் விலக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இல்லையேல் நீண்ட ஆயுளைக் குறைவுபடுத்திவிடும்.



46. பறக்கத் தெரியாத, இரை உண்ணத் தெரியாத குஞ்சுகளுள்ள பக்ஷிக்கூண்டு அகப்பட்டதாகக் காணும் கனவின் பலன் வழக்கு ஏற்படும்; அதிலும் தோல்வி.

47. முட்டைகளைத் தான் தின்றதாகக் கனவானால் தரித்திரம்.

48 (a) காக்கையைக் கனவிற் பார்ப்பது காரியஹானி.

(b) காக்கை பறப்பதைப் பார்த்தால் துர் அதிர்ஷ்டம்.

(c) காக்கை கத்தினதைக் கேட்டால் கெடுதி.

(d) காக்கை தலைக்கு நேராகப் பறப்பதாகக் கண்டால் அற்ப ஆயுள்.

49. குருவி, நாரை, இவைகள் ஒன்றோடொன்று சண்டை போடுவதாகக் கனவு கண்டால் கஷ்டப்பிராப்தி.

50. தான் பறவையைப்போல் பறப்பதாகக் கனவு கண்டால் தான் இருக்கும் வீதியில் ஒருவருக்கு மரணம்.

51. குயிலைப்பார்ப்பது, அது கூவுவதைக் கேட்பது, அதிக சிரமத்தின் மேல் பொருள் நஷ்டத்தோடு தான் கோரிய ஸ்திரீ கிடைத்து சீக்கிரத்தில் அவள் துயரத்திற் காளாக்கிவிட்டுப் போய்விடுவாள். அல்லது தங்கள் கோரிக்கைகள் பலிப்பதாகத் தோன்றி நிஷ்பலமாய் நஷ்டமேற்படும். இது புருஷனுக்கு.

52. ஸ்திரீக்கு இவ்விதக் கனவானால் தன் கணவன் சிலகாலம் தன் பேரில் ஆசை நீங்கி அன்னிய ஸ்திரீயின்பேரில் ஆசையுள்ளவனாக இருப்பான்.

53. ஆந்தை வௌவால் இவைகளைக் கனவிற் பார்த்தால் பொருள் நஷ்டம், வியாதி, சிறை, அல்லது விரோதிகளுக்குப் பயந்து ஒளிந்திருக்க நேரிடும்.

54 (a) எறும்புகள் ஒழுங்கீனமாய் அங்கேயும் இங்கேயும் போவதாகக் கனவு கண்டால் பிரயத்தனங்கள் கெட்டு கஷ்டங்கள் ஏற்படும்.

(b) எறும்புகள் ஆகாரத்தைக் கடித்துக்கொண்டு போகும்போது இதர ஜந்துகள் அவைகளைத் தின்பதையாவது மிதிப்பதையாவது பார்த்தால் ஆபத்துக்கள் நேரிடும்.

(c) வியாதியஸ்தன் எறும்பைக் கண்டால் விசேஷ நாளாளொழிய வியாதி நிவர்த்தியாகாது.

55. கொசுக்கள், ஈக்கள், பாச்சி முதலிய இறக்கையுள்ள ஜந்துக்களை ஆரோக்கிய முள்ளவர்கள் கண்டால் ஆபத்து நேரிடும்.

56. ஈக்கள் தன் உடம்பு முழுவதும் மொய்த்துக்கொண்டு இருப்பதாகக் கனவு கண்டால் விரோதிகள் அதிகமாவார்கள். அல்லது மனைவி விரோதம் உண்டாகும்.

57 (a) தேன் ஈக்கள் கொட்டினதாகக் கனவானால் நல்ல நடத்தை கெட்டுப் பொருள் நஷ்டமாகும்.

(b) தேன், ஈ எவ்வும்போது பார்த்தால் ஐசுவரியவந்தர்களுக்குக் கெடுதி.

58. பேன்கள், உண்ணிகள், அட்டைகள் முதலியவற்றைப் பார்த்தால் ரகஸியமாய்க் கெடுக்க துர் ஆலோசனை செய்வார்கள்.

---

காரியமில்லாத எந்த வீண் வார்த்தையும் மனத்தாங்கலைக் கண்டிப்பாய்த் தரும்.

# நாகரிகத்தின் நோக்கம்

(T. V. அருணாசலம் பிள்ளை.)

உலகத்தில் நாகரிகம் மிகுந்து விட்டதா? மிகுந்த நாகரிகம் நமக்குத் தேவையா? சரியான நாகரிகமாயிருந்தால் நாம் எவ்வளவேனும் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் சில வேளைகளில் நாகரிகமானது நேர்வழியிற் செல்லாமல் தவறான வழியில் திரும்பி விட்டதாக நாம் நினைக்கிறோம். சமீப காலத்தில் நடந்த யுத்தத்தைப்பற்றி நாம் சொல்ல வருவதாக நினைக்க வேண்டாம். அந்த யுத்தமானது நாகரிகமடைந்த ஜனங்கள் செய்த ஒரு பிரமாண்டமான தவறு. பெரிய ராஜ்யங்கள் ஒன்றோடொன்று சண்டை செய்ய ஆரம்பித்தால் நாகரிகம் தவறான பாதையில் செல்லுகிறது என்று அறிவாளிகளான எவரும் ஒப்புக் கொள்வார்கள். நம்முடைய வாழ்நாளை நலமுறச் செய்து நமக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கவேண்டியது நாகரிகத்தின் முக்கிய உத்தேசமல்லவா? உண்மையான முன்னேற்றம் மனிதர்களுடைய உழைப்பைக் குறைப்பதென்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் (Herbert Spencer) முன்னமே சொல்லியிருக்கிறார். மனிதர்கள் நாள்முழுதும் அடிமைகளைப் போலவும் இயந்திரங்களைப்போலவும் உழைப்பதா யிருந்தால் அவர்கள் தனவான்களாகலாம்; பெரிய மாட மாளிகையில் வசிக்கலாம். ஆனால் முற்போக்கடைய முடியாது. நாகரிகத்தின் பிரதானமான வேலை என்னவென்றால் பொது ஜனங்களுக்கு சந்தோஷகரமான வாழ்வை அளிப்பதே. தற்கால நாகரிகம் இத்தன்மையதல்ல. பெரும்பான்மையான ஜனங்கள் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். ஒரு சிலர் சந்தோஷமான வாழ்க்கை நடத்துகிறார்கள். நம்முடைய வாழ்வு குணக்குப்பட்டுவிட்டது. நூதனமாய்க் கண்டு பிடிக்கப்படுகிற இயந்திரங்கள் ஆச்சரியகரமாகத்தானிருக்கின்றன. ஆனால் நவீனங்கள் உற்பத்தியாக ஆக நாம் அவற்றைக் குறித்து நன்றாய் யோசனை செய்யவேண்டும். நாம் எவ்வளவுக் கெவ்வளவு புதிது புதிதாகச் சமான்களை உண்டுபண்ணுகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமாக நாம் அவற்றை உபயோகப்படுத்த வேண்டும். சாஸ்திர விற்பன்னர் நமக்குச் சௌகரியங்கள் செய்யச் செய்ய நம்முடைய வாழ்வு இடைஞ்சல்பட்டுக் கொண்டே இருக்கிறதாக உணருகிறோம்.

உண்மையான உழைப்பு ஜீவியத்தின் நோக்கமானால், நமக்கு எவ்வளவுக் கெவ்வளவு அத்தகைய உழைப்பு ஏற்படுகிறதோ அவ்வளவும் நல்லது. அதல்லாமல் விவேகத்தையும் ஆத்மாவையும் விருத்திபண்ணுவது ஜீவியத்தின் முக்கிய பிரயோசனமானால் நம்முடைய சரீர வேலை குறையுமட்டும் நமக்கு அனுகூலமே. சம்பத்தும் சுகவாழ்வும் பெறுவதற்கான சிறந்த வழியைப்பற்றி

வீட்டுக்காரன் செலவுக்கு முடைப்படும்போது மனைவி எனக்கு அந்த நகையில்லை இந்த நகையில்லை என்று கதை சொல்லுகிறாள்.



ஸர். எல். ஸி. மணி (Sir L. C. Money) என்பவர் சொல்வதைக் கவனிப்போம்.

தென் அமெரிக்காவின் மத்தியில் வனாந்தரங்களில் வசித்து வருகிற காட்டு மனிதன் இன்றைக்கு அநேகாயிர வருடங்களுக்குமுன் அவன் மூதாதையர்கள் எப்படி யிருந்தார்களோ அப்படியே இன்றும் இருக்கிறான். உணவுப் பொருள் அகப்படுமானால் போஜனத்தைப்பற்றி அவனுக்குக் கவலையே இல்லை. தட்டங்களும், குழியல்களும், கரண்டிகளும் அவனுக்குத் தேவையில்லை. சமையல் செய்ய வேண்டியதும் அவ்வளவாக அவசியமில்லை. மேஜை நாற்காலி, மேஜைத் துப்பட்டி முதலியவை வேண்டாம். அவன் ஒரு மட்பாண்டத்தில் கையைவிட்டு மாம்சத் துண்டை யெடுத்து பல்லாற் கடித்துத் தின்றுவிட்டு எலும்பை நாய்க்குப் போட்டு விடுகிறான். அவ்வளவுதான்! அவனுடைய போஜனம் முடிந்து விட்டது.

இந்தக் காட்டானுடைய சாப்பாட்டை நாகரிக ஜனங்களின் போஜன முறையோடு ஒப்பிட்டுப் பார்ப்போமானால் நம் முற்போக்கு இன்னதென்பதை நாம் நன்குணர்வோம். மேஜைத் துப்பட்டி கண்டு பிடித்திருக்கிறோம். ஆகவே அந்தத் துப்பட்டி செய்வதற்கான பொருள்களை நாம் தனியாக உற்பத்திபண்ண வேண்டுவதாயிற்று. அதில் அழுக்குப் படிந்துவிட்டால் அதைச் சலவைசெய்து 'இஸ்திரி' வைக்கவேண்டும். உணவைக் கைபடாமல் எடுத்துச் சாப்பிடக் கத்திகளும் முட்களும் செய்து கொண்டோம். இதற்கான இரும்பும் நிலக்கரியும் பூமிக்குள்ளிருந்து தோண்டியெடுக்க வேண்டுவதாயிற்று. மேற்சொன்ன கத்திகளையும் முட்களையும் செய்ய இயந்திரங்கள் சேர்க்கலானோம். கைப்பிடி செய்ய யானைத் தந்தத்தையும் மிருகங்களின் கொம்புகளையும் தேடியலைந்தோம். இதுவும் தவிர அவற்றை அடிக்கடி விளக்கி மினுக்கி வைத்திருக்கவேண்டி யிருக்கிறது. இந்தக் காலத்துச் சாப்பாட்டு மேஜையின்மேல் இருக்கும் மற்றெந்தச் சாமான்களை யெடுத்துக் கொண்டாலும் இப்படியே. 6-பேருக்கு ஒருவேளைப் போஜனம் தயார் பண்ண வேண்டுமானால் நூற்றுக் கதிகப்பட்ட சாமான்கள் தேவையாயிருக்கின்றன. ஒரு பெரிய விருந்து செய்யவென்றாலோ நூற்றுக் கணக்கான சாமான்கள் தேவையா யிருக்கும். நம்முடைய ஆடைகளைக் கவனித்தாலும் அப்படியே. அநாகரிக ஜனங்கள் தங்களுடைய தேசங்களில் பச்சை முதலியவை குத்தி அழகுபடுத்திக் கொள்கிறார்கள். நாகரிகமடைந்த மனிதனோ பலவகைப்பட்ட ஆடைகளை அணிந்து கொள்கிறான். இவைகளை அடிக்கடி புதுப்பிக்கவும், சீர்பாக்கவும், சுத்தம் பண்ணவும் வேண்டியிருக்கிறது. துணிமணிகள் செய்கிற தொழிலில் எவ்வளவு வேலையிருக்கிறது என்பது ஜனங்களுடைய தொழின் முயற்சியைக் கவனிக்கும்பொழுது நன்கு புலனாம். யுத்தத்திற்குமுன் 14 லக்ஷம் ஜனங்கள் ஆடை செய்வதிலும் விற்பதிலும், 16 லக்ஷம் பேர்கள் நூல் நூற்றல் முதலிய தொழில்களிலும் சீவனம்பண்ணி வந்தார்கள்.

மனித வர்க்கம், தான் நாகரிகம் அடைந்து விட்டதாய் நினைக்க நினைக்க அதன் ஜீவியம் அதிக குணக்குப்பட்டு விடுகிறது. வேலையும் அதிகமாகிறது. ஏதாவது ஒரு புதிய சாமான் சிருஷ்டிக்கப்பட்டால் அதை நாம் அடைய

பெண்கள் கைத்தொழில் தெரிந்திருந்தால் குடும்பத்திற்குப் பேருதவி. நல்ல ஜீவனோபாயமாகும்.

வேண்டும் என்னும் ஆசை நம் உள்ளத்தி னூடே உண்டாகின்றது. கடிகாரம் கண்டு பிடிக்கப்படுவதற்கு முன் ஒருவருக்கும் கடிகாரம் தேவையில்லை. ஏனென்றால் அப்பொழுது கடிகாரம் இல்லை. ஆனால் இப்பொழுது கடிகாரம் எல்லோருக்கும் அவசியமானதோர் பொருளாகக் கருதப்படுகிறது. கடிகாரம் செய்கிற தொழிலினால் அநேகாயிரம் ஜனங்கள் பிழைக்கிறார்கள். நாளைக்கு ஒருவர் இலேசாகவும் அபாயமில்லாமலும் பறப்பதற்கு ஒரு இயந்திரம் கண்டு பிடிப்பாரானால் எல்லோரும் அம்மாதிரி இயந்திரம் ஒன்று வாங்க வேண்டும் என்று பிரியப்படுவார்கள். ஆகவே அவற்றைச் செய்யவேண்டிய வேலை அதிகரிக்கும். நாம் அதிகமாகச் சௌகரியங்கள் தேடிக்கொள்ளக் கொள்ள நம்முடைய ஜீவியம் அசௌகரியப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

நாகரிகம் இவ்விதமாக வேலையை அதிகப்படுத்துவதி லிருந்து சிலபேர்கள் முன்னேற்றத்தை ஓர் துர்ப்பாக்கியம் என்று கருதுகிறார்கள். அறிவாளியொருவர் நாகரிகம் அவசியம் குணமாக்கப் படவேண்டிய ஒரு நோய் என்றும், பொறுக்கக் கூடியதல்லவென்றும் சொல்லி யிருக்கிறார். அநேகம் பேர் ஆடம்பரமற்ற, இலேசான சுக ஜீவனம் செய்ய விரும்புகிறார்கள். மஹாத்மா காந்தியடிகளும் நாகரிகத்தின் குணக்குப் பிடித்த வழியை விட்டுவிட்டு ஜனங்கள் பழைய காலத்தில் நடத்திவந்த ஆடம்பரமற்ற வாழ்வைப் பின்பற்றவேண்டும் என்று பன்முறை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

ஆனால் ஜனங்கள் ஒருநாளும் பிற்போக்காகப்போக இணங்கமாட்டார்கள். அப்படிப் போவது ஒருவேளை சாத்தியமாயிருந்தாலும் அவர்கள் போக மாட்டார்கள். சில விஷயங்களில், சிறப்புடையவற்றைக் கைக்கொண்டு கேவலமானவைகளைப் புறக்கணிப்பதினால், இலகு ஏற்படலாம். ஆனால் சாஸ்திர விற்பன்னர்களும் எஞ்சினீயர்களும் புதிது புதிதாகச் சாமான்கள் கண்டுபிடித்துக்கொண்டே யிருப்பார்கள். இந்தச் சாமான்கள் ஜனங்களில் பெரும்பான்மையோராலும் அங்கீகரிக்கப்படும் என்பது திண்ணம். பொதுவாக நோக்குமிடத்து நாகரிகம் மென்மேலும் குணக்குப்பட்டுக்கொண்டே யிருக்கும். இப்பொழுதே நன்றாக குணக்குப்பட்டுவிட்டதே! இன்னும் பல வருஷங்கள் சென்றால் எப்படியாகுமோ தெரியவில்லை. நமக்கு வேண்டும் பொருள்களைச் செய்து கொள்வதிலேயே நாம் நாடோறும் உழைத்து நம்முயிரைத் தேய்த்து மாய்த்துக்கொள்ள வேண்டுமா? அப்படிச் செய்தால் வேலைசெய்வதில் அதிக உற்சாகமும் சந்தோஷமும் ஏற்படுமா ? அல்லது இரண்டும் குறையுமா?

நூறு வருஷத்துக்குமுன் ஜீவியம் மிகவும் இலேசாகவும் சாதாரணமாகவும் இருந்தது. வேலையும் குறைவாகவும் இலேசாகவும் இருந்தது. அப்பொழுது ஒரு தொழிலாளி சாதாரணமான ஆயுதங்களை உபயோகித்துச் சாதாரணமான பொருள்களிலிருந்து நமக்கு அவசியமான துணி மணி முதலிய சாமான்களைச் செய்து கொண்டான். உதாரணமாக அத் தொழிலாளி ஒரு செம்மானா யிருந்தால் செருப்பு முழுதும் அவனே செய்தான். இப்பொழுதோ என்றால் முற்போக்கின் பலனாக தற்காலச் செம்மான்களுக்குச்

---

இரவலாக எந்தப் பொருளையும் கொடுக்காதீர்கள். கொடுத்து மறந்து திரும்ப ஞாபகமுண்டான காலத்தில் கேட்டால் தந்துவிட்டேனே என்கிறார்கள். வீண் வம்பு எதற்கு?



18507

செருப்பு முழுவதும் செய்யத் தெரியாது. இப்பொழுது செருப்பின் ஒவ்வொரு பாகமும் தனித்தனி இயந்திரத்தால் செய்யப்படுகிறது. ஒவ்வொரு இயந்திரமும் அதற்கென ஏற்பட்ட பாகத்தைத் தவிர வேறொன்றும் செய்கிறதில்லை. நாம் தற்காலத்திய ஒரு செருப்புத் தொழிற்சாலையைப் பார்ப்போமானால் அநேக அற்புதமான இயந்திரங்களைக் காணலாம். இயந்திரங்களுக்கு வேண்டிய பொருள்களை எடுத்துப்போட்டுக் கொண்டிருக்கிற வேலைக்காரர்களையும் பார்க்கலாம். ஆனால் அந்த வேலைக்காரர்களுள் ஒருவனேனும் செருப்பு முழுவதும் தானே செய்யக் கூடியவனாக இருக்கமாட்டான். இது போலவேதான் கடிகாரங்கள், துவிசக்கர வண்டிகள், பெட்டிகள், துணிகள் முதலியவற்றை எடுத்துக் கொண்டாலும். நாகரிகத்தின் நிமித்தமாக மலை மலையான சாமான்கள் நமக்குத் தேவையா யிருக்கின்றன. இவையெல்லாம் விவேகசாலிகளான விற்பன்னர்களால் செய்யப்பட்ட இயந்திரங்களால் ஆக்கப்படுகின்றன. ஆனால் அந்த இயந்திரங்களை இயக்குகின்றவர்க ளிடத்தில் எத்தகைய விசேஷ குணத்தையும், திறமையையும் காணோம். நம்முடைய ரயில் பாதைகளும் ஒருவருடைய தூண்டுதலுமின்றி தாமே இயங்கக்கூடிய இயந்திரங்களையும் சூத்திரங்களையும் உடையனவா யிருக்கின்றன. இவைகளைப்பற்றி யெல்லாம் நாம் ஆராய்வோமானால், வேலையைக் குணகரமாகவும் சந்தோஷமாயும் செய்யவேண்டுவது வேலை செய்பவனே என்று புலப்படுகின்றது. உழைப்பு நம்முடைய ஜீவியத்துக்கு இன்றியமையாதது. மிகுந்த நேரமும் இதில் செலவிடப்படுகிறது. தூக்கத்துக்கு அதிலும் அதிகமாக நேரம் வேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு மனிதன் வேலை செய்யும் நேரத்தை எவ்வளவு இன்பகரமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு இன்பகரமாகச் செய்வது அவனுக்கு வேலையின்மேல் பற்றுதல் உண்டாகச் செய்யும். இல்லாவிட்டால் செக்கிற் பூட்டிய மாட்டைப்போல எப்பொழுது வெளியே போவோம் என்று எதிர்பார்த்த வண்ணமாகவே யிருப்பான்.

அறிவாளிகளான சில தொழிற்சாலை முதலாளிகள் அவர்களுடைய வேலையாட்களுக்கு எல்லாவிதமான சௌகரியமும் செய்து வைத்திருக்கிறார்கள். இதனால் அந்தக் கூலியாட்களுக்கு வேலையில் வெறுப்புத் தோற்றுகிறதில்லை. பிரிட்டன் தேசத்தில் ஒரு தொழிற்சாலை அழகானதோர் தோட்டத்தில் கட்டப்பட் டிருக்கிறது. கட்டிடமும் அழகிற் குறைந்ததா யில்லை. கட்டிடத்திற்குள் போதுமான காற்றும் வெளிச்சமும் வருகின்றன. வெளிச் சுவர்களில் அழகான கொடிகள் படர்ந்திருக்கின்றன. சாலையைச் சுற்றியிருக்கும் நிலங்களில் பசுமையான புல் வளருகின்றது; மரங்கள் குளிர்ந்த நிழலைத் தருகின்றன; பாத்தி பாத்தியாய் புஷ்பச் செடிகள் புஷ்பித்து நறுமணம் வீசிக் கொண்டிருக்கின்றன. வெள்ளாம்பல் படருகின்ற தடாகங்களும் நீந்தி மூழ்குவதற்கான நீர் நிலைகளும் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு வேலை செய்யும் ஆண் பெண் இரு பாலாரும் மிகுந்த சுகத்துடன் வேலைசெய்கின்றார்கள். நல்ல காற்று அடித்துக்கொண்டே யிருக்கிறது. குளிர் காலங்களில் காற்றைச் சூடாக்கி விடுகிறார்கள். காற்றி லிருக்கும் விஷக் கிருமிகளைக் கொல்லும் சக்தியுடைய மருந்துகளை அடிக்கடி எங்கும் தெளிக்கின்றார்கள். இயந்திரங்கள் முதலியவை நூதன முறையில் அமைக்கப்பட் டிருப்பதோடு ஆபத்தை

---

ஒருவனின் வஞ்சக் கள்ளக் குணத்தை நாம் கண்டு சும்மாவிருத்தல் கூடாது. அதற்காக உயிரையுங் கொடுக்கக் காத்திருக்கவேண்டும்.

18507

யுண்டுபண்ணும் தன்மையனவாயில்லை. இரக்ஷை ஏற்படுத்தப்பட் டிருக் றது. வேலையாட்கள் வெண்மை நிறமுடைய முழு அங்கி அணிந்திரு ன்றார்கள். உணவுப் பொருள்களைக் கையாடுகிறவர்கள் தலை முழுவ மூடித் தொப்பி போட்டிருக்கிறார்கள். ஸ்நானம்செய்ய வெந்நீர் ளும் அமைக்கப்பட் டிருக்கின்றன. சமையல் சாப்பாட்டுக்குச் செ அறைகள் இருக்கின்றன. கிரயம் கொடுக்கச் சக்தியுள்ளவர்கள் சா கிரயத்துக்கு வாங்கிச் சாப்பிடுகிறார்கள். நீச்சல் தெப்பங்கள் மி யிருக்கின்றன. பெண்களும் நீந்தப் பழகி யிருக்கின்றார்கள். ய ன வேளைகளில் பெண்கள் பசும் புற்றரையில் குளிர்ந்த மர நிழலிலிருந்து சங்கீதத்தைக் கேட்டுக்கொண்டு உண்டி யருந்துவதைப் பார்ப்பது கண்களுக்கு ஒரு விருந்தாக இருக்கும். இயந்திரங்களை ஓட்டுவதற்காக அமைத்திருக்கும் எஞ்ஜின்களி லிருந்து கெட்ட புகையொன்றும் உண்டாவதில்லை. வேலையாட்களின் இரக்ஷையே முதலாவதாகக் கவனிக்கப்படுகிறது. அந்தத் தொழிற்சாலையில் டாக்டர்களும் தந்த வைத்தியர்களும் பிரதம சிகிச்சை செய்பவர்களும் இருக்கிறார்கள். இந்த வேலையாட்களுக்குள் ஆலோசனை சபைகளும், சுகாதார சபைகளும் இருக்கின்றன. இப்படி ஆணும் பெண்ணுமாக 10,000-பேர் வேலை செய்கிறார்கள்.

## அம்மா உத்தியோகம் செய்கிறார்கள்.



மனைவி:—என்னங்காணும்! தாகத்துக்குத் தண்ணீர் கேட்டால் இவ்வளவு தாமதமா?

புருஷன்:—இல்லை. சாதம் வடித்துக்கொண்டிருந்தேன்.

1. முதலில் ஒரு குற்றம் செய்தவன் அதைமறைக்கப் பொய்யுரைக்கும் பொழுது இரண்டு குற்றங்கள் செய்தவனாகின்றான். வாட்ஸ்.
2. நாம் நம்முடைய மூதாதையரைத் திருத்த முடியாது. ஜார்ஜ் எலியட்.
3. பணம் தேடுவது ஒரு பெரிய காரியம். அதைவிடப் பெரிய காரியம் ஒன்று உளது. அது யாதெனில் தேடிய பணத்தைக் காப்பாற்றிக் கொள்வதே. டிஸ்ரேலி.
4. பரம்பரை அடிமைகளே! சுதந்தரம் விரும்புவோர் தாமே அதற்குரிய காரியம் செய்தல் வேண்டும் என்பதை அறியீர்களா? பைரன்.
5. நண்பன் என்றால் நண்பனுடைய குறைகளைப் பொறுப்பவனாக இருக்க வேண்டும். ஷேக்ஸ்பீயர்.
6. பட்டே யானாலும் தூக்குங்கயிறு தூக்குக் கயிறே. கூப்பர்.
7. எல்லோரும் துக்கத்தைப் பொறுத்துக்கொள்ள முடியும்—துக்கமுடையவனைத் தவிர. ஷேக்ஸ்பீயர்.
8. தலை சுழல்பவன் தரணி சுழல்வதாக நினைத்துக் கொள்கின்றான். ஷேக்ஸ்பீயர்.
9. நண்பனுக்கு நன்மை செய்—அவனை இழவாதிருக்க. பகைவனுக்கு நன்மை செய்—அவனை நண்பனாக்க. பிராங்க்லின்.
10. நண்பன் எனப்படுவான் இரண்டு உடம்புகளில் ஒரு ஆன்மா ஆவான். அரிஸ்டாட்டில்.
11. தீர்மானிக்க மனம், வழிவகுக்க அறிவு, செய்து முடிக்கக் கை. கிப்பன்.
12. கடவுள் சிருஷ்டிகளில் தலைசிறந்தது சத்தியவந்தனே. போப்.
13. முதலில் மானத்தை நாடு—பின்னால் இன்பம் உளது. சாட்டர்டன்.
14. எப்பொழுதும் நமது சூரிய ஒளியில் ஒரு கருப்புப்புள்ளி உண்டு. நமது நிழலே அது. கார்லைல்.
15. துயரப்படுவோர் அருகிருப்பது சந்தோஷப்படுவோர்க்குப் பாரமாயிருக்கும். ஆனால் சந்தோஷப்படுவோர் அருகிருப்பது துயரப்படுவோர்க்கு இன்னும் எவ்வளவு அதிக பாரமாயிருக்கும்! கதே.

---

ஒரு வித்திட பல நூறு வித்துக்கள் கிடைக்கின்றன; இதுபோன்ற லாபகரம் கிடைக்கக்கூடிய தொழில் வேறு ஒன்றுமில்லை.

...னவாயில்லை. இரகைஷ ஏற்படுத்தப்பட் டிருக்...

17. மனக்... கிறமுடைய முழு அங்கி அணிந்திரு... கையாடுகிறவர்கள் தலை முழு... மருந்து இன்... ஸ்நானம்செய்ய வெந்நீர் ...

18. பட்டங்கள் தம்மை விரும்புவோரிடமிருந்துச் செல்... லை வெறுப்போரைப் பின்தொடரும் நிழல்களை ஒக்கும்.

19. அடக்கமும் அன்பும் துன்பத்தால் கற்றுக் கொள்ளப்படும். ஜார்ஜ்எலியட்.

20. அறியாத துன்பத்தினிடம் பறந்தோடுவதைவிட, உள்ள துன்பத்தைப் பொறுத்தலே நலம். ஷேக்ஸ்பியர்.

21. "இயலாது" என்பது என் அகராதியில் இல்லை. நெப்போலியன்.

22. பகைவரிடமிருந்து கூடக் கற்றுக்கொள்ளலாம்: ஒரு பொழுதும் கேடு வராது. நண்பருக்குக் கூட அறிவுறுத்தலாகாது, கேடு வாராதிருத்தல் அரிது. கோல்டன்.

23. கயவர் முட்டாள்களின் நாட்டில் பட்டினியாய் இருப்பதிலர். சர்ச்சில்.

24. செய்தது தவறானால் செய்தபின் அதற்காக வருந்துதல் தவறாகும். ஷெல்லி.

25. சிரிப்பில் எவ்வளவு அடங்கியிருக்கிறது. மனிதனை முழுதும் அறிந்து கொள்வதற்குரிய திறவுகோல் அதுவே. கார்லைல்.

26. ஒருநாளாவது, இல்லை—ஒரு மணி நேரமாவது ஒழுக்கத்தோடு கூடிய சுதந்தரத்தோடு வாழ்ந்தால் போதும். அது ஒரு யுகம் முழுதும் அடிமையாய் வாழ்வதைவிட மேலானதாகும். அடிஸன்.

27. சுதந்தரத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்குரிய ஒரே வழி துன்பமின்றி சந்தோஷமாய் உயிர் துறக்க எப்பொழுதும் தயாராய் இருப்பதே என்று கூறியது முற்றிலும் சரியே. கதே.

28. சிறிய நெருப்பைச் சீக்கிரத்தில் மிதித்து அணைத்துவிடலாம். ஆனால் ஆரம்பத்திலேயே அணைக்காது வளர விட்டுவிட்டால் அதை ஆறுகளாலும் அணைக்க முடியாது. ஷேக்ஸ்பியர்.

29. நீண்ட காலம் வாழவேண்டுமென்பது அநேகமாக ஒவ்வொருவருடைய ஆசையுமாகும். ஆனால் நன்றாய் வாழ விரும்புபவர் வெகுசிலரே. ஹீஜ்ஸ்.

30. மன்னித்து உவக்கும் இன்பம் அறியாத அன்பு குறைவுபட்ட அன்பேயாகும். விட்டியர்.

31. மனிதன் கடவுள் அல்லன்; ஆனால் அவன் மனிதனாயிருக்கும் அளவு கடவுளைப் போன்றவனாயிருப்பான். டெனிஸன்.

32. சுதந்ரதமே! உன் பெயரால் எத்தனை குற்றங்கள் இழைக்கப்படுகின்றன! மேடம் ரோலண்டு.

---

பெண்களின் பொறுமைக்கு அளவில்லை. அவர்களுடைய குடும்ப வேலைகளைச் செய்து பார்த்தால் உண்மை புலப்படும்.



33. மனிதன் இறப்பதற்குத் தகுந்த இடம் மனிதனுக்காக இறக்குமிடமே. எம். ஜே. பாரி.

34. ஒருவனுடைய விருப்பத்திற்கு விரோதமாய் நாம் குறுக்கிடும் பொழுது தான் அவனுடைய இயல்பு இன்னதென்று நன்கு அறிந்து கொள்ள இயலும். பேக்கன்.

35. எஜமானனா?—சில வேளைகளில் குருடாயிருக்க வேண்டும். வேலைக்காரனா?—சில வேளைகளில் செவிடாயிருக்க வேண்டும். புல்லர்.

36. ஒருவன் யாரிடம் பேசுகின்றானோ அவனுக்குப் பொருள் விளங்காமலும் பேசுகின்ற தனக்குப் பொருள் விளங்காமலும் இருந்தால் பேசுவது தத்துவ சாஸ்திரமாகும்! வால்டேர்.

37. செல்வத்தை இகழ்பவனுக்குப்போல் வேறெவர்க்கும் செல்வம் அதிகமாய்த் தேவையில்லை. ஜீன்பால்ரிக்டர்.

38. துர் அதிர்ஷ்டம் சிறியோரைப் புறங்காணும்; ஆனால் பெரியோர் அதை வென்றுவிடுவர். வாஷிங்டன் இர்விங்.

39. குறுகிய புத்தியுள்ள மனிதர் குறுகிய கழுத்துள்ள பாட்டில்களை ஒப்பர். அகத்தில் அற்பமாயிருந்தால் புறத்தில் ஊற்றும்பொழுது அதிகச் சப்தம் செய்யும். ஸ்விட்.

40. எந்தக் காலத்திலானாலும் ஒரு தேசத்தின் வாழ்வு அந்தக் காலத்திலுள்ள இருபத்தைந்து வயதுக்குட்பட்ட வாலிபர்களுடைய அபிப்பிராயங்களையே பொறுத்திருக்கும். கதே.

41. ஒரு திராட்சைப் பழம் எவ்வளவு திரண்டதானாலும் அது ஒரு குலையாகி விடமாட்டாது. டிஸ்ரேலி.

42. தன் தேசத்தினிடம் பக்தி செலுத்தாதவன் எதனிடமும் பக்தி செலுத்தான். பைரன்.

43. பாண்டித்தியம் என்பது படிப்பு நிறைந்தது; ஆயினும் பயனற்ற பல ச்சாமான்களை நம் தலைக்குள் திணித்து நிரப்பிவிடும். ஆனால் அச்சாமான்களுக்கு இடம் செய்வதற்காக நம் மூளைகளை வெளியே எடுத்து எறிந்து விடவும் செய்கின்றது. கோல்டன்.

44. தன்னிடத்தில் மேன்மை ஒரு பொழுதும் காணாதவன் பிறரிடத்தில் மேன்மை காண்பது முடியாததாகும். ஸ்டீல்.

45. அன்புண்டு இரக்கமில்லை என்று பாசாங்கு செய்ய முடியுமா? அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகளாகும். ட்ரைடன்.

46. சரித்திரத்தைப்போலவே தனமும் நண்பர்களைப் பிரித்துவிடமுடியும். கௌலி.

47. இன்பங்கள் மலர்ந்த கஞ்சாப் புஷ்பங்களை ஒக்கும். மலரைத் தொட வேண்டியதுதான், உடனே இதழ்கள் உதிர்ந்துவிடும். பர்ன்ஸ்.

---

சோம்பல் என்னும் அசந்தர்ப்பத்திற்கு இடம் கொடுத்தல் கூடாது. காலை எழுந்தவுடன் தேகப்பயிற்சி அவசியம் செய்துவரவேண்டும்.

48. உரை நடை எழுத விரும்பினால் உரைப்பதற்கு ஏதேனும் விஷயமிருத்தல் அவசியம். ஆனால் விஷயம் ஒன்றுமில்லாதவனும் செய்யுள் செய்து விடமுடியும். கதே.

49. ஒரு புல் முளைத்த இடத்தில் இரண்டு புல் முளைக்கவும், ஒரு கதிர் விளைந்த இடத்தில் இரண்டு கதிர் விளையவும் செய்பவனே இராஜீயவாதிகள் அனைவரையும்விட அதிக உபயோகமான ஊழியம் தேசத்திற்குச் செய்தவனாவான். அவனே மனிதவர்க்கத்தால் அதிகமாகப் போற்றப்படத் தகுந்தவனுமாவான். ஸ்விட்.

40. தரித்திரம் நாம் பயந்தால் ஒரு போக்கிரியாகும். பயப்படாமல் மனிதனைப்போல் எதிர்த்து நின்றால் அது நல்ல குணமுடையதே. தாக்கரே.

51. புத்திமதி விரும்பி வருபவர்களில் அநேகர் தம் அபிப்பிராயங்களைத் திருத்திக் கொள்வதற்காக வருவதில்லை. அவர்கள் வருவது அவைகளைப் பலப்படுத்திக் கொள்வதற்காகவே யாகும். பில்லிங்ஸ்.

52. தன் மக்களைப்பற்றிப் பேசும் தாயைப்போலவே, தன் நூல்களைப்பற்றிப் பேசும் ஆசிரியனும் தவறு செய்பவனே யாவான். டிஸ்ரேலி.

53. ஒருமுறை படிக்கத் தகுந்த அநேக நூல்கள் இருமுறை படிக்கத் தகுந்தவைகளாகவும் இருக்கும். மார்லி.

54. சிக்கனம் வாழ்வாகிய போர்க்களத்தில் பாதி வெற்றியாகும். பணம் சம்பாதிப்பது பணம் செலவு செய்வதைப்போல் அவ்வளவு கடினமான காரியமன்று. ஷதே.

55. முதலில் பொய்யாய்த் தோன்றுவதெல்லாம் பொய்யாய் விடா. ஷதே.

56. சுதந்தரப்போர் ஒருமுறை தொடங்கிவிட்டால், தந்தைக்குப்பின் தனயன் எனப் பல தலைமுறை, அடிக்கடி தடைப்பட்டாலும் எப்பொழுதும் வெற்றியே. பைரன்.

57. வேண்டியபொழுது உண்மையான நண்பனை உடையவன் சந்தோஷம் உடையவன். ஆனால் நண்பனை வேண்டும் அவசியமில்லாதவன் அவனைவிட அதிக சந்தோஷ முடையவனாவான். வார்விக்.

58. சிக்கனம் இல்லையேல் யாரும் செல்வராக முடியாது. சிக்கனம் இருந்தாலோ வெகு சிலர்கூட தரித்திராகார். ஜான்ஸன்.

59. பெருமை என்பது பட்டங்கள் உடைமை யன்று; பட்டங்கள் பெறத் தகுதியுடைமையே யாகும். அரிஸ்டாட்டில்.

60. அவமானத்தைவிடத் தீங்கே அதிசீக்கிரத்தில் மறந்துவிடப்படும். செஸ்டர்பீல்டு.

---

நம்முடைய உதவிகளால் சிநேகிதர்களைத் தேட முயல்வது நீடித்த சிநேகமாயிராது.

# மண்டோதரியின் மாண்பு.

(தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், பீ. ஏ.)

கார்மேகங்களினிடையே எழுந்த கதிரவன் ஒளிபோல, "இரக்கம் என்றொரு பொருள் இலாத நெஞ்சினரான" அரக்கர் வாழ்ந்த அரம்புகாத அணிநகரில், மயன் மகளாய் மண்டோதரி தோன்றுகின்றாள். அரக்கர்கோனது அருமந்த வாழ்க்கைத் துணைவியாய் அமைந்து, இல்லறம் என்னும் நல்லறம் பேணி, தென்னிலங்கைத் தெய்வமாய் இலங்கிய மண்டோதரி, வலிமிக்க மேகநாதன் என்னும் மகனையும் பெற்று, அதனால் ஆராவுவகை எய்தி யிருக்கின்றாள். இம்மங்கையை, அரம்பை, மேனகை, திலோத்தமை, உருப்பசியாதியர் கால் வருடத் துயில்வுறும் நிலையில் கண்ட அனுமனும், தான் தேடிவருகின்ற ஜானகி இவள்தானோ என்று ஐயுறுகின்றான். காந்தையருக்கணியனைய சானகியின் பேரழகை நிகர்த்த இவள் தன் அழகை யாரே கணிக்க வல்லார்.

அழகிற் சிறந்து விளங்கிய அணங்கான மண்டோதரி தன் கணவனை தன் தெய்வம் என்றும், அவனுக்கு ஆற்றும் அரும்பணியே தன் தவமாகும் என்றும் போற்றி வாழ்ந்து வந்த பெருமை அறிஞர் அறியாத தொன்றன்று. தூயவெண்ணீறு துதைந்த மேனியும், சிவபிரான் சேவடி மறவாச் சிந்தையும் வாய்ந்த இம்மங்கை நல்லாள் இயற்றிய நற்றவம் நலமுடையதே யாகும்.

இத்தகையதொரு நங்கைக்கு நாயகனாய் அமைந்த அரக்கர்கோன் அறநெறி தவறி, பிறனில் விழைந்து நின்றபெற்றி யறிந்தபோது மங்கை மயங்குகின்றாள். தன் தலைவன் சீதையைச் சிறைசெய்து வந்ததை உணர்ந்த தலைவி தன் தலைவனது அடாத செயலுக்காக இரங்கியும் அத்தகையதொரு செயலால், தன் நாயகனுக்கும் தன் குலத்துக்கும் என்னென்ன கேடுகள் விளையுமோ என்று ஓங்கிய வண்ணமாயே இருக்கின்றாள். இரவெல்லாம் தூக்கமின்றி துர்நிமித்தங்கள் காண்பதும், வாய்குளற உடல் நடுங்குவதும், இவள் தன் பிந்திய நிலையாக அமைந்திருக்கக் காண்கின்றோம். நங்கை செய்த நற்றவத்தின் பயனாய்த் தோன்றிய நன்மகனான இந்திரசித்தனும் தந்தை யியற்றிய அரும்பழிக்கே இரையாகி, இலக்குவனது அம்பிற்கு இலக்காகி வீழ்கின்றான். இதைக்கேட்ட மங்கை தன் மைந்தனை அணுகும் நிலையைச் சித்திரித்துக் காட்டும் ஆற்றல் பெற்றவர் கவியரசர் கம்பர் ஒருவரே யாவர்.

"தலையின் மேற்சுமந்த கையள், தழலின்மேல் மிதக்கின்றாள்போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளாள் நேசத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேல் குறித்தவேடன் கூர்ங்கணை உயிரைக்கொள்ள
மலையின்மேல் மயில் வீழ்ந்தென்ன மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்"

என்று கவிஞர் மண்டோதரி தன் மகன் மாண்டுகிடந்த இடத்தை அணுகி,

அவனது உடலத்தின்மீது விழுந்து புரண்டழுததை சோகம் நிறைந்த சொற்களால் அமைத்துக் காட்டுகின்றார். இந்த நிலையிலும் தன் ஒப்பற்ற காதற்றிருமகனது வீரத்தையே பெரிதும் நினைந்து போற்றுகின்றாள் மங்கை.

தாளரிச் சதங்கையார்ப்பத் தவழ்கின்ற பருவந்தன்னில்
கோளரி இரண்டுபற்றிக் கொணர்ந்தனை கொணர்ந்து கோபம்
மூளுறப் பொருத்திமாட,முன்றிலின் முறையினோடி
மீளரும் விளையாட்டின்றும் காண்பனோ விதியிலாதேன்.

என்று மங்கை புலம்பும் மாற்றத்தில், அவள், தன் மகன்றன் இளவீரத்தைப் போற்றி மகிழும் திறம்கண்டு மகிழ்வதற் குரியதாகும்.

நம் தமிழகத்தின் சரிதையை உற்று நோக்கினால் வீரமகளிர் பெருமை இனிதே விளங்கக் காணலாம். நரம்புதோல் வற்றிய முதியோள் ஒருத்தியின் ஒரு புதல்வன் போர்க்கோலந்தாங்கி அமர்க்களம் செல்கின்றனன். அவன் போரிடைப் புறமுதுகிட்டுப் பட்டான் என்று பலர் போந்து, அம்முதியோள் பால் அறைகின்றனர். அது கேட்ட அன்னை, தன் முதுமையைச் சிறிதுங் கருதாது, வாள்தாங்கி இவர் கூற்று மெய்யாயின், இவ்வாளால் அவனுக்குப் பாலூட்டிய எனது மார்பை அறுத் தெரிவேன் என்று எழுந்து போர்க்களம் புகுந்து மைந்தனைத்தேடி ஆங்குக் குவிந்து கிடக்கின்ற பிணங்களைப் பெயர்த்துப் பெயர்த்து அங்கே தன் னொருமகன் மருமத்திடை ஊறுதாங்கி இறந்து பட்டிருத்தலைக்கண்டு அத்தாய் அவனை ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கின்றாள். இம்மட்டோ. மற்றொருபெண், தன் கொழுநன் போர்க்களத்தில் மறப்போர் புரிந்து உயிர் துறந்தனன் என்பதறிந்தும், அவன் உயிர் துறந்த மறுநாளே மாற்றார் செருப்பறைகேட்டு அப்பெண் மகள் தன்னொரு மகனை அழைத்து தலைமயிர் நீவிப் போருடைபுனைந்து, வேல்கைத் தந்து போர்க்களம் போய் வருக என்று மகிழ்ச்சியொடு வழிகூட்டி அனுப்புகின்றாள். இத்தகைய வீரத்தாய் பிறந்த இந்நாட்டின் வீரமகளாய் இலங்குகின்றாள் நம்மண்டோதரி. வெற்றிவீரனை இந்திரசித்தனைப் பெற்றதாய் வீரத்தாய் என்பதற்கும் ஓர் ஐயமுண்டோ? அவள் பால் நாம் காணும் வீரமெல்லாம் அவள் தாய் அவனுக்கு இளவயதில் தன்பாலுடன் ஊட்டிய வீரமே யன்றோ.

வீரஞ்செறிந்த உள்ளத்தளாய் இலங்கியமங்கை, தெளிந்த அறிவுள்ளவளாயும் விளங்குகின்றாள். தன் தலைவனை இராவணன் சீதையைக் கவர்ந்து சிறை செய்துள்ளவொரு காரணத்தால்தான், தன் ஒப்பற்ற திருமகனை இந்திரசித்தன் உயிர் துறக்க நேர்ந்தது என்பதை மங்கை உணர்கின்றாள். சீதையென்னும் சிறை யிருந்த செல்வியின் நிறையுணர்ந்த மங்கை, தன் நாயகனை இராவணனும் நாளை நடைபெற விருக்கும் போரில், தன் மகனடைந்த நிலையையே அடைவன் என்பதை உணர்கின்றாள்.

பஞ்செரி யுற்றதென்ன அரக்கர் தம்பாவை யெல்லாம்
வெஞ்சின மனிதர்கொல்ல விளிந்ததே மீண்டதில்லை
அஞ்சினேன் அஞ்சினேன் இச்சீதையென் றமிழ்தாற் செய்த
நஞ்சினால் இலங்கைவேந்தன் நாளை இத்தகையன் அன்றோ.

என்று மங்கை மயங்கிக்கூறும் மொழிகளில், அவள் தன் தெளிந்த அறிவு

சில விளம்பரம் படிக்க இனிமையாயும் பார்க்க அழகாயும் தோன்றுகின்றன. அதில் அநேகர் மயங்கி வீழ்கின்றனர்.



பாந்து விளங்கக்காணலாம். அவள் நினைத்தவாறே இராவணனும், இராம வீரனது அம்பிற்கு இலக்காகி, அமர்க்களத்தினிடையே ஆருயிர் துறந்து கிடக்கின்றான். இதைக்கேட்க மங்கை இராவணனது பெரிய உடலத்தின் மீது விழுந்து புரண்டு, மரங்களும் மலைகளும் உருக வாய்திறந்து ஆற்றும் மொழிகள் கற்றார் உள்ளத்தை உருக்குவனவாகும்.

"வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலுங்கீழும்
எள்ளிருக்கு மிடனின்றி உயிரிருக்கும் இடனாடி இழைத்தவாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை மனச்சிறையில் கரந்தகாதல்
உள்ளிருக்கு மெனக்கருதி உடல்புகுந்து தடவியதோ ஒருவன் வாளி"

என்று கவிஞர் அழகொழுகும் அருஞ் சொற்களால் மங்கையின் மனநிலையை எடுத் தோதுகின்றார். இம்மட்டன்று

காந்தையருக் கணியனைய சானகியார் பேரழகும் அவர்தம் கற்பும்
ஏந்துபுயத்து இராவணனார் காதலும் அச்சூர்ப்பனகை யிழந்த மூக்கும்
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால் வெங்கானில் விரதம்பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார் பெருந்தவமாய் போயிற்றம்மா.

என்று மங்கை தெளிந்த அறிவுடன் கூறுஞ் செஞ்சொற்கள் அவள் தன் தலைவனின் சரிதம் உணர்ந்த தலைமகள் என்பதை இனிதே விளக்கும். அரக்கர் செய்த கொடுஞ் செயல்களுக்கு ஆற்றாது இந்திரன் தேவர்களோடு செய்த தவமானது ஐந்து கூறாகப்பிரிந்து சீதையின் அழகாகவும், அவளது கற்பாகவும், இராமனது வனப்போக்காகவும், சூர்ப்பனகையின் மூக்காகவும், இராவணனது காதலாகவும் வந்தமைந்து, இராவணவதையை முடித்தது என்று மங்கை கூறும் நிறைந்த மொழிகளில் கம்பர் கவிநலம் கனிந்து விளங்கக் காணலாம்.

இனி இம்மங்கை அமர்க்களத்திடையே கிடந்த தன் ஆருயிர்க்காதலனது ஆவியற்ற உடலை யெடுத்து தன் மார்புட னணைத்தனள். அக்கணமேதன் ஆவியும் நீங்கினள்.

"என்றழைத்தனள் ஏங்கி யெழுந்தவள், பொன்றழைத்த பொருவருமார்
தன்றழைக் கைகளால் தழுவித்தனி, நின்றழைத் துயிர்த்தாள் உயிர் [பினைத்,
[நீங்கினள்"

என்பர் கவி யரசர். இவ்விடத்து ஒரு சிறந்த உண்மை பொதிந்து கிடக்கின்றது. தமிழகத்துமாதர் தம்தம் காதலர்பால் கொண்டொழுகும் அன்புடைமையை அறிஞர், தலை, இடை, கடை, எனப் பிரித்துள்ளார்கள். காதலர் இறந்த அக்கணமே தானும் உயிர் விடுபவர் தலையன்புடையார் என்றும் அவ்வாறு உயிர்விடாது எரியிடைப்புகுந்து வலிதில் உயிர் விடுபவர் இடையன்புடையார் என்றும் அவ்வாறும் உயிர்விட ஆற்றாது மறுபிறப்பிலேனும் தன் அன்பரோடு உடனுறை வாழ்க்கையே விரும்பி அதற்கேற்ற நோன்புகளை அனுட்டிப்பர் கடையன்புடையார் என்றும் கூறுவர் பெரியோர்,

காபி—டீ நமது உஷ்ண நாட்டிற்குப் பொருந்தா. களைப்பை ஆற்றும் சக்தியும் குளிர்ச்சி உண்டாக்கும் சக்தியு மவைகளுக்கில்லை. நீராகாரம் சிறிது உப்பிட்டுச் சாப்பிட தூக்கத்தைப்பு பசி முதலியன நீங்கும்.

"காதலர் இறப்பின் கணையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயாராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்
நளி எரிபுகாஅர் ஆயின் அன்பரோடு
உடன் உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்படுவர்"

என மணிமேகலையார் எடுத்துக்காட்டும் முறையே போதிய சான்றாகும். இத்தகைய அன்பின் திறமறிந்து தலையன்புடைய தனிப்பெருமகளாய் இலங்கிய பெருமை நம்மண்டோதரிக்கே உரியதாகும். தமிழிலக்கிய முழுவதும் ஊன்றி ஆராய்வார் இவள்போல் இலங்கிய தலையன்புடைய மக்கள் இன்னும் இருவர் உளர் என்பதறிவர். கோவலன் உயிர்கவர்ந்த நெடுஞ்செழியர் மனைவியாய கோப்பெருந்தேவியும், சூரபதுமன் மனைவியான பதுமகோமளையும் போற்றுதற்குரிய பெருமக்களாய் விளங்குகின்றார்கள்.

"அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்த
திருவீழ்மார்பின் தென்னர் கோமான்
தயங்கிணர் கோதை தன்துயர் பொறாஅள்
மயங்கினள் கொல்லென மலரடி வருடி
தலைத்தாள் நெடுமொழிதன் செவிகேளாள்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானென
தன்னுயிர்கொண்டு அவனுயிர் தேடினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்"

என்று இராஜரிஷியாகிய இளங்கோவடிகள், கோப்பெருந் தேவியின் குறைவிலா நெறியை, ஆராமொழிகளால் அழகாக எடுத்துரைக்கின்றார். மற்றும்

"காவன் மன்னவன் இறந்தனன் எனும் உரை களத்துள்
மேவும் எல்லையில் அசனி ஏறுண்ட அம்பணியேபோல்
தேவியாகிய பதுமகோமளை எனும் திருமங்கை
ஆவிநீங்கினள் தலையளி யாகியது அதுவன்றோ"

என்று காஞ்சிபுராண முடையார் பதுமகோமளையின் தலையளியை எடுத்துரைக்கும் நயம் கற்றார் உளத்திற்கு கழிபேருவகை தருவதாகும்.

இவ்விரு மங்கையரையும் ஒத்தநிலையில் அமைந்த மண்டோதரியின் மாண்புணர்ந்த

"வானமங்கையரும் மற்று மற்றுமெத், தான மங்கையரும் தவப்பாலவர்,
ஆனமங்கையரும் அருங்கற்புடை, மானமங்கையர் தாமும் வழுத்தினார்"

என்று கவிஞர் கோமகன் போற்றி யுரைக்கின்றார். மண்டோதரியின் மாண்பைச் சில மின்னதென்று அருந்ததிக் கருளிய சீதையின் சீலத்தோடு ஒப்பிட்டு நோக்கினால், இவ்விருவரில் ஏற்றமுடையார் யாவர் என்பது காண்போம். அறிஞர் ஆராய்வார்களா.

---

யாசகப் புரட்டர் அதிகமாயுள்ள நாடு இந்தியா ஒன்று தானும்.

சுவாமி ராமதீர்த்தரும்

# மதங்களின் சமரசமும்

(இ. ச. சிவராமலிங்கம் பிள்ளை.)

சுவாமி ராமதீர்த்தர் 1873-ல் தீபாவளிக்கு மறுநாள் பஞ்சாபில் ஜேரன்வாலா ஜில்லாவிலுள்ள முரோளிவாலா என்ற குக்கிராமத்தில் பிரமகுலத்தில் அவதாரமாயினர். ஹிந்திராமாயணக் கர்த்தாவாகிய துளசிதாசருடைய வம்சபரம்பரையே சுவாமி ராமதீர்த்தருடைய வம்சமென்று தெரிவதால் சுவாமிகளுடைய ஜீவியம் மிகவும் உன்னதமா யிருப்பதில் அதிசயம் ஒன்று மிருப்பதற்கில்லை. சுவாமிகள் பிறந்த சில தினத்துக்குள் தாயார் பரலோகப் பிராப்தியடைந்து விட்டமையால் சுவாமிகளுடைய மூத்த சகோதரர் குருதாஸருடைய பராமரிப்பில் வளர்ந்து வரும்படியாயிற்று. சுவாமிகளது ஜாதகத்தைப் பார்த்த சோதிடர்கள் எவரும் ஒன்றைப்போல் கூறத் தொடங்கினர். பிராயத்தில் ஒருபெரிய சமுதாய சீர்திருத்தக்கார அவதார புருஷராக விளங்குவாரென்று அச்சோதிடர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். மகாபாரதம் பாகவதம் முதலான புராண இதிகாசங்களின் நுட்பங்களை யறிவதில் மிகவும் ஆச்சரியகரமான சக்தியை பாலியத்திலே படைத்திருந்தனர். அக்காலத்தில் தாமறிந்த விஷயங்களைப்பற்றி ஏகாக்கிர சிந்தனையோடு உண்மை காண்பதிலேயே தம்கருத்தை செலுத்தினார். அதனால் சுவாமிகள் அதிபால்யத்திலேயே அசாதாரண புத்திவிகாசமும் சிந்தனாசக்தியும் ஏகாந்த அவஸ்தையும் அடைந்து அண்டை அயலார் ஆச்சரியப்படும்படி விளங்கினார். பாடசாலையில் மாணவர் என்ற ஸ்தானத்திலும் மிகச் சமர்த்தரா யிருந்தமையால் எல்லா உபாத்தியாயர்களாலும், தெய்வத்தைப்போல் கொண்டாடப்பட்டு வந்தனர். அன்றியும் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளிலும் மற்றபடி வகுப்புகளிலும் முதன்மை ஸ்தானத்தை வகித்து, பி. ஏ. எம். ஏ. பரிக்ஷையிலும் முதன்மையாகத் தேறினர். கணிதநூல்படித்து முதல்வகுப்பில் முதல்மாணவராய் வெற்றியடைந்த பிறகு, சுவாமி ராமதீர்த்தர் "லாகூர் பேர்மன் கிரிஸ்தியன் மகாபாடசாலை"யில் கணிதநூல் புரோபஸராய் நியமிக்கப்பட்டு அவ்வேலையில் இரண்டு வருடமிருந்தனர்.

லாகூர் கவர்ண்மெண்டு காலேஜில் அதுசமயம் பிரின்ஸ்பாலா யிருந்த டப்ளியூ. பெல். (Mr. W. Bell) ராமதீர்த்தருடைய அபரிமிதமான ஞானத்தையும் கௌரவத்தையும் கண்டு சீமையில்வைத்து நடத்தப்பட்டு வந்த பி. ஸி. எஸ். பரீக்ஷைக்கு (Provincial Civil Service.) போகும்படி சிபார்சு செய்தனர். ஆனால் சுவாமிகள் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனைவிட தமக்

---

தாய் மதக் கல்வியைப் பற்றி எண்ணவும் சந்தர்ப்பமில்லை. தாய் நாட்டின் தமிழ் இலக்க வடிவங்களும் தெரியாது என்று எழுதுகின்றார் ஒரு தமிழர். வெட்கம் வெட்கம்.

...பிரயத்தனங்கொண்டு கணித சாஸ்திர ஞானத்தை மாணவர்களுக்குப் ...திப்பதால் மிகவும் பிரயோசனமாகுமென்ற நல்ல உத்தேசத்தோடு அதன் போதகராகவே யிருந்துவந்தனர். ஆயினும் தமக்குக்கிடைத்த சந்தர்ப்பங்களில் கவர்ண்மெண்டு ஸ்காலர்ஷிப்பில் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் கணித சாஸ்திரத்தில் மிகவும் உயர்ந்த பரிக்ஷையான Senior Wrangleship-ல் சேர்ந்து படித்தும் வந்தனர். இவ்வாறு தொழிலிலும் படிப்பிலுமிருந்தாலும் தாம் விதிகர்த்தாவென்று சொல்லிக்கொண்டு வருவதில் கொஞ்சமும் பின்னடையவில்லை. 1899-ல் அதாவது 26-வது வயதில் வானப்பிரஸ்தராகவும் பிறகு ஒருவருடத்திற்குள் சந்நியாசியாகவும் தோன்றினர்.

சுவாமி ராமதீர்த்தருடைய தரிசனத்தால் ஒருமனுஷனுடைய ஜீவிய ரகசியங்கள் நல்வழியிலேயே திரும்பும்; ஆனந்தமும் புதியபுதிய உத்தம தோற்றங்களும் உண்டாகும். நவீனவிசேடங்களை நம்மிடையில் நட்டுப்பயிராக்கியும், இந்திரியங்களுக்கு ஓர் மந்தமாருதம்போல் தெய்வத்திற்கும் மனிதனுக்குமுள்ள வித்தியாச சங்கற்பத்தை வெளிபடுத்து வதிலேயே கருத்துச்சென்று கொண்டிருக்கும். அத்துவைத தத்துவத்தையும் ஆத்மீக சாஸ்திரத்தையும் குறித்து சுவாமிகள் செய்துள்ள உபதேசங்கள் மிகவும் அபாரஞானமுள்ளதாகவிருக்கும். ஆங்கிலபாஷையில் அபரிமிதமான பாண்டித்தியம் சித்திக்கப்பெற்றிருந்ததன்றி, சமஸ்கிருதம், ஹிந்தி, உருது, அரபி, பாரசிகம், குஜராத்தி, மகாராஷ்டிரம், வங்காளம் முதலிய பாஷைகளிலும் நல்ல பாண்டித்தியம் உண்டு. ஒவ்வொரு பாஷாப்பண்டிதர்களும் சுவாமிகளுடைய பலபாஷைக்கல்வி வாசனையைக்கண்டு ஆச்சரியப்படுவர். ஆதிசங்கராசாரியார், கபிலர், கௌதமர், பதஞ்சலி, ஜைமினி, வியாசன், கிருஷ்ணன், முதலிய புராதன பாரதீய வேதாந்திகளுடைய நூல்கள் முழுவதிலும் சரியான ஞானமேற்பட்டிருந்ததுமன்றி ஐரோப்பியா விற்பன்னர்களான கியாண்டு, ஹீஜில், கோத்திப் பிச்சற்ற, ஸ்பினுஸர், காம்ற்றே, ஸ்பென்ஸர், டார்வின், ஹேய்கல், ரிண்டல், ஹக்ஸிலி, ஸ்டார், ஜார்டன் புரோப்ஸர் ஜெபிம்ஸ் முதலிய பலருடைய கிரந்தங்களையும் வாசித்தும் கிரகித்தும் 1906-ல் நாலுவேதங்களையும் படித்து சகல மந்திரங்களிலும் ஒருசரியான பண்டிதராக விளங்கியதோடு அச்சமயத்தில் தமக்குக் கிடைக்கப்பெற்ற ஆற்பசொறப நேரங்களையும் விடாமல் இமயம் சென்று தபசிகள்—ரிஷிகளுடைய பிரமவித்தையையும், உபநிஷத்துக்களையும் பற்றித் தத்துவ விசாரஞ்செய்தும் வந்தனர்.

லாகூரிலுள்ள சநாதன தருமசபையில் உபந்நியசித்த "பக்தி" அல்லது "கிருஷ்ணன்" என்ற விஷயத்தில் அரியபெரிய காரிய சாரங்கள் அடங்கியிருப்பதுமன்றி, "கடல்வண்ணனை—ஸ்ரீகிருஷ்ணன் வேய்ங்குழலேந்தி என்னுடைய அந்தரங்கத்தில் சதாவிளையாடுகிறான்." என்று சொல்லியதாலும், ராவி நதிதீரங்களில் அநேக இரவுகள் யோகாப்பியாசத்தின் பொருட்டுத் தங்கியிருந்தமையாலும், ரிஷிகேசயத்திற்கு அடுத்துள்ள பிரமபுரிவனத்தில் ஞானியாக விருந்தமையாலும், மாயாவிமுக்த மார்க்கமாயுள்ள பரமாத்ம தெய்வத்தை நல்லவண்ணம் போற்றி அறிவுள்ள பெரியமகானாக விளங்கியதாலும்

---

"நாம் உண்மையான இன்ப மறிய வேண்டின் வாழ்க்கையில் நம் கடமையைத் தவறாது சரிவர நடத்திவருகிறோமா என்பதைக் கவனிக்க வேண்டும்."



...ன் ஆர்...

சுவாமிகள், இந்தியாவில் அவதரித்த பரமஹம்ஸர்களில் பிரதானமானவ... லொருவராகக் கணிக்கப்படுவதற் குரியவராக இருந்ததுமன்றி ஒருபெ... காயசித்தி அப்பியாசியாகவும் விளங்கினர்.

சுவாமிகள் தம்மை ஒருலோகமென்றும், தம்முடைய நகரத்தெருக்களில், புத்தன்பிக்ஷை இரந்து கொண்டும், கிரிஸ்து சத்தியத்தைப் பிரசங்கித்துக் கொண்டும் நடக்கிறார்களென்றும் பலசந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறார், இவ்விதமாக பரமானந்த ஜீவியம் சுவாமிகளிடத்துக் காணப்பட்டமையால் "ராமச்சக்கரவர்த்தி" (Emperor Rama) என்று சுவாமிகளுக்கு ஒருபட்டமும் பலரால் அளிக்கப்பட்டது. சுவாமிகள்:--"உங்களுடைய இருதய சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கக்கூடிய, 'ராமச் சக்கரவர்த்தி'யாகிய நான் பண்டைய வேதசாஸ்திரங்கள் உண்டானசமயத்திலும், குருக்ஷேத்திரத்தில் ஹிதோபதேசம் செய்தபோதும், ஜருஸலத்திலே சத்தியவேதத்தைப்பற்றி பிரசங்கித்த சந்தர்ப்பத்திலும், மெக்காவில் முகம்மதியோப தேசியாக விருந்தபோதிலும், என்னை நீங்கள் வெவ்வேறாகக் கருதியிருந்தீர்கள். நான் அந்த அவசரங்களில் வேறொரு வேஷதாரியாக விருந்து வந்திருக்கின்றேன். "தத்துவமசி அகம்பிரமம்" என்றிவ்வாறு ஒருசமயம் எழுதினார்.

தம்முடைய புஸ்தகம், பேனா, பென்சில் முதலிவைகளை ஜீவிகளென்று உருவகப்படுத்தி அவைகளோடு சம்பாஷணை செய்வாரென்றும் கேள்வி. பெரிதுசிறிது என்றோ, உத்தமம் அதமமென்றோ, சரம் அசரமென்றோ கூறப்படும் அவஸ்தைகளும் பேதங்களும் சுவாமிகளுக்கு கொஞ்சம்கூடக் கிடையாது. "இங்கே காணப்பட்ட எல்லாப் பொருள்களிடத்தும் நான் அந்தர்பவித் துள்ளேன், சூரியன் சந்திரன் நக்ஷத்திர முதலியவை என்னுடைய நரம்புகள் மாத்திரமேயாகும். இவைகள் என்னுடைய அனந்தகோடி பிரபையில் ஓரம்சம் கடன்வாங்கி ஜொலித்துக் கொண்டிருக்கின்றன. சூரியனைவிடப் பெரிதாயுள்ள என்னுடைய காந்தியின் விசேடத்தை உங்களால் அறியமுடியவில்லை. உங்களுடைய ஸ்தூலதிருஷ்டிக்கு புலப்படுவதில்லை. என்னை நீங்கள் காணவேண்டுமானால் சத்திய வேதாந்தபந்தாவில் நடந்துவாருங்கள். வைகுண்டமென்றோ, சுவர்க்கமென்றோ—நீங்கள் பரியாயப்பேராகக் கூறப்பட்டுவருகிற என்னுடைய பரிசுத்த ஆசிரமத்திற்குள்ள வழிப்பாதையின் பெயரானது "சத்தியம்" என்பதாகும். பிரஸ்தாபவழிப் பாதையைத் தேடுவதற்கு முன்பு என்னுடைய ஆசிரமத்துவார பாலகரான, சுயநலம், யத்தனம், தருமம் முதலியவைகளை சுவாதீனப்படுத்தினால் மைத்திரிரூபனான என்னுடைய சந்நிதிக்கு வழிகாணலாம். என்னை அடைவதற்கு சிரமப்படுங்கள். நான் சிலைகளிலும், விக்ரகங்களிலும் மட்டுமன்றி விருக்ஷாதிகளிலும் பறவை மிருகாதி ஜீவன்களிலும் பிரவேசித்து அங்குமிங்கும் நிறைந்து சலித்துக் கொண்டிருக்கிறேன். மனிதரிடத்து என்னுடைய சர்வசக்தியும் சோபித்துக் கொண்டிருக்கிறது. இப்படியாகும் என்னுடைய பிரகிருதம்" என்று காம்பீரியமான பிரசங்கத்தில் விமர்சனப்படுத்திக் கொண்டிருப்பார்.

அமெரிக்க யாத்திரையில் கப்பலிலிருந்த அமெரிக்கர்கள் சுவாமிகளை ஒரு அமெரிக்கராயும், ஜப்பானில் பார்த்தசமயம் அங்குள்ளவர்கள் சுவாமிகளை

---

"இந்து மதக் கொடுமையால் அநேக மக்கள் கிருஸ்து முதலிய பிற மதங்களில் சேர்ந்துவருகிறார்கள்."

னகாரராகவும், எகிப்திலிருந்தபோது அங்குள்ள முகம்மதியர்கள் சுவா மைய ஒரு முஸல்மானுகவும் கருதினர். இந்த உண்மையானது சுவாமிகளுடைய யோகபலத்தை விளக்குகின்றது. அங்குள்ளவர்கள் தங்களுக்காக ஒரு பிரசங்கம் செய்யவேண்டுமென்று கேட்டதற்கிணங்க அவர்களுடைய பாடசாலையில் ஒரு பிரசங்கம் செய்து அவர்களுடைய அவாவினைப் பூர்த்திசெய்தனர். அப் பிரசங்கத்தைப்பற்றி அங்குள்ள தினசரிப் பத்திரிகைகள் மிகவும் சிலாகித்துப்புகழ்ந்து எழுதின. சுவாமி ராமதீர்த்தரைப்போல் ஓர் சிந்திய தத்துவஞானியை இதுவரைகண்டதில்லை யென்றும், சுவாமிகளுடைய வருகையானது நம்நாடுசெய்த பூசாபலன்தானென்றும் போற்றின. டோக்கியோ சமஸ்கிருதப்பாடசாலை புரொபஸர் "டாக்காகுட்" சுவாமிகளைக் கண்டு சந்தோஷமான அபிப்பிராயங்கொடுத்துக் கொண்டாடினர்.

சுவாமிகள் அமெரிக்காவிலிருந்தபோது ஆங்குள்ள ஒருசங்கத்தின் வருடதினக் கொண்டாட்டத்தின் போது, அங்குள்ள ஒரு மாதாகோவிலில் ஒருபெரிய கூட்டங்கூட்டி அதில் எல்லாத்தினங்களும் நவவருட ஆரம்ப தினங்களென்று ஒரு ரசமான பிரசங்கம் செய்தனர். இவைகளை நோக்கும் பொழுது சமஸ்த மதங்களிலும் சுவாமிகள் சர்வமத ரூபகாரணராக விளங்கி அவைகளைத் தாம் அங்கீகரித்து வருவதுபோலவே சமஸ்தரும் அங்கீகரித்து, ஜாதிமத வித்தியாசமின்றி இருப்பதற்கு போதிய ஞானத்தை ஊட்டிவந்தனரென்பது போதரும். இத்தகைய ஞானிகள் பிறந்தும் நம்மக்களிடையே சாதிமதப்பூசல்கள் இன்னும் ஒழியாதிருக்கின்றன.

"உலக முழுவதும் என்னுடைய சிருஷ்டியாகும். சூரிய சந்திராதிகளை சமுத்திரத்திலிருந்து உயரக்கிளம்பச் செய்து அவைகளைப் பிரகாசிக்கும்படி செய்தது நான்தான். அவ்வாறுள்ள எனக்கு எதாவது மதம்உண்டோ? எல்லாமதமும் என்னுடையவைதான்." என்று உங்களுடைய மதம் எது என்ற ஒரு ஜப்பானியருடைய கேள்விக்குப் பதிலளித்தனர்.

அமெரிக்காவில் ஓர்சமயம் ஒரு நாஸ்திகனுக்கும் சுவாமிகளுக்கும் வாதப் பிரதிவாதம் நடந்தது. அதுவருமாறு:—

நாஸ்திகன்:—எதாவது புதியமதத்தை உண்டுபண்ணுவதற்காகவா இங்கே வந்திருக்கிறீர்கள்?

சுவாமிகள்:—நான்யாதொரு மதத்திற்கும் மத்தியஸ்தனல்ல. உண்மையான தத்துவமே மத்தியஸ்தத்தை வகிக்கும்.

நாஸ்திகன்:—அப்படியானுல் தாங்கள் ஒரு உபதேசியினுடைய நிலையிலா வந்திருக்கிறீர்கள்?

சுவாமிகள்:—ஒருகாலுமில்லை; அகிருத்யம் தெய்வீகமாவதில்லை. நான் சாக்ஷாத் பரப்பிரமமாகும். தாங்களும் அவ்வண்ணமே. இந்த உடல் எனது

---

பெரிய ஐஸ்வரியவந்தர்கள் வீண் செலவு ஒழித்து வழக்கத்துக்குக் கொண்டுவந்தால் எழைகள் அதன் பகுதியைச் செலவு செய்து செட்டுடன் வாழ்வார்கள்.



வாகனமாத்திரமேயாகும். இவ்வாறுள்ள நான் ஒரு வேஷதாரியாக ஏன் ஆக வேண்டும்?

நாஸ்திகன்:—உங்களுடைய இப்பிரசங்க சாரங்கள் பொதுவாய் அங்கீகரிக்கப்படுமென்று தோன்றவில்லை.

சுவாமிகள்:—அங்கீகரிக்கப் படாவிட்டால் அதனுல் எனக்கென்ன வேண்டும்? தத்துவசொரூபனு யிருக்கிற நான் துச்சமாகிய இச்சைகளை எண்ணி இங்கே புறப்படவில்லை. நான் "நிஷ்காமியன்" என்பதை நீ அறியவில்லை என்பதும் எனக்குத்தெரியும். காலமென்ரூ, ஸ்திதிமெ கிறிஸ்துவினுடைய ஜீவியகாலத்தில் அம்மகானுபாவனை துஷ்டர்க படுத்தினர்களாயினும் அவருடைய தேகவியோகத்திற்குப் பிறகு மும் புகழவில்லையா?

நாஸ்திகன்:—வெறும் சரித்திர பிரசித்தமான இந்தத் தா உங்களுடைய மனோபாவத்தை நிர்ணயிப்பது பற்றி சந்தேகிக்கி

சுவாமிகள்:—அப்படியானுல் கிரகித்துக் கொண்டுவருகிற அபூர்வமென்றுகூற நான் சந்தேகிக்கவில்லை. முதல் முதல்பட்ட சு தை விவரப்படுத்திய சரித்திரத்தின் சுத்தாத்தியாயத்தை நீங்கள் இதுவரை படிக்காதிருக்கலாம். சரித்திரங்களை உண்மையான இலக்ஷியங்களோடு படிக்காவிட்டால் அவைகளுடைய நிர்வியாச தத்துவத்தை ஆராய்ந்துணர்வது சாத்தியமில்லை.

## சந்தா நேயர்களுக்கு

நமது "ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை ஒவ்வொரு தமிழ் மாத முதல் தேதியிலும் எக்காரணத்தை முன்னிட்டும் நிறுத்தப்படாமல் தபாலில் சேர்க்கப்பட்டு வந்தும் சிலர் சஞ்சிகை கிடைக்கவில்லை என்று எமக்கு அடிக்கடி தெரிவிக்கின்றனர். இந்த நண்பர்கள் அந்த அந்த ஊர் போஸ்டு மாஸ்டருக்கு விஷயந் தெரிவித்தால் சஞ்சிகைகள் ஒழுங்காகக் கிடைத்து வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ப-ர்.

---

"நாய் வேண்டும் போதல்லால் சேருவதில்லை. வருஷத்தில் ஒரு முறை குறிப்பிட்ட மாதத்தில் சேர்ந்து பின்னைப் பேறடைகின்றது."

# புத்திர பாக்கியம்

(எஸ். சேஷையர்.)

உலகத்திலே இல்வாழ்வானொருவன் அடையும் பேறுகளுள் நன்மக்கட் பேறே சிறந்ததாம். ஏனெனில் 'புத்' என்னும் நரகத்தைக்கடந்து வானுலகடைவதற்கும் தேவர் முனிவர் பிதுர்க்கடன்களைச் செய்வதற்கும் பிள்ளைப்பேறு இன்றியமையாததாம். பண்டைக்காலத்தில் பலர் எல்லாப் பாக்கியங்களைப் பெற்றிருந்தும் புத்திரப் பேறின்மையால் காட்டிற் சென்று கடுந்தவம் புரிந்தனர் என்பது நூல்கள் வாயிலாய் அறியக் கிடக்கின்றது. தற்காலத்திலும் அநேகர் மைந்தரில்லாக் குறையால் மனம் வருந்தி நாகப் பிரதிட்டை, அரசமரப் பிரதட்சணம், க்ஷேத்திர யாத்திரை முதலிய அறங்களை இயற்றக் காண்கின்றோம்.

மக்களில்லா மனை எத்தகைய பொருள்களால் நிறைந்திருப்பினும் பொலிவிழந்து நிற்கும். இதனை,

"பண்ணிலாப் பாடல்போலும் பரிவிலா நட்புப்போலும்
உண்ணிலா நெய்யிலாம லுண்டிடும் அடிசில்போலும்
பெண்ணிலா இல்லம்போலும் பெயரிலா வாழ்க்கைபோலும்
கண்ணிலா வதனம்போலும் கான்முளையில்லா யில்லம்"

என்ற செய்யுளே நன்கு விளக்கிக்காட்டும்.

மாந்தருள் மக்களை விரும்பாதவர் எவருளர்? அரசன் முதல் ஆண்டியீறாகவுள்ள அனைவருமே அவாவுவர். புத்திரப் பேற்றாலடையு மின்பம் யாவர்க்கும் ஓரே தன்மைத்து. ஒருவனுக்கு இடம், பொருள், ஏவல் எல்லாம் வாய்ந்திருப்பினும், பேர் விளங்கப் பிள்ளை மாத்திரம் இல்லாதுபோனால் அவன் வாழும் வாழ்வு பயனற்றதே. இது கருதியன்றோ,

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—வின்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லாதவர்"

என்று நளவெண்பாவிலும் நயம்படக் கூறப்பட் டிருக்கின்றது.

சற்புத்திரரால் இம்மை மறுமைப் பயன்களை யெய்துதல் திண்ணம். நன்மக்களைப்பெற்ற ஒருவனுக்கு அப்பிள்ளைகள் செய்யும் நல்வினையால் எழுபிறப்பிலும் அவனைத் தீவினைகளே அணுகுவதில்லை.

---

இந்தியாவில் கைத் தொழிலில்லாமையால் அதிக ஜனங்கள் வயிற்றிற்குப் போதிய ஆகாரமில்லாமல் வாடி வதங்குகின்றனர்.



குடும்பத்திற்குக் குழந்தைகளே செழுங்கனி. குழந்தைகளே குலக்கொழுந்து, குழந்தைகளே குடும்ப விளக்கு, குழந்தைகளே இருநிதி, குழந்தைகள் முகத்தைக்கண்டால் கோடிக் கணக்கான துன்பங்கள் கதிரவன் முன்னர்க் காரிருள்போல நீங்கும். பசுங்குழவிகள் பளிங்குபோன்று களங்கமற்ற மனத்தையும் செந்தாமரை மலர்போன்ற முகத்தையும் புன்னகையுங்கொண்டு, தவழ்ந்தும், குறுந்தளிர் மெல்லடியால் கிண்கிணி யசைய நடந்தும் பெற்றோரைப் பெரிதும் மகிழ்விக்கின்றன. மக்கள், தம்முடைய அழகிய சிறு கைகளினால் அளாவிய சோறானது அமிழ்தினும் இனியதாகும், மக்கள் மெய்தீண்டல் பெற்றோர் உடலுக் கின்பம், மற்று மம்மதலைகள் அமுதமூற் றிருக்கும் குமுதவாயலர்ந்து கூறும் இளங்குதலை மொழிகளாற் செவிக்கு இன்பத்தைத் தருகின்றனர். குழந்தைகளின் மழலைச் சொற்களைக் கேளாதவரே குழலிசையும் யாழிசையும் இனிதென்று சொல்லுவார்கள்.

இத்தகைய இருமைப் பயனையும் அளிக்கவல்ல புத்திரர்களைப் பெற்றுவிடுவது பெரிதல்ல. அவர்களை நல்வழியிற் றிருப்பி வளர்ப்பதுதான் பெரிது. பெற்றோர், தம் மக்களைச் சிறு பிராயத்தி லிருந்தே நன்னடக்கையிற் பழக்கிவரவேண்டும்.

"நேசனைக் காணவிடத்து நெஞ்சாரவே துதித்தல்
ஆசானை யெப்பொழுது மப்படியே—வாச
மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலை முடிவில்"

என்றவாறு நாம் அவர்களிடம் வைத்திருக்கும் விஞ்சையை வெளிக் காட்டாமல் குற்றங்கண்டவிடத்து உடனே தண்டித்துத் திருத்தவேண்டும். பிறகு துள்ளித் திரிகின்ற காலத்திலே துடுக் கடக்கி, துஷ்டர்களுடன் சேராமற் றடுத்து பள்ளியிலே வைத்துத் தக்க கல்வியை முறையாகப் போதிக்கவேண்டும். என்னை? 'பொருளிலார்க் கிவ் வுலகமில்லை' யென்று புகழ்ந்து கூறப்பட்ட செல்வத்தைச் சேர்த்தளித்தலமை யாதோவெனிற் கூறுதும்: கல்வியறிவில்லாதவனுக்கு நிலையில்லாத செல்வம் முற்றுந் துன்பத்தையே கொடுக்குமாகலின் "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி"யே யாமென்க. இக் கல்வியினும் தாய்ப்பாஷைக் கல்வி மிக முக்கியம் என்பதை மறத்தல் கூடாது. மேலும் நல்ல நீதிகளை இனிய கதைகள் மூலமாகப் புகட்டி மனதிற் பதியச் செய்தல் உத்தமம். மத சம்பந்தமான விஷயங்களையும் சிறுகச் சிறுகச் செப்பவேண்டும். இன்னும் மனித வாழ்க்கைக்கு அவசியமாய் வேண்டிய தெய்வ வழிபாடு, பெற்றோர் வணக்கம், குரு பக்தி, நன்றி மறவாமை முதலான நல்லொழுக்கங்களையும் கூடவே கற்பிக்கவேண்டும். தேசத்தின் எதிர்கால க்ஷேமத்திற்குக் கருவிகளாயிருக்கும் நஞ்சிறார்களுக்கு நல்ல வீரர்கள் சரிதையின்மூலம் தேசபக்தியைப் புகட்டுதல் மிக்க நலமே. பெற்றோர்கள் போதிப்பதோடு நில்லாமல் தாமும் அவ்வழிநின் றொழுகிக் காட்டல்வேண்டும்.

---

சில ஆண்மக்கள் முதலாவதாகச் செய்த மனைவி இடையில் காலமாக மறுமுறை புதிதாக மங்கையரை கலியாணஞ் செய்துகொள்ளுகிறார்கள். பெண்கள் சிறு வயதில் மாங்கல்ய மிழந்தால் தாலியறுத்தவளென்று தள்ளி வைத்துப்போடுகிறார்கள்.

எனெனின் சிறுவர்கள் மனம் ஒருவர் செய்யும் செய்கையையே பின்பற்றும் சுபாவமுடையது. தாய் தந்தையர்கள் தம் மக்களோடு கொஞ்சிக் குலாவும் மகிழ்ச்சியிலே விளையாட்டுக்காகவேனும் கெட்ட சொற்களைச் சொல்வதும் துர்க்காரியங்களைச் செய்யச் சொல்வதும் கூடாவாம்.

இவ்வீறு கல்வி கேள்விகளிற் சிறந்து செவ்வனே வளர்க்கப்பட்ட புத்திரன் யாவர்க்கும் நன்மையே செய்வானாதலால் பெற்றோர்க்கே யன்றி மற்றோர்க்கும் மகிழ்ச்சியை யுண்டாக்குவான். இவனைக் கண்டோர் யாவரும் 'இவனைப் பெறுவதற்கு இவன் தந்தை என்ன மாதவஞ் செய்தானோ' என்று கூறித் தந்தையை மகிமையடையச் செய்வர். தாயும், தன் மகன் பெரியோர்களால் "சான்றோன்" என்று புகழப்படுவதைக் கேட்டு அவனைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியினும் கழிபேருவகை யெய்துவாள். இதனினும் மிக்கதோர் பாக்கியம் உளதோ?

ஆதலா லருந்தமிழ் அறிந்த அன்பர்களே! நாமனைவரும் நல்லறமாகிய இல்லறத்தை இனிதியற்றி நன்மக்களைப் பெற்று அதனால் நற்பயன் அடையுமாறு ஜெகதீசன் நல்லருள் பாலிப்பானாக. உலகம் பிழை பொறுக்க.


"ஆனந்தபோதினி" மாத சஞ்சிகை

தெலுங்குப் பதிப்பு.

(0)

நமது "ஆனந்தபோதினி" தமிழ்மொழியில் மாதப் பதிப்பும், வாரப்பதிப்பும் வெளிவந்து தொண்டாற்றி வரும் விஷயம் எல்லாரும் அறிந்ததே. இப்பொழுது "ஆனந்தபோதினி"யைத் தெலுங்கு மொழியிலும் ஜூன் முதற்கொண்டு ஒவ்வொரு இங்கிலீஷ் மாத முதல் தேதியில் வெளிவர ஏற்பாடு செய்திருக்கின்றோம். தமிழ் நேயர்கள் தங்களுக்குத் தெரிந்த தெலுங்குப் பயிற்சியுள்ள நண்பர்களுக்கு இவ்விஷயத்தைத் தெரிவித்துச் சந்தாதாரர்களாகச் சேரும்படி தூண்டுமாறு வேண்டுகின்றோம். மாதிரி காபி இனும்


வருட சந்தா தபாற்கூலி உள்பட

உள் நாடுகளுக்கு ... ரூபா 1—0—0

வெளி நாடுகளுக்கு ... ,, 1—4—0

மானேஜர்.


"வாரத்திற்கு ஒரு முறை விரதமிருந்தால் உடல்நல முண்டாகும். இதனையே பெரியோர்கள் விரதநாட்களாக விருந்துவரக் கட்டளை இட்டுள்ளார்கள்."




## வீட்டுரிமை.

(பண்டித. பூ. ஸ்ரீநிவாசன்.)

இப்பரந்த வுலகமாகிய நாடகமேடையில் நடிகர்களாக வமைந்துள்ள நாம் ஆடிப்பாடி அலுத்து "அப்பா! போதும்! இந்த வேலையே வேண்டாம். நம் தலைவனிடம் சென்று சேர்ந்துவிட வேண்டும்" என்றெண்ணி, அதற்கேற்ற நெறிகளைக் கடைப்பிடித் தொழுகுவோமாயின் அத்தலைவராகிய கடவுள் அருள்கூர்ந்து இவ்விலங்கி (பந்தத்தி)னின்றும் விடுவித்து துன்பந்துடைத்து மீட்டும் இம்மேடைக்கு வாராதவாறு நம்மைத் தம் மருகில் இன்பநிலையி லிருத்துவார் என்னும் நம்பிக்கை "நமக்கும் இவ்வுலகத்திற்கும் ஒரு தலைவன் உண்"டென்றெண்ணுவோ ரனைவர்க்கு முண்டு. அவ்விடுதலையே வீடெனப்படும். வடமொழியாளரும் அதனை அப்பொருளிலேயே மோக்ஷம்—முத்தி என்பர். விலங்கினின்றும் விடுபட்டா னொருவன் தன்னிருக்கை சென்றடையா திராததுபோல் இவ்வுலக நாடகமேடையினின்று விடுதலை பெறுவோரும் யாதானு மோரிடத்தை யடையாதிருப்பதில்லை. ஆகவே, அவ்விடமே வீடு எனக் கூறுவோர் கூற்றும் ஏற்றதேயாகும்.

அத்தலைவனை அடைதற்கேற்ற நெறிகளோ பலவாகவுள்ளன. ஒவ்வொரு நெறியும் பலரால் பின்பற்றப்படுகின்றது. அவ்வந் நெறிகளிற் செல்வோ ரொவ்வொருவரும் "யாம் செல்லும் நெறியே செந்நெறி. இதிற் செல்வோரே வீடடைவர்" எனக் கூறுகிற்பர். எல்லா நெறிகளையும் நடுநிலையினின்று நோக்கும் பெரியோர் அங்ஙனம் கூறாது அனைத்தும் சமமே யென்பர். பேத நோக்கின்றிப் பார்க்கின் எல்லா நெறிகளுள்ளும் சிறப்பு வகையிற் பேதமேயன்றி பொதுவகையிற் பேதமேதுமின்று என்பது புலனாம். அன்றியும் ஒரே பெயரால் அழைக்கப்படும் நெறியினுள்ளும் பல பிரிவுகள் காணப்படுகின்றன. இந்துமதம் தவிர மற்ற மதங்களிலுள்ள பாகுபாடுகள் அனுஷ்டான பேதத்தாலுண்டாயினவாயினும் தலைவன் விஷயத்தில் மாறுபடுவதில்லை. ஆனால், இந்துமதமோ அவ்வாறில்லை. தவிர, இந்துமதம் என வொன்றிருப்பதாகக் கூறப்படுகின்றதே யன்றி எந்த மதம் இந்து மதம் என்று தேடுமிடத்து அது

இரவெல்லாம் நாம் நித்திரை செய்கிறோம்; அப்பொழுது நமது இரத்தமு மடங்கிக் கிடக்கும். நித்திரையினின்று எழுந்ததும் என்ன பயிற்சி வேண்டும்? தேகப்பயிற்சி செய்யவேண்டும்.

காணப்படுவதில்லை. 'நான் வந்தேன்' என்றியம்பு மொருவனை ' என்று கேட்டால் அவன் தன் பெயர் கூறுவான். 'அப் பெயரின் பொருள் எது?' வென்றால் "இதோ" என்று மார்பைத் தொட்டுக் காட்டுவ 'அதுவா நீ?' என்றால் 'இல்லை மார்பு' என்பான். 'அப்படியானால் நான் பது எங்கே?' என்றால் விழிப்பான்" என்று, "விசாரியாதபோது உளதாகத் தோன்றி விசாரணையில் இல்லாமற் போகும் வஸ்துக்களை" யாராய்வதுண்டு அத்தகைய விசாரணையையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருப்பது என்பதை யுணர்த்தவே இப்பெயரிடப்பட்டது போலும்! அல்லது எக்காரணத்தாலோ இந்துக்களென் றழைக்கப்படுவோரால் கைக் கொள்ளப்பட்டிருக்கும் நெறிகளெல்லாவற்றிற்கும் பொதுவாக இப் பெயரமைந்துள்ளது போலும். வைணவம் சைவம் என்னுமிரண்டுமே பொதுவாக இந்துமதம் என்னும் பெயரா லழைக்கப்படுகின்றன. இவற்றுள் பிடிவாதக்காரராகிய சில வைணவர்கள் இந்துமதத்துட் சேராத பிற மதங்களை வெறுப்பதுபோலவே சைவத்தையும், அப்படியே சைவர்கள் வைணவத்தையும் வெறுப்பார்கள்; தூஷித்தலும் செய்வர். ஆனால் இப்பிடிவாத வகுப்பினரால் பிற்காலத்திற் பிறப்பிக்கப்பட்ட நூல்களை யன்றி அவற்றிற்கு முற்பட்ட நூல்கள் இவ்வெறுப்பிற்கும் தூஷணைக்கும் இடந்தருவதில்லை. ஒப்ப நோக்குமென்பதை இவர்களறிவதில்லை. அறியினும் நம்புவதில்லை. இனி இவ்விஷயத்தை இவ்வளவோடு விட்டு இந்து மதத்தில் தற்போது காணப்படும் முறை கேடான மற்றொரு விஷயத்தை யாராய்வோம்.

விஷய வளர்ச்சியில் அபிப்பிராயங் கூறும்போது ஏதேனும் குறை கூறுவதாகக் காணின், அது, துவேஷங் காரணமாக வரையப்பட்டதெனக் கொள்ளாது, "கூறுவது சரியா தவறு! உண்மையா பொய்யா?" என்று நோக்குவது அறிஞர் கடமையாம் என்பதை அன்பர்களுக்கு ஞாபக மூட்டுகிறோம்.

எங்கள் கடவுளை வழிபடுவோர்க்கே மோக்ஷமுண்டா மென்னும் பலதெய்வபுத்தி ஒருபுற மிருக்க, இன்ன ஜாதியாரே மோக்ஷத்திற் குரியவரென்னும் பெருந்தவறான கொள்கையும் இம்மதத்தினரிடத்து இன்னும் இக்காலத்தும் காணப்படுவது மிகவும் விசனிக்கத்தக்க காரியமாம்.

பிறமதமெதினும் பிறநாடெதினும் காணப்படாத ஜாதிப் பிரிவினைகள் இந்துக்களெனப் படுவோரிடத்துக் காணப்படுவது கண்கூடு. இப் பிரிவினைகளுள் ஏற்றத்தாழ்வு கற்பித்துக்கொண்டு போரிடுவதொரு புறமிருக்க, எல்லா ஜாதிகளினு முயர்வானது பிராமண ஜாதியேயென்றும், அந்த ஜாதியினரே மோக்ஷத்திற்குரியவர்களெனவும், ஆகவே வேதமோதவும், அதனைப் பிறர்க்குப் போதிக்கவும், கடவுள் சம்பந்தமான காரியங்களை யாற்றவும் தாங்களே உரியவர்களென்று அதற்கேற்றவாறு ஆசாரியர் குருக்கள் என்பன போன்ற பட்டங்களையும் கொண்டிருக்கின்றனர். பிறரும் அவர்களை அங்ஙனமே மேன்மையாகக் கொண்டு அவர்களை வணங்குவதும் அவர்களுக்கு வேண்டிய தளிப்பதும் கீழ்ப்படிந்தொழுகுதலுமே நன்மையா மெனக்கருதி நடப்பர். இம்முறை

பழம் கோவில்களை இடித்துக் கட்டிவைப்பதைக் காட்டினும், கல்வி இல்லா ஏழை மக்களுக்குக் கல்விச்சாலைகளை ஏற்படுத்தி வைத்தல் கடவுளிருக்குமிடத்தைக் காட்டிவைத்ததை ஒக்கும்.



கள் எப்போது யாரால் ஏன் ஏற்பட்டன என்பவற்றைச் சமயம் நேர்ந்துழிப் பின்பு ஆராய்வோம். ஈண்டு எடுத்துக்கொண்ட விஷயத்திற் கேற்ப மோக்ஷத்தை யடையும் உரிமையும் அவர்களுக்குத்தான் உண்டா? அன்றிப் பிறர்க்குமுண்டா? என்பதை மட்டும் ஆராய்வோம்.

அப்படி பிராமணர்களே முத்தியடைதற்குரியவரென யாரேனும் கூறுகின்றனரோ வெனின்: உயர்ந்தோர் எனவும், வேதமோதுதற் குரியோரெனவும், ஆசாரியராயிருத்தற் குரியோரெனவும், ஆலயங்களில் பூசையாதிய புரிதற்குரியோ ரென்றும் கூறப்பட்டும், அனுஷ்டிக்கப்பட்டும், வருதலே போதிய சான்றாகும். அன்றியும் அத்வைத மதத்தை நிலை நாட்டவந்த சங்கரும் "ஜந்துக்களுள் மானிடப் பிறவி மிகவுமரிது, அதிலும் புருஷத்தன்மை யரிது. அதிலும் பிராமண ஜன்மம் அரிது" என்று பிராமணரையே உயர்வாகப் பேசியுள்ளார் எனின் இதினும் வேறென்ன வேண்டும்.

வைணவம் சைவம் என்னும் இருமத நூல்களிலும் மோக்ஷ மடைந்தவர்களாக வெண்ணப்படுவோரின் சரிதைகளைப் பார்க்குமிடத்து உயர்ந்த ஜாதியாரெனக் கருதப்படுவோர் முதல் தாழ்ந்த ஜாதியார் வரையிலுமுள்ள யாவரும்—ஆண்களும் பெண்களும்—கற்றோரும் கல்லாதவரும்—காணப்படுகின்றனர். வைணவ மதத்தினருள் பாணரும் சைவருள் நந்தனும் இழிந்த வகுப்பினரே. ஏறக்குறைய எல்லா ஜாதியினரும் அவர்களுள் காணப்படுகின்றனர். இவர்களனைவரும் ஈசுவரனருளைப்பெற்று முத்தியடைந்தோரே. அவர்கள் சரிதங்களுள் மற்றோர் அற்புதத்தைக் காண்கின்றோம். கடவுள் இழிகுலத்தவராகிய பாணரைத் தோள்மேற் சுமந்து வருமாறு ஓரந்தணருக்கு அக்ஞாபிக்க அவர் அங்ஙனமே தூக்கிச் சென்றாரென்றும், வேளாள குலத்தைச் சேர்ந்த வாகீசரிடம் அப்பூதி என்னு மந்தணர் பக்தி பூண்டொழுகி அவரைத் தரிசித்த வளவில் தம் மனைவி மக்களுடன் மலரடியில் விழுந்து வணங்கினதோடு அவருடனிருந்து அமுதுண்டதாகவும் சரித்திரங்கள் கூறுகின்றன. இதனால் அந்தணரே ஆண்டவனருளுக்குப் பாத்திராவர் என்பது சிறிதும் பொருந்தா தென்பது விளங்கவில்லையா! இன்னும் இவைபோன்றன பலவுளவேனும் மிகப் பிரசித்தமாகலின் இவைகள் மாத்திரம் காட்டப்பட்டன. இவற்றைச் சைவ வைணவர்கள் அறிந்திலரோ? மேலும்,

"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தாற் கன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"

எனவும்,

"பாதியா யழுகியகால் கையரேனும்
பழிதொழிலு மிழிகுலமும் படைத்தோரேனும்
ஆதியா யரவணையா யென்பாரில்
அவர்கண்டீர் யாம் வணங்கு மடிகளாரே"

எனவும், முறையே சைவ வைணவப் பெரியார் பேசி யிருக்கின்றனரே. அதி

"பன்றியோடு கூடிய கன்றும் மலர் தின்னும்"

னும் இவ்வைணவப் பெரியார் அந்தணர் குலத்தினராவரோ. தவிர, அவர்கள் கோத்திரத் தலைவர்களாகக்கொண்ட முனிவருட் பலர் இழிகுலத்தரென்பது பொய்யோ? வான்மீகி முனிவர் வேடஜாதியின ரல்லரோ? வியாச பகவான் செம்படவனால் வளர்க்கப்பட்ட மச்சகந்தியின் மைந்த ரல்லரோ! விசுவாமித்திரர் அரசவமிசத்தின ரன்றோ? இவர்கள் எவ்வாறு யாவரானும் இறைஞ்சத்தக்க முனிவராயினர்? அவர்கள் கோத்திரத்தைச் சேர்ந்தோர் உயர் குலத்தினராவ தெங்ஙனம்? "பிரம்மாவின் முகத்தினின்றும் தோன்றினோர் பிராமணர்" எனக் கூறின்: நல்லது பிரமன் பிராமணனாவதெப்படி? ஜாதி குலம் பிறப்பு இறப்பு முதலியவையில்லாத நாராயணனது நாபிக்கமலத் துற்பவித்தவன் எந்த ஜாதியைச் சேர்ந்தவன்? அவன் முகத்தில் தோன்றினோர் எந்த ஜாதியைச் சேர்ந்தோர்? அதே பிரமனிடம் தோன்றிய பிறர் வேறு ஜாதியினராவ தெங்ஙனம்? "பிராமணர் முகத்தில் தோன்றினோர்; ஏனையோர் பிறவுறுப்புக்களில் தோன்றினோர்; ஆகலின் முகத்தில் தோன்றினோர் உயர்ந்தோர்" எனின்; அந்தப் பிரமன் முகம் பிராமண ஜாதியாயும், தோள் க்ஷத்திரிய ஜாதியாயும், வயிறு வைசிய ஜாதியாயும், கால் சூத்திர ஜாதியாயும் இருக்குமோ? இராவே. ஆகவே, ஜாதியால் பிராமணர் எனப்படுவோரே உயர்ந்தோ ரென்றும் அவர்களே வீடு பேற்றிற்குரியவர் என்றும் கூறுதற்குச் சிறிது மிடமில்லை என்க.

ஞானமே வீடு பேறளிப்பதாமென வேதங்களனைத்தும் ஒரு படித்தாக விளம்புகின்றன. அதன்படி பிராமண வகுப்பினர் ஞானமெய்தப் பெற்றிருத்தலின் அங்ஙனம் கூறுவது குற்றமாகாதே எனின்: பிறரும் அந்த ஞானத்தைப் பெற்றவர்களா யிருக்கலா மன்றோ? அவர்களும் பிராமணர் என்றழைக்கப்படலாமே. தவிர, பெரும் உழைப்பினா லடையத்தக்க ஞானத்தைப் பிறப்பினாலொருவன் அடைதல் கூடுமோ? ஞானிகள் ஒரே தன்மையினவாகிய இரத்தம் மாமிசம் என்பு முதலியவற்றாலாகிய சரீரத்தை நான் என்று அபிமானித்து பேத புத்தியுடன் நான் உயர்ந்த ஜாதியான் நான் பிராமணன் எனக் கூறுவரோ? அது ஞானிகளின் இலக்கண மல்லவே. அது அஞ்ஞானிகள் இலக்கண மல்லவோ! சரீரத்தை நோக்கி யன்று. அதற்குள்ளிருக்கும் ஜீவனை அல்லது ஆன்மாவை நோக்கி அவ்வாறு கூறுவரெனின், அதுவும் பொருத்த மன்றே. நீர்நிலைக ளனைத்தினும் பிரதிபிம்பித்துள்ள சந்திரன் ஒன்றாயிருத்தல்போல எல்லா அந்தக்கரணங்களினும் பிரதிபிம்பித்திருக்கும் ஆத்மப்பொருள் ஒன்றேயென் றுணராதவர் ஞானிகளாகார் என நூல்கள் நுவலும். இதனாலும் 'நீ, நான், அவன், அது' என்னும் பேதபுத்தியுடையோர் ஞானிகளாகார் என்பது விளக்கமாம். இவ்வாறு எவ்வகையாற் காணினும் கடவுள் படைப்பினு ளடங்கிய யாவரும் அவர் பார்வையிற் சமமானவர்களே. அவரடியை—முத்தியை—அடைதற் குரியவர்களே என்பது தேற்றமாம்.

அங்ஙனமாயின், பிராமணரே வீடுபேற்றிற் குரியார் எனப்படுவது குற்றமே யன்றோ எனின் அன்று, அன்று. ஆனால் அத்தகைய பிராமணர் யார்?

---

"செட்டாய்ச் செலவிட்டு வந்தால் செட்டு என்று பெயர். இதையே இப்பொழுது செட்டி என்றும் செட்டியார் என்றும் வழக்கத்துக்குக் கொண்டு வந்துள்ளார்போலும்"



என்பதுதான் கேள்வி. பிரம ஞானத்தை யுடையவனே பிராமணன் என்னும் உண்மையை ஒப்புக்கொண்டால் விஷயமே முடிவிற்கு வந்து விட்டது போலாகும். அந்தப் பிராமணர்களுக்கே வீட்டை அடையும் உரிமையுண்டு. வீடுபேற்றை விரும்பும் ஒவ்வொருவரும் பிராமணராதல் அத்தியாவசியம். பாணர் பிராமணரே. நந்தனார் பிராமணரே. நாடு முழுவதும் அத்தகைய பிராமணர்கள் பல்கிப் பெருகவேண்டும். ஒவ்வொருவரும் பிராமணராக முயலவேண்டும். ஆத்மானாத்ம விசாரமுடைய அந்தப் பிராமணர்களிடத்தில் சாதி சமயப் பூசல் அணுகுவதில்லை. சமநோக்கு, சமபாவனை, தியாகம், தன்னலமறப்பு, அகங்கார மமகாரமின்மை முதலிய அருங்குணங்கள் அவர்களிடத்தேதான் முழு ஆற்றலுடன் மிளிரும். ஒற்றுமை பெருகும்; வேற்றுமை யழியும். உடலைப்பற்றிப் பாராட்டப்படும் ஜாதி பிராமணத்தன்மை யொழிதல் வேண்டும். உண்மையான—பெயருக்குத் தகுந்த—பிராமணத்தன்மை பெருகுதல் வேண்டும். அப்பொழுதுதான் நமது பாரதநாடு பண்டைய புனிதத்தைப்பெற்று பிறநாடுகளும் தன் நெறிபற்றி யொழுகத்தக்க வீறுடன் விளங்கும். ஆகவே யாவரும் ஆத்ம ஞானத்திற்குப் பெருந்தடை கல்லாத விருப்பதும் வெறுங்கற்பனையாக வுள்ளதுமான ஜாதிப்பாகுபாட்டைக் கைக்கொண்டு, நான் உயர்ந்த ஜாதியான் என்னும் அகங்காரப்பேய்வாய்ப்பட் டழியாமலும், நான் தாழ்ந்த ஜாதியான் என்று தாழ்வ படுத்திக்கொண்டு கீழ்நோக்கிச் செல்லாமலும் நமது யதார்த்த சொருபத்தையுள்ளவா றறிந்து பிராமணத் தன்மைபெற்று சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தி வடிவ வீட்டை யடைய முயல்வோமாக. அவ்வீடு அனைவர்க்குஞ் சொந்தம். இன்னார்க்குரியது இன்னார்க்குரிய தன்று என்பதில்லை. பறவைகளும் மிருகங்களும் அதனை யடைதற் குரிமை பெற்றனவே! அவ்வாறடைந்ததாகச் சரித்திரங்கள் சாதிக்கின்றன. ஜடாயு, வாலி, முதலியவர்களின் சரிதைகள் விளக்குவதென்ன? கரிக்குருவிக் குபதேசித்ததும் நாரைக்கு முத்தி கொடுத்ததுமாகக் காணப்படும் திருவிளையாடற் புராணக்கதைகளை நோக்குக. முள்ளிச்செடிக்கும் முத்தி யளித்ததாகக் கதையிருக்கிறது. இக்கதைகளின் கருத்தை யுள்ளபடி யாராய்ந்தறிவோமானால் எரிகின்ற வெய்யிலும் வீசும் காற்றும் யாவருக்கும் உரிமையானவையா யிருப்பதுபோல, வீடும் யாவர்க்கும் உரியதா மென்பதை யுணர்ந்து அதனை யடைதற்கேற்ற நெறிகளைக் கடைப்பிடித்து நடந்து சுவீகரித்துக் கொள்ளுதற்குப் பாத்திராவோம். சிறு அறைக்குள் நுழைந்து தாழிட்டுக்கொண்டு காரிருளில் அடைபட்டிருப்போர்க்கு யாவர்க்கு முரியகாற்றும் வெய்யிலும் உரிமையாவ தெப்படி?

## பிரஹ்மதாரண்யகோபநிஷத்து

"பிரமஞான முடையவனே பிராமணனெனப்படுவான். பிரமஞானத்தைக் கோருகிறவன் சமதமாதி சற்குண சம்பன்னனாகி சிரவண மனனங்களைச் செய்து பிரமதத்துவத்தை யறிந்து பிரமசாக்ஷாத்காரத்தை யடையும்பொருட்டு எப்பொழுதும் நிதித்தியாசனம் செய்யவேண்டும்"

---

சகல வியாதிகளும் வாத பித்த சிலேட்டும மூரண்பாட்டால் உண்டாகின்றன.

## ஆத்மபோதோபநிஷத்து

"பிராமண்யம், குலம், கோத்திரம், பெயர், அழகு, ஜாதி இவைகள் ஸ்தூல தேகத்தைச் சேர்ந்தவை. தேக மில்லாத எனக்கு இல்லை"

## திருவாசகம்

சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறு
மாதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு.
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரை மாய்த்துக்
கோதி லமுதானானைக் குலாவுதில்லைக் கண்டேனே.

## திருவருட்பா

"சாதிகுலம் சமயமெலாம் தவிர்த்தெனை மேலேற்றி."

"சாதிசமயங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக் குப்பைகளெலாம் பாத்திர மன்று."

"சாதிமதம் சமயமெனும் சங்கடம் விட்டறியேன்."

"சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற வுலகீர்
அலைந்தலைந்து வீணே நீரழிதல் அழகலவே."


## உங்களைத் தேடிவந்தால்

தமிழ் மக்களுக்கு ஆனந்தங் கொடுப்பதையே தன் முதற் பெருங் கடமையாகக் கொண்டுள்ள "ஆனந்தபோதினி" உங்களைத் தேடிவந்தால் ஏதோ வழி தவறித் தெரியாமல் வந்துவிட்டதென்று நினைத்துவிடாதீர்கள். உங்கள் வாழ்க்கை நலத்தில் சிரத்தைகொண்டே உங்களைத் தேடி வருகிறது என்று நினையுங்கள். உங்கள் உதவி எல்லாம் பன்னிரண்டு மாதங்களுக்கு ஓரே ரூபாய்தான்.


பணம் படைத்தோரிற் சிலர் செருக்கால் பாவ புண்ணியத்தைக்கூட மறந்து எத்தனை பெண்களின் கற்பைக் கெடுத்துவிடுகின்றனர்!

# பிரபஞ்ச உற்பத்தி

டர்பன் சரஸ்வதி சபைத் தலைவர். திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.

(ஆனந்தபோதினிக்குப் பிரத்தியேகம்.)

ஒழுங்காயும், முறையாயும் கொண்டுவரப்பட்டு, நம்முடைய கட்புலனுக்குத் தோன்றுவன வெல்லாம் பிரபஞ்சம் என்று சொல்லப்படும். பிரபஞ்சம் அங்கப் பிரபஞ்சம் (Organic) அங்கமற்ற பிரபஞ்சம் (Inorganic) என இரு வகைப்படும். பலவகையான அவயவங்களோடு கூடி வளருவதற்கு ஏதுவானதும், அங்ஙனம் வளருவதினால் அது உயிரோடு கூடியதாகத்தானிருக்க வேண்டுமென ஊகிக்கக் கூடியதுமான பிரபஞ்சமே அங்கப் பிரபஞ்சம் என்றும், அவயவ வளர்ச்சியின்றியும் அவ்வித மிருப்பதனால் உயிரற்றதென ஊகிக்க இடந்தந்து நிற்பதுமான பிரபஞ்சமே அங்கமற்ற பிரபஞ்சமென்றும் சொல்லப்படும். என்னுடைய சரீரம் அங்கப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகும். நான் வசிக்கும் வீடு அங்கமற்ற பிரபஞ்சத்தின் ஓர் பகுதியாகும். இவ்விரு பிரபஞ்சங்களும் ஒன்றனுக் கொன்று மிக மாறுபட்ட நிலையை உடையனவாயிருப்பினும், ஒரு பிரபஞ்ச மின்றி மற்றொரு பிரபஞ்சம் நிலை பெறுதல் எவ்வகையினுஞ் சாத்தியமாகாவாறு அவ்வளவு நெருங்கிய சம்பந்தத்தை இரண்டும் உடைத்தாயிருக்கின்றன.

இனி, அங்கப் பிரபஞ்சம், அங்கமற்ற பிரபஞ்சம் இரண்டிற்கும் வித்தியாசமென்ன? என்னுடைய சரீரத்திற்கும் ஒரு தங்கக் கட்டிக்கும் இருக்கும் பேதம் என்ன என்பதைச் சற்று ஆராய்வோம். குழந்தைப் பருவத்தில் என்னுடைய சரீரம் எப்படி யிருந்ததோ அப்படியே இப்போதில்லை. இரண்டு வருடத்திற்கு முன் இருந்ததுபோலவும் இப்போது இல்லை. நேற்று என் சரீரம் இருந்ததற்கும் இன்று இருப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன. சென்ற நிமிடத்தில் இருந்த அதே சரீரம் இந்த நிமிட்த்தில் இல்லை. நிமிடத்திற்கு நிமிடம், கணத்திற்குக் கணம் எவ்வளவோ மாறுதல்களை என்னுடைய சரீரம் அடைகிறது. ஒரு தங்கக் கட்டியை எடுத்துக்கொள்ளுங்கள்; கடந்த இருபது வருட காலமாக அந்தத் தங்கக் கட்டி ஒருவனுடைய வசத்தில் அப்படியே இருக்கிறதென வைத்துக்கொள்வோம். அதில் ஏதாவது மாறுதல் உண்டாகுமா? இருபது வருடத்திற்கு முன் அந்தக் கட்டி இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் ஏதாவது வித்தியாசமிருக்கிறதா? இல்லை. முன் இருந்ததுபோலவே இப்போது மிருக்கிறது. இருபது வருடத்திற்கு முன்னிருந்த நிறை, வடிவு, வண்ணம், பிரகாசம் முதலியவைகளே இப்போது மிருக்கின்றன. தங்கக் கட்டியில் இனைத் துணையும் மாறுதல் ஏற்படவேயில்லை. ஆனால் என்னுடைய சரீரம் இதே இருபது வருட காலத்திற்குள் எவ்வளவு மாறுதல்களை அடைந்திருக்கிறது.

"பிறர் மனை புகாமை அறமெனத் தகும்"

பொன்னும் பலவகைப்பட்ட பணிகளாக ஆக்கப்படவில்லையோ? அதனால் அதனுடைய உருவம் மாறவில்லையோ எனச் சிலர் வினவலாம். ஆனால் அம்மாதிரியான மாறுதல் தானாகவே உண்டானதல்ல. பொன்னை ஆபரணமாகச் செய்வதற்கு வேறொரு கம்மாளன் வேண்டியிருக்கிறது. தங்கத்தை ஓரே இடத்தில் வைத்திருந்தோமானால் அந்தத் தங்கம் தானாகவே ஆபரணமாக மாறிவிடுவதில்லை. இதனால் இந்த மாறுதல் வெளியிலிருந்து உண்டாகும் மாறுதலேயன்றி, உள்ளிருந்து தானாகவே ஏற்படும் மாறுதல் அல்லவென்று ஏற்படுதலால் மேற்கூறிய ஆட்சேபம் பயனற்றதாய் முடிந்தது.

ஆகவே, அங்கப் பிரபஞ்சம், அங்கமற்ற பிரபஞ்சம் இரண்டிற்கும் உள்ள மிகவும் முக்கியமான வித்தியாசம், முதலது வளரும் இயற்கையுடையதென்பதும்; அவ்விதம் வளர்ந்து வருங்கால் அநேக மாறுதல்களுக்கு உள்ளாகிறதென்பதும், பின்னது வளர்ச்சி சிறிதுமின்றியும், மாறுதல் சிறிதுமின்றியும் எக்காலத்தும், ஓரே தன்மையதாயிருக்கிறதென்பதுமேயாம். இருவகையான பிரபஞ்சங்களுள் (Cosmos) ஒன்று இடைவிடாது மாறுதல் அடையக்கூடியதாயும், மற்றொன்று என்றும் ஓரே தன்மைத்தாய்ச் சிறிதும் மாறுதலின்றியும், இருக்கக் காரணமென்னவென்று ஆராய்வோம். அவ்விதம் ஆராய்ச்சி செய்வோமானால் அங்கப் பிரபஞ்சத்தில் தானே இயங்கக்கூடியதான ஓர் சக்தி அமைந்திருக்கிறதென்றும், அந்தச் சக்தியின் இடையறாத இயக்கத்தினாலேயே அவயவ வளர்ச்சிக்கு இன்றியமையாததான ஆற்றல் உற்பத்தியாகிறதென்றும் அங்கமற்ற பிரபஞ்சத்தில் அம்மாதிரியான தானே இயங்கும் சக்தி இல்லாதிருப்பதே அவயவ வளர்ச்சி அப்பிரபஞ்சத்திற்கு ஏற்படாதிருப்பதற்குக் காரணமாமென்றும் புலப்படும். இவ்வுண்மையைப் புலப்படுத்த நாம் வேறு உதாரணம் தேடவேண்டியதில்லை. முதலில் எடுத்துக்கொண்ட சரீரமும், தங்கக் கட்டியுமே போதுமானவை. என்னுடைய சரீரத்தை எடுத்துக்கொள்ளலாம். நான் பார்க்க விரும்பினால் என்னுடைய கண்கள் பார்க்கின்றன. நான் கேட்க விரும்பினால் என்னுடைய செவிகள் கேட்கின்றன. நான் ஓடுவதற்கு விரும்பினால் என்னுடைய கால்கள் அத்தொழிலைச் செய்கின்றன. தங்கக் கட்டியை எடுத்துக்கொள்ளுங்கள் அதனால் பார்க்க முடியுமா? கேட்க முடியுமா? ஓட முடியுமா? ஒன்றும் அதனால் செய்யமுடியாது. இதற்குக் காரணமென்ன? என்னுடைய சரீரத்தில் அறிவோடு கூடிய பிராண சக்தி (Conscious Lifepower) அமைந்து கிடப்பதும், தங்கக் கட்டியில் அம்மாதிரியான சக்தி இல்லாததுமே காரணமாம்.

ஆனால், அங்கப் பிரபஞ்சம், அங்கமற்ற பிரபஞ்சம் ஆகிய இரண்டும், இவ்விரண்டிற்கும் அடிப்படையானவை. அந்தப் பொதுவானதோர் ஆற்றலின் பலனாக உற்பத்தியானவை. அந்தப் பொதுவான ஓர் வஸ்துவின் ஆற்றலினால் இரு வேறு வகையான பிரபஞ்சங்கள் உற்பத்தியாயின என்று நாம் வைத்துக் கொண்டபோதிலும், அப்படிப்பட்ட ஆற்றலையுடைய ஒரு பொருள் பிராண சக்தியோடுகூடிய பொருளா? அல்லது பிராண சக்தியில்லாத பொருளா என்பதை ஆராயவேண்டும். அந்தப் பொருளில் பிராண சக்தியில்லாது போனால் அந்த ஓரே வஸ்துவின் ஆற்றலினால் இரண்டு வேறு வகையான பிரபஞ்சங்கள் வியாபகமாதல் சாத்தியமாகாது. பிராண சக்தியிருந்

---

விசேஷ காலங்களில் வீண் செலவு நீக்கி, ஆடம்பரமின்றி வாழ்ந்தால் வறுமைக்கும் கடனாளியாவதற்கும் வழியில்லை.



தால் மட்டுமே அச்சக்தி வரையறையற்றதும் ஒழுங்கற்றதுமான பிரபஞ்சத்தில் பிரவேசித்துப் பிரபஞ்சத்தை ஒருவகைப்பட்ட ஒழுங்கிற்குக் கொண்டு வந்து படிப்படியாகக் கடைசியில் அங்கப் பிரபஞ்சமாக்கக்கூடும். இதனால் அங்கப் பிரபஞ்சம் உண்டாவதற்கும் அது வளருவதற்கும் அதனுள் பிராண சக்தி இன்றியமையாது இருத்தல் வேண்டுமென்பது பெறப்படுகிறதன்றோ? இம்மாதிரியே சிருட்டித் தொழிலைச் செய்யும் வஸ்தும் பிராண சக்தியோடு கூடியதாயிருக்க வேண்டும். இந்தப் பிராண சக்தி எங்கே புறப்பட்டுத் தோன்றவில்லையோ அங்கெல்லாம் பிரபஞ்சத்தின் மூலகாரணம் முயற்சி சிறிதுமின்றி வறிதே கிடக்கும். பிரபஞ்சங்கள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன. மனித சஞ்சாரம் இல்லாமலும், புற் பூண்டுகள் இல்லாமலும், வெறுமையான அண்டங்கள் பல இருக்கின்றனவென்று சாத்திரியார்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். உயிரற்ற கற்களினால் ஆக்கப்பட்ட பிரமாண்டமான மலைகளைப் பாருங்கள்! பிரகாசிக்கின்றவைகளைப் போல் அந்த மலைகளின்மேல் உறைந்து கிடக்கும் பனிக்கட்டியைப் பாருங்கள்! கணக்கிட முடியாதபடி தாவரப் பொருள்கள் அடுக்கடுக்காயிருக்கும் சுரங்கங்களைப் பாருங்கள்! பிராண சக்தி சிறிதுமின்றி கண்ணுக்குப் புலப்படாத அணுக்களினுஞ் சிறிய மணலால் சேர்க்கப்பட்டுக் கட்புலனுக்குத் தோன்றும் எல்லையற்ற இந்த மண்ணுலகத்தைப் பாருங்கள்! இந்த பூமிமட்டுமேயல்ல; சூரியனிலும் பன்மடங்கு பெரிதான எத்தனை உலகங்கள் வெகு தூரத்தில் சுழன்றுகொண்டிருக்கின்றன. இவ்வுலகங்களோடு நம்முடைய பூமியை ஒப்பிட்டால் இது ஒரு அணுவிற்குக்கூடச் சமானமாகாதே.

இம்மாதிரியாகப் பெரும் பகுதியான பிரபஞ்சம் பிராண சக்தியின்றி வறிதே கிடக்கக் காரணமென்ன? இது ஏன் அங்கத்தோடு கூடி வளராமல் இருக்கின்றது? பிராண சக்தி நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், வருஷத்திற்கு வருஷம் அமைத்து வருகிற அங்கப் பிரபஞ்சத்தை மேன்மேலும் அபிவிருத்திக்குக் கொண்டு வருவதற்கு ஓர் சாதகமாகவே, பெரும் பகுதியான பிரபஞ்சம் இம்மாதிரியான நிலையில் இருக்கிறது. அங்கமற்ற பிரபஞ்சத்திலிருந்தே அங்கப் பிரபஞ்கம் நாளடைவில் உண்டாகிறது. எவ்விதமெனில், அதி சூக்குமமான அசுத்த மாயையிலிருக்கும் சிறு அணுக்களெல்லாம், ஒன்று சேர்ந்து திரண்டு கண்ணுக்குப் புலப்படும்படியான தூலவுருவாகத் தோன்றும். மாயை என்பதற்குப் பிராண சக்தியற்ற சடப்பொருள் (Matter) என்று பொருள். அப்படிப்பட்ட பொருளின் வியாபகமே இந்தப் பிரபஞ்சமாதலால், இப்பிரபஞ்சம் மாயாப் பிரபஞ்சம் என்று பெயர் பெறுவதாயிற்று. மாயாப் பிரபஞ்சமென்றால் மாயையினின்றும் தோற்றுவிக்கப்பட்ட பிரபஞ்சம் என்று அர்த்தம். மாயையினின்றும் உற்பத்தியான இவ்வுலகம் முதலில் அங்கமற்றதாயிருந்து பிறகு பிராண சக்தியின் இயக்கத்தினால் அங்கப் பிரபஞ்சமாகித், தானே வளரும் நிலைமையை அடையும். அவ்விதமான நிலைமைக்கு வர மிகவும் நாட் செல்லுமாயினும் கோடிக் கணக்கான வருஷங்கள் சென்ற பின்பு, அங்கமற்ற பிரபஞ்சமென்பதேயின்றி, எல்லாம் அங்கத்தோடு கூடியனவாயும், பிராண சக்தியுடையனவாயுமாகிற ஓர் காலம் வரும்.

(தொடரும்.)

---

நமது நாட்டில் தொழில் கல்வி இல்லாததினால் வறுமை நோய் வாட்டுகின்றது.

# விளம்பரம் செய்தல்

(வி. எஸ். ஆர். எஸ். மணி.)

### விளம்பரம் செய்வதின் முக்கிய உத்தேசங்களாவன

1. தங்களிடமிருக்கும் சரக்குகளை ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவது.

2. அச் சரக்குகள் யாவர்க்கும் மிகவும் அவசியமானவை யென்று விளம்பரத்தால் தூண்டுவது.

3. அவைகளின் யோக்கியதையையும், உபயோகத்தையும் விவரித்துச் சொல்லுதல்.

ஆனால், எவரும் தங்கள் பணத்தைத் திடீரென்று எந்தச் சாமானையும் விலைக்கு வாங்க உபயோகிப்பார்கள். நாம் செய்யும் விளம்பரத்தின் மாதிரியால், அதை வாசிப்பவர்களுக்கு அந்தச் சரக்கின் பேரில் நம்பிக்கை யுண்டாகும்படி செய்யவேண்டும். விளம்பரம் செய்வதில் அனேக வகைகளிருப்பதில் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுவோம்.

### பார்த்தும் கேட்டுமிராத சரக்கை விளம்பரப்படுத்துவது

நாம் விளம்பரம் செய்யப்போகும் சரக்குப் புதிதாகக் கண்டு பிடித்ததும், நாளிதுவரையில் ஜனங்களுக்குத் தெரியாததாகவுமிருக்கும். ஆதலால் அவர்களுக்கு அது தேவையாயிராது. அவர்கள் நாம் செய்திருக்கும் விளம்பரத்தைப் பார்த்ததும், அந்தச் சரக்கு மிகவும் அவசியமென்று அவர்களுக்குத் தோன்றவேண்டும். ஆகையால் நாம் பிரகடனம் செய்தது அறிவுறுத்துகிறதாகவும், தூண்டுவதாகவு மிருப்பதுமல்லாமல், அந்தப் பண்டம் இல்லாமலிருந்தால் விளையும் கேடுகளை அவர்களுக்கு உணர்த்தக்கூடியதாகவு மிருக்கவேண்டும். இதற்கு அந்த விளம்பரம் விவரண (Descriptive) மானதாக அமைந்திருப்பது நலம்.

### கேட்டிருந்து பார்த்திராத சரக்கை விளம்பரப்படுத்துவது

விளம்பரம் செய்யப்போகும் பொருளின் பெயரைக் கேட்டிருப்பார்கள். பார்த்திருக்க மாட்டார்கள். விளம்பரத்தைப் பார்த்து அவர்களுக்கு அதன் அவசியம் தோன்றவேண்டும். அதற்கு விளம்பரம், விள்ளுகிறதாகவும், விவரணமானதாகவு மிருப்பதுந் தவிர, வாங்குகிறவனுக்கு அதன் பூரணமான உபயோகத்தைக் கற்பிப்பதாகவும் இருக்கவேண்டியது. விளம்பரத்தைப் படங்களினால் அலங்கரித்திருந்தால் மிகவும் நன்மை செய்யும்.

### ஏற்கனவே ஜனங்கள் உபயோகிக்கும் வஸ்துவை விளம்பரம் செய்தல்

வேறு கம்பெனியார் செய்த சரக்கை உபயோகப்படுத்தக் கூடாதென்றும், தங்கள் சாமானையே பிரயோஜனப் படுத்தும்படியும் தூண்டுவது. நாம்

"மிஞ்சிய கருமம் அஞ்சச் செய்யும்"



செய்யும் விளம்பரமானது நம் வியாபாரக் குறியுள்ள (Trade Mark) சரக்கு மற்ற வியாபாரிகள் செய்யும் சாமானைப் பார்க்கிலும் எவ்விதத்தில் மிகவும் சிலாகிக்கத் தகுந்ததென்று சொல்லுவதாக இருக்கவேண்டும். விளம்பரத்தில் இரண்டு ஆள்கள் பேசுவதாகவும், அவர்கள் தங்கள் சரக்கையே மேன்மைப் படுத்திச் சொல்லுவதாகவு மிருப்பதுமல்லாமல் வேடிக்கையும் இருக்கவேண்டும். ஆனால் நமக்கு வர வரத்தான் நன்மை பயக்கும்.

### விளம்பரம் செய்யும் வகைகள்

தங்கள் கடையில் அல்லது தொழிற்சாலையில் சரக்குகளைக் குறித்துக் கூறும் பலகைகள் (Boards) தொங்கவிட்டும், சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரித்தப்படுத்தியும், சில்லறை வியாபாரிகளுக்குக் கடிதங்கள், சுற்றோலைகள் (Circulars) முதலியன அனுப்பியும், இன்னும் பலவேறு வழிகளில் தங்கள் வியாபாரத்தை அபிவிருத்தி செய்கிறார்கள்.

### விளம்பரம் செய்யும்போது முக்கியமாக கவனிக்கவேண்டிய விஷயங்கள்

1. நாம் செய்யும் விளம்பரம் வாசிப்போரின் மனதைக் கவரவேண்டுமானால், அதிலுள்ள விஷயங்களை (elements) விசித்திரமாகவும், மனோகரமானதாகவும் ஒழுங்குபடுத்த வேண்டும்.

2. அச்செழுத்து வாசிப்பதற்கு இலகுவானதாகவும், சௌக்கியமானதாகவு மிருப்பதுமன்றி விவரணம் யாவர்க்கும் அர்த்தஞ் செய்து கொள்ளக் கூடிய நடையில் எழுதவேண்டும்.

3. விளம்பர விஷயங்கள் எல்லாம் ஒரே அச்சில் ஒரே மாதிரியாக இருந்தால் வாசிப்பது கஷ்டமாயிருக்கும். ஆனதால், விஷயத்தை நிறத்தாலோ, அளவினாலோ (Size), ஒழுங்கு படுத்துவதினாலோ அல்லது இவை மூன்றின் கலப்பினாலோ வேறுபாடு காண்பித்தால், அது வாசிப்போர்க்குச் சுளுவாயிருக்கும். உதாரணமாக, தலைவரிசையை மற்றவைகளி லிருந்து வித்தியாசப் படுத்திக் காட்டுவதற்கு அதைப் பெரிதாகவோ, நிரம்ப இருட்டாகவோ (Blacker) அல்லது சரிவெழுத்தாகவோ காண்பித்தால் போதுமானது.

4. ஒரு சமாசார பத்திரிகை வாசிக்கிறவன் அதைப் புரட்டிக்கொண்டு போகும்பொழுது அவன் கண்கள் அனேகமாய் மேல்வரிசையைத்தான் கூர்மையாகப் பார்க்கின்றன. ஆதலால் யாதொன்றை உத்தேசித்து நாம் விளம்பரம் செய்கிறோமோ அதைத் தலையங்கத்திலேயே வெளியிடுவது சிலாக்கியம்.

விளம்பரம் செய்வதில், பொய் கூறுவதும், பித்தலாட்டமான சாமான்களை நல்லதென்று பிரசுரித்து ஜனங்களை ஏமாற்றுவதும், பிற கம்பெனியாரைத் தூஷிப்பதும் கூடாது. மேற்சொன்னவைகளைக் கைக்கொண்டுள்ளவர்க்குத் துவக்கத்தில் ஜயமும் லாபமும் கிடைத்தாலும் கடைசியில் அவர்களுக்கு அபஜயமும் நஷ்டமுமே விளைக்கும்.

விளம்பரம் செய்வதற்குப் புதிய முறைகளைக் கண்டுபிடிப்பதற்குள்ள கற்பனா சக்தியும் ஜனங்களை வசீகரிக்கத் தக்க எழுத்துச் சாமர்த்தியமும் அவ

எல்லா வேலைகளிலும் கவனமில்லாது சிறிதுகாலமிருந்துவிட்டால் அவைகளைப் பிறகு கூட்டுவித்துச் செய்தல் வருத்தம். பொருள்செலவு மதிகந்தான்.

ஷயம். இதற்காக இங்கிலாந்தில் விளம்பரத்தை (Advertising) பள்ளிக்கூடங்களிலும், ஒரு விஷயமாகவைத்து மாணவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். அனேகம் புத்தகங்களும் வெளிக்கிளம்பி யிருக்கின்றன. அநேகர் இதே தொழிலாகக்கொண்டு ஜீவனம்செய்து வருகின்றனர்.

எந்தத் தேசமும் முன்னேற்ற மடைவது அத்தேசத்து, வியாபாரம், கைத்தொழில், விவசாயம் இவைகளால்தான். ஆனால் நமது பாரதநாடு தற்காலத்தில் வியாபாரத்தில் பிற்பட்டதாக இருப்பது யாவர்க்கும் தெரிந்த விஷயம். நம்மிந்தியா—பூர்வத்தில் இப்பூவுலகின்கண் நடுநாயகமாக விளங்கின இவ்விந்தியா முன்னேற்றமடைய வேண்டுமாயின்—வியாபாரம் தழைத்தோங்க வேண்டுமாயின்—வறுமைப்பிணி நீங்க வேண்டுமாயின், விளம்பரம் மிகவும் முக்கியமானது. ஆங்கிலேயர் வியாபாரத்தில் சிறந்த பதவியைக் கைப்பற்றி யிருப்பதற்கு யாது காரணமெனக் கேட்கின்றேன்? இப் பூவுலகிலிருக்கும் திரவியம் யாவும் அமெரிக்கா(America)விற்குப்போக வேண்டியது எதனால் என்று வினவுகின்றேன்? அவர்கள் விளம்பரம் செய்வதில் காட்டும் ஊக்கந்தான் இதற்குக் காரணமென்று நான் துணிந்து சொல்லுவேன். எந்த ஆங்கிலேய கம்பெனிகளும், வியாபாரிகளும், தங்கள் மூலதனத்தில் கால் பாகம் விளம்பரத்திற்கே செலவு செய்கிறார்கள் என்பது மிகையாகாது. இதற்குப் பிரத்தியக்ஷ சாக்ஷி இங்கிலாந்தில் நடைபெறும் சமாசார பத்திரிகைகளின் எண்ணிக்கைதான். நடை, உடை, பாவனை இவைகளில் ஆங்கிலேயர்களைப் போல் நடிக்கப் பார்க்கும் நாம் ஏன் இவ்விஷயத்திலும் அவர்களை பின்பற்றக் கூடாது என்று கேட்கின்றேன்? ஆனால் வர வர நம்மிந்திய மக்கள் விளம்பரம் செய்வதில் கொஞ்சம் ஊக்கம் காட்டுகிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்தியா வாசிகளுக்கு விளம்பரத்தின் உபயோகம் மனதில் பசுமரத்தாணிபோன்று பதியவும், அவர்கள் சுறுசுறுப்புடன் வேலைசெய்து வியாபாரம் தழைத் தோங்கவும், இவ்விந்தியா உலகத்திலேயே வியாபாரத்திலும், தனத்திலும், யாவற்றிலும் மேன்மை யுடையதென்று எத்தேசத் தவரும் சொல்லும் படியான நிலைக்கு வரவேண்டுமெனவும் அக் கருணாமூர்த்தியாகிய ஜகதீசனை மனதாரப் பிரார்த்திக்கின்றேன்.

சந்தாதாரர்களுக்கு:—சந்தா நெம்பர் தெரியாதவர்கள் மாத மாதம் வரும் சஞ்சிகையின்மேலுள்ள விலாசத்தில் குறிக்கப்பட்டிருக்கும் நம்பரைப் பார்த்துக் குறித்து வைத்துக்கொள்ளக் கோருகிறோம்.

“எவ்வுயிர்க்கும் அன்பாயிரு” அதுவே கடவுளைக் காட்டும் கட்டளையாம்.

# தமிழபிமானிகள் கடமை.

(வயாவிளான். வ. இ. நாயகம்.)

“வாழ்கதமிழ்மொழி வாழ்கதமிழ்மொழி வாழ்கதமிழ்மொழியே
வாழ்கநிரந்தரம் வாழ்கதமிழ்மொழி வாழிய வாழியவே.”

நம் நாட்டின்கண்ணேயுள்ள தமிழ் மக்களுட் பலர் தம் தாய்மொழியாகிய தமிழினைத் தங்களாலானமட்டும் போற்றித் துதித்தல் வழக்கம். அதனோடு நில்லாது, சிலர் தமிழில் மிக்க அபிமானம் பூண்டு, அதன் சிறப்பை விளக்கியும், அதன் கண்ணேயுள்ள பண்டைக்கால நூற்களைக் கற்றும், கற்றவைகளைப் பொது நயங்கருதி மற்றவர்க ளறியும்படி பிரசங்க மூலமாகவேனும் பத்திரிகை மூலமாகவேனும், நூல்வாயிலாகவேனும் அறிவித்தும் இன்னோரன்ன பல தமிழ்த் தொண்டுகளாற்றியும் வருகின்றனர். ஆயின், இவையெல்லாம் தமிழ் மொழியை ஆதரிக்கும் பொருட்டுச் செயற்பாலனவாயினும், அதன் சீர்திருத்தங் கருதிச் செய்யத் தக்கனவல்ல. சிலர், “பல்வகைச் சீரும் பொலிந்து விளங்கும் நந்தமிழில் ஓர்விதக் குறையுமில்லை. ஆகையால், அதன் சீர்திருத்தங் கருதி நாம் செய்யவேண்டியன ஒன்றுமில்லையே” என அபிப்பிராயங் கொள்ளுவர். அது தவறு. ஏனெனில், உலகத்தின் நாகரிக நிலை முதிர்ச்சிக்குத் தக்கவாறு பாஷையும் ஒத்தியங்கித் திருந்தி முதிர்ச்சியடைதல் வேண்டும். தமிழ் மொழியின் வளர்ச்சி நாகரிக வளர்ச்சிக்குத் தக்கவாறு அமையவில்லை. நாகரிக வளர்ச்சியின் விரைவினும் தமிழ் மொழியின் வளர்ச்சி விரைவு குறைவு படுதலாலே இவ் விரண்டிற்குமுள்ள தூரம் மிகுந்து கொண்டே போகின்றது. இத்தூரம் இனிமேலும் மிகவொட்டாது தடுத்தல் வேண்டும்.. இதுகாறும் ஏற்பட்டுள்ள தூரத்தைச் சிறிது சிறிதாகக் குறைத்தலும் வேண்டும். இவை செய்யாக்கால் தமிழ்மொழி அருகி அஃகுவதாகும். தம் தாய்மொழியாகிய தமிழ் அத்தன்மையான நிலைமையை அடையாது அதைப் போற்றுதல் தமிழபிமானிகள் யாவர்க்கும் உற்ற கடப்பாடன்றோ? அதுபற்றித் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், சீர்திருத்தத்திற்கும் இன்றியமையாதது எதுவென ஆராய்வோம்.

உலகத்தின் நாகரிக வளர்ச்சிக்குத் தக்கவாறு மனிதனுடைய அறிவும் வளர்ந்து கொண்டு வருகின்றது. காலஞ் செல்லச் செல்லப் புதிய புதிய சாஸ்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டும் கற்கப்பெற்றும் வருகின்றன. ஒருகாலத்திலே மிக நல்ல நூலெனக் கருதப்பட்ட ஓர் நூல் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னே அவ்விதம் காணப்படாது. ஆகவே அறிவும் கலைகளும் காலத்திற்குத் தக்கவாறு மாறுதலையடைந்து முதிர்ந்து வளருவனவாகும். இதுபற்றியே பவணந்தி முனிவர்,

உன்னால் கூடுமானவரை எளிய வாழ்க்கையையே நடத்து. ஆடம்பர வாழ்க்கை பின்னால் உன்னைத் துன்புறுத்தும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினனே" எனக் கூறியுள்ளார்.

மேற் கூறியவாறு ஒவ்வொரு பாஷையும் அக்காலத்துள்ள நாகரிக வளர்ச்சிக்குத் தக்கவாறு கலைகளையும் நூல்களையும் உடையதாயிருத்தல் வேண்டும். அவ்வித மிருப்பின், யாவரும் சாஸ்திர உண்மைகளை உணரும்பொருட்டு அப்பாஷையை நன்கு கற்பர். அவ்விதமில்லாப் பாஷையை வறியதெனக் கருதிக் கைவிட்டு, அவ்விதமுள்ள பாஷைகளையே யாவரும் கற்பர். ஆகவே, எப்பாஷை யாவராலும் கற்கப்பெற்று நிலைபெற வேண்டுமோ அப்பாஷை காலத்திற்கேற்ப கலைகளையும் நூல்களையும் உடையதா யிருத்தல் வேண்டும். இவ்விதமாயுள்ள பாஷைகள் 'ஆங்கிலம்,' 'ஜெர்மானியம்,' 'பிரெஞ்சு,' முதலியனவே. ஆதலினாலேதான் அவைகள் யாவராலும் கற்கப்பெற்று வருகின்றன. இவை நிலைபெறு மென்பதற்கு ஐயமில்லை.

இவ்விஷயத்தில் தமிழினை ஆராய்வாம். தமிழிலுள்ள நூல்களெல்லாம் அறம், பொருள் இன்பம், வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களையே கூறுவனவாம். வைத்திய நூல்களுஞ் சோதிட நூல்களும் சில உண்டு. மற்றுப் பீஜ கணித நூலும், க்ஷேத்திர கணித நூலும், திரிகோண சாஸ்திர நூலும், மிருக சாஸ்திர நூலும், தர்க்க சாஸ்திர நூலும், தத்துவ சாஸ்திர நூலும், பூகோள சாஸ்திர நூலும், மனோ சாஸ்திர நூலும், சரித்திர நூலும், வான நூலும், மனித நூலும், மனித சமூக நூலும், உள நூலும், உயிர் நூலும், உடனூலும், பொருள்வலி நூலும், இன்னும் ஆங்கிலம், ஜெர்மானியம் முதலிய பாஷைகளின் கண்ணே சாஸ்திரங்களின் உண்மையை தெரிவிக்கும் வேறு பல நூல்களும் தமிழில் கிடையா. சிலர் இந்நூல்களில் அதிகமானவை தமிழில் ஒரு காலம் இருந்தன வென்றும், தற்போது அழிந்துபோயினவென்றும் கூறுவர். ஆயின் இவை இப்போது தமிழில் இல்லையென்பதை ஒருவரும் மறுக்கார். இதுபற்றி, நம் தாய்மொழியாகிய தமிழ்மொழிக்கு ஏற்பட்டுட்டுள்ள மதிப்புக்கேடு என்னாற் சொல்லமுடியாது. அந்நிய பாஷை மக்களோடு பேசும்போது, அவர்களுடைய பாஷையின் நூற்பரப்பையும் நந்தமிழின் நூற்பரப்பையும் ஒப்பிடின், நாம் நாணித் தலைகுனிய வேண்டும். நந்தமிழ் மக்களிற் சிலரும் இதுபற்றித் தமிழை அவமதிக்கின்றனர். ஆகவே தமிழபிமானிகள் முன்வந்து நந்தாய் மொழியை இந் நிந்தையினின்றும் அகற்றுவார்களாக.

தமிழரிற் பெரும்பாலார் தம் மக்களுக்குக் காலத்திற் கியைந்த கல்வி கற்பிக்கக் கருதி, தாய் மொழியின் கண்ணே மேற்கூறிய கலைகளில்லாமை பற்றித் தமிழைப் பயில்விக்காது ஆங்கிலம் பயில்விக்கின்றனர். தமிழ் நாட்டின் கண்ணேயுள்ள மாணாக்கருட் பெரும்பாலும் தமிழ் மூன்றும் வகுப்புக்கு மேற் படித்த மாணாக்கர்கள் இல்லை யெனவே கூறவேண்டி யிருக்கின்றது. ஆங்கில பாஷையிலுள்ள சாஸ்திர உண்மைகளைக் கற்குந்தோறும், பொருட்சுவையினும் சொற்சுவை இனிக்கச் சிலர் அப்பாஷையில் மிக்க விருப்புடையராய் அப்பாஷையையே எப்போதும் கற்பவரும் பேசுபவருமாய்த் தமிழைக் கவனிக்காது—தாய் மொழியாகிய தமிழினை மறக்க வேண்டியவர்களாகின்றனர். ஆகவே தமிழ் மொழியைக் கற்க ஏதுவில்லாமையால் அது அருகி வருகின்றது.

கெலிப்பும் தோற்பும் ஒருவர்பங்கல்ல.



ஆங்கிலங் கற்கக் கைப் பொருளுள்ளவரின் காரியம் இவ்வித மிருப்ப, வறியவர்களின் நிலைமையை ஆராய்வாம். இவர்கள் ஆங்கிலங் கற்கச் சம்பளம் கட்ட இயலாமைபற்றித் தமிழைத்தான் கற்கின்றனர். தற்கால நாகரிக வளர்ச்சிக் கியைந்த சாஸ்திரங்களும் நூல்களும் தமிழின் கண்ணே இல்லாமையால், இவ்வேழைகள் இச்சாஸ்திர உண்மைகளை அறியாதவராய் அறியாமையென்னும் இருளினால் என்றென்றும் மூடப்பட்டவர்களா யிருக்கின்றார்கள். இவரிற் சிலருக்கு ஒரு பொருள் இன்னொரு பொருளாய்த் திரியுமென்பதும், மின்சார மூலமாய் ஒருவரைக் கொல்லலா மென்பதும், மாமிச முண்ணுஞ் செடிகள் சில உண்டென்பதும், சந்திரன் நக்ஷத்திரம் முதலியன பூமியைப் போன்றவை யென்பதுங்கூடத் தெரியாது. இவர்களுக்கு விபரீதமில்லை, இயற்கைஞான அறிவில்லை, நாகரிகமில்லை. இவர்களுக்கும் இவர்களுடைய காலத்திற்கும் மிக்க தூரமுண்டு. ஆகையால் தமிழ் நன்மை கருதியும், தமிழேழைகளின் நன்மை கருதியும் தமிழபிமானிகள் செய்ய ஓர் தொண்டுண்டு.

ஆங்கிலங்கற்று அதன் கண்ணேயுள்ள பல சாஸ்திரங்களையுங் கற்றுக்கொண்ட தமிழ்மக்கள் அங்ஙனம் கற்றுக்கொண்ட அவ்வரிய சாஸ்திர உண்மைகளைத் தாய் மொழியாகிய தமிழ்மொழியில் வெளியிடுதல் வேண்டும். இங்ஙனம் செய்வரேல், தமிழின் கண்ணே இல்லையெனக் கூறப்பட்ட பல நூல்களும் தமிழ்ப்பாஷையிலே பொலிந்து விளங்க, யாவரும் அந்நியபாஷை கற்க அதிக அவசிய மில்லாமைகண்டு தம் தாய் மொழியாகிய தமிழ்மொழியையே கற்க, அதன் சொற்சுவையாற் கவரப்பட்டு அதில் விருப்புற்று அதனையே எப்போதும் பேசுபவராயும் கற்பவராயும் தலைப்பட, நம் தமிழ்மொழி யாவராலும் ஆதரிக்கப்பெற்று உன்னத நிலையை யடையு மென்பதற்கு ஐயமில்லை. அப்போது தமிழ்மொழியைத் தாய்மொழியெனக் கூற வெட்கப்படும் தமிழ் மக்களுட் சிலரும் எம்மொழி தமிழ்மொழி யென்பர். ஆகையால் தமிழ்மொழியாகிய தாய் மொழிக்குத் தமிழ்மக்கள் செய்யும் தொண்டுகளில் இதுவே சிறந்தது. ஆகவே, தமிழபிமானிகாள்! உபாத்தியாயர்காள்! உபாத்தியாயினிகாள்! இயற்கை ஞானிகாள்! கணிதர்காள்! கலைஞர்காள்! வாருங்கள். தாய்க்கு இந்தத் தொண்டைச் செய்யுங்கள்!

சிலர் "ஆங்கிலத்திலுள்ள சாஸ்திர நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க, சில ஆங்கிலச் சொற்களுக்கு ஏற்றதமிழ்ச் சொற்கள் காணப்படவில்லையே, ஆகையால் எங்ஙனம் அவைகளை மொழிபெயர்ப்பது?" எனக் கூறுவர். ஆங்கிலேயர் லத்தீன், ஜெர்மானியம் முதலிய பாஷைகளிலுள்ள சில சொற்களுக்குத் தக்க சொற்கள் தம் பாஷையில் இல்லை யெனக்கண்டு, அச் சொற்களைத் தம் பாஷையிற் சேர்த்ததை இவர்களறியார் போலும்! உதாரணமாக, ஆங்கிலத்திலுள்ள இயற்கைச் சாஸ்திர நூல்களிற் காணப்படும் செடிப்பெயர் முதலியன பெரும்பாலும் லத்தீன் பெயரே. அது போலவே, ஆங்கிலச் சொற்களுக்குத் தக்க தமிழ்ச் சொற்கள் காணப்படாவிடின், அவைகளைத் திசைச் சொற்களாக மதித்து நம்பாஷையிற் சேர்த்துக்கொள்வதே முறைமையாகும். இப்படிச் சேர்த்துக் கொள்வதால் நம்பாஷைக்கு ஓர்விதக் குறையும் ஏற்படாது. புதிய புதிய கருத்துக்களுடைய சொற்கள் நம்பாஷையிற் புகுமாயின், அது மிகச் சொற்செல்வ முடையதாகும். இங்ஙனம் செய்ய விரும்பாதார் அக்கருத்துக்களைக் குறிக்கப் புதுச்சொற்களைப் படைத்து வெளியிடுதல்

"நல்லாரை நாவிலுரை-பொன்னைக் கல்லிலுரை."

வேண்டும். அவை மற்றையோர் சுவைக்கும் பெற்றியினவாய்க் காணப்படின், உடனே மேற்கொள்ளப்பட்டுப் பாஷையிலே வழங்குவனவாகும். இவ்விதமே மேனாட்டார் தம் பாஷையைப் பெருக்கியும் சிறப்பித்தும் வருகின்றார்கள்.

ஈற்றில், இவ்வியாசத்தை முடிக்குமுன் மேற்கூறிய நூல்களை எழுத விரும்பும் தமிழபிமானிகட்கு நான் சொல்வதொன்றுண்டு. அதென்னவெனில், தாமெழுதும் நூல்களை யாவருக்கும் சுலபமாய் விளங்கும்படி இலேசான வசனநடையில் தெளிவாக எழுதும்படி யான் அவர்களைக் கேட்டுக்கொள்ளும் வேண்டுகோளே. தமியேன் சொல்லி முடித்த யாவையும் தமிழ்மக்கள் நன்குணர்ந்து தக்கதொண்டு தமிழுக்குச் செய்வாரென எண்ணுகின்றனன்.


## 'ஆனந்தபோதினி' வாரப் பத்திரிகை.

நமது 'ஆனந்தபோதினி' வாரப் பதிப்பின் மூன்றாவதாண்டு பிறந்துவிட்டது. 16 பக்கங்களுடன் வெளியான நமது பத்திரிகை இவ்வாண்டு முதல் 20 பக்கங்களுடன் வெளியாகின்றது. நம் தேசமக்கள் அரசியல், சமயம், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் தக்க அறிவும், அபிவிருத்தியும் பெறுவதற்காகவே பற்பல அறிஞர்களின் அரிய கட்டுரைகள் அதில் வெளியாகின்றன. நம் நாட்டிலும், உலகில் இதர தேசங்களிலும் நடைபெறும் எல்லாச் செய்திகளும் திரட்டி வெளியிடப்படுகின்றன. தினசரிப் பத்திரிகை படிக்கவில்லையே என்னும் கவலையின்றி உலக விஷயம் முழுவதையும் நமது வாரப் பத்திரிகையினின்றும் தெரிந்துகொண்டு மகிழ்ச்சியடையலாம். இதன் வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூபா மூன்றுதான். வெளிநாடுகளுக்கு ரூபா நான்கு. உடனே எழுதிக்கொள்ளுங்கள்.

மானேஜர்,
'ஆனந்தபோதினி' ஆபீஸ்,
சௌகார்பேட்டை, மதராஸ்.







# காந்தி-இர்வின் சமரஸம்

தியாகமூர்த்தி - அறத்தின் திருவடிவம் - உண்மைக் களஞ்சியம் - அருள் வள்ளல்-உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகள் பாரதத் தாயின் விடுதலையின்பொருட்டு ஓராண்டுக்கு முன்னர் ஆரம்பித்த சத்தியாக்கிரக அறப்போர் சமீபகாலத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் நற்செய்தியைக் கேட்டு எல்லாமக்களும் மகிழ்ச்சிப்பெருக்கு அடைந்திருப்பார்கள் என்று நம்புகின்றோம். பண்டைக்காலந்தொட்டு உலகத்திற்கே நாகரிகமும், ஒழுக்கமும், அறிவும் தந்தருளும் பெருமை நமது பாரத அன்னைக்கு உண்டு. அப்பெருமையை, தான் மிகுந்த இழி நிலையில்-வறுமையில் ஆழ்ந்து வருந்தும் இக்காலத்திலும் நிலை நிறுத்திவிட்ட ஆற்றலை எண்ணி எண்ணி இறுமாப்படைகின்றோம். நிலப்படை, நீர்ப்படை, வானப்படை, ஆட்கட்டு, பணக்கட்டு முதலிய எல்லா வலிமையும் நிறைந்து விளங்கும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சக்தி இப்பொழுது அவ் வலிமைகளில் ஒன்றேனும் இல்லாத அஹிம்ஸா தரும சக்தியுடன் சமரஸம் பேசியிருக்கிறது. இது சரித்திரங் கண்டறியாத அற்புத சம்பவம்! ஓராண்டாக நடைபெற்றுவந்த சத்தியாக்கிரக அறப்போரை அறிவும் செல்வமும் நிறைந்த அமெரிக்காபோன்ற நாகரிக நாடுகள் இமைகொட்டாமல் நோக்கி நின்றன! என்றும் அறத்துக்கே வெற்றி என்பது உறுதி யன்றோ? பாரத மக்கள் சென்ற ஓராண்டாக அநுபவித்த கஷ்ட நஷ்டங்கட்கு எல்லை இல்லை. வீடிழந்தனர்! விளை நிலம் இழந்தனர்! பொருள் இழந்தனர்! போகம் இழந்தனர்! உயிர் இழந்தனர்! உடல் நலம் இழந்தனர்! சிறைப்பட்டனர்! அவமானப்பட்டனர்! அடிபட்டனர்! உதைபட்டனர்! அப்பொழுதும் அவர்கள் அஹிம்ஸாதருமச் செந்நெறியினின்றும் அணுவளவும் பிறழவில்லை. அதனாலேதான் இப்பொழுது சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் சக்தி சமரஸம் பேசியிருக்கிறது என்ற உண்மையை எல்லாரும் தெரிந்துகொள்ளவேண்டுகிறோம்.

இந்தியாவின் உண்மைப் பிரதிநிதித்துவம் வாய்ந்த மகா சபை காங்கிரஸ். காந்தியடிகள் காங்கிரஸில் கலப்பதற்கு முன்னர் அது அரசாங்க உத்தியோகங்கட்குப் படித்த வகுப்பார் அடிபணிந்து விண்ணப்பம்போடும்

பெரிய சபையாக இருந்துவந்தது. காந்தியடிகள் கால்வைத்த பின்னரே காங்கிரஸ் ஏழை மக்களின் இன்னலங்காணும் மகாசபையாகத் திகழ்கிறது. ஏறக்குறைய பத்தாண்டுகட்கு முன்னர் காங்கிஸின் வாயிலாக காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டு நடத்தினர். நாடு தகுதியின்மையால் அவ்வியக்கத்தை அடிகள் அப்பொழுது நிறுத்திவிட்டார். சென்ற ஆண்டுவரை நாடு உறங்கியது. கல்கத்தா காங்கிரஸில் காந்தியடிகள் கொடுத்திருந்த வாக்குறதிக் கேற்ப லாகூர் காங்கிரஸில் பூரண சுயேச்சைத் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்தார். லார்டு இர்வினுக்கு இறுதிக் கடிதம் அனுப்பினர். பயன்படவில்லை. உடனே சத்தியாக்கிரக அறப்போரைத் தொடங்கிவிட்டார். சத்தியாக்கிரகப் போர் தேசமெங்கும் காட்டுத்தீப்போல் வளர்ந்து பரவியது. நாடெங்கும் மதுபானக் கடை மறியல்கள், அந்நியத் துணி மறியல்கள், வன சத்தியாக்கிரகங்கள், கிலவரி மறுப்புகள், உப்புச்சட்ட மறுப்புகள் எல்லாம் தாண்டவம் புரியத் தொடங்கின. இந்தத் தடவை இவ்வறப்போரில் வியாபாரிகளும், பெண்களும், குழந்தைகளும் தீவிரமாக ஈடுபட்டமை குறிப்பிடத் தக்க விசேஷமாகும். காந்தி—இர்வின் சமரஸத்தால் இப்பொழுது சட்ட மறுப்பு இயக்கம் நிறுத்தப்பட்டிருக்கிறது. கடற்கரையோரத்தில் வசிக்கும் ஏழை மக்கள் தங்கள் உபயோகத்துக்குத் தேவையான உப்பு எடுத்துக்கொள்ளலாம். அக்கம் பக்கத்தில் விற்கலாம். எப்பொழுதும்போல் சாந்தமான முறையில் கள்—சாராயக் கடை மறியல், அந்நியத் துணி மறியல்கள் செய்யலாம்—ஆனல் வேகம் இருக்கக்கூடாது. இரண்டாவது சர்வகக்ஷி மகாநாடு ஒன்று கூடிய விரைவில் டில்லியில் கூடும். அப்பொழுது காங்கிரஸும் அதில் கலந்துகொள்ளும். இந்தியாவுக்கு வேண்டிய அரசியல் அமைப்பு அம்மகாநாட்டில் நிர்ணயிக்கப்படும். ஆனல் ஐக்கிய அரசியல் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டே எல்லாம் உறுதி செய்யப்படும். இந்நன்னிலையை—அமைதியை ஏற்படுத்திய காந்தியடிகள் வாழ்க! லார்டு இர்வின் வாழ்க.

வந்தே மாதரம்.

அபேக்ஷகர்:—(ஒரு பெண் ஓட்டரைப் பார்த்து) அம்மா தங்களுக்கு ஒரு ஓட் உண்டு. நான் இந்தத் தடவை கவுன்சிலராக அபேக்ஷித்திருக்கிறேன். தங்கள் ஓட்டை எனக்கே போடவேணும்.

ஓட்டர்:—இன்னும் என் சட்டி பானைகள் ஒன்றும் உடையவில்லை. இந்தத் தைமாதப் பிறப்புக்குத்தான் பழைய சட்டி பானைகளைக் கழித்துவிட்டுப் புதியவையாக வாங்கினேன். உடைந்தால் உங்களுக்கே எடுத்து வைத்திருந்து போடுகிறேன். ஐயோ பாவம் இதற்கு இவ்வளவு கெஞ்சவேணுமா? பெரிய மனுஷாள்! குப்பைக்காரனுக்குப் போடுவதை உங்களுக்குப் போடுகிறேன்.

வறுமையிலும் செம்மைவேண்டும்.

# மழைகாலம்




இந்திய விடுதலைக்காக நீ தொண்டனுக யிருக்கப் பிரியப்படு. ஆனல் அதில் அதிகாரம் செலுத்த ஆசைப்பட்டு நாட்டின் விடுதலையை நாசமாக் காதே.

# தாலாட்டு

(சில்லமரத்துப்பட்டி. ப. சுருளிவேல்.)

ராராரா ராராரோ ராரிரோ ராராரோ
கண்ணே யுறங்கு நீ கானமயிலே உறங்கு
பொன்னே யுறங்கு புனக்கிளியே நீ உறங்கு.
தெற்கே சிவகாசி தென்கடல்ரா மேஸ்வரமாம்
ராமேஸ் வரத்திலே நல்லதண்ணீர்ப் பொய்கையிலே
குளித்து முழுகிநான் கும்பிட்டு நிற்கையிலே
கும்பிட்ட கைக்குராமர் குழந்தைவரம் தந்தாரே!
சங்கான் கோயிலுக்கு நான் தவத்துக்குப் போனதினால்
தவமுங் கொடுத்தாரே சாமியின்பேர் கொண்டாயே.
சங்கா லிங்கம் நீ தனுஷ்கோடி ராமலிங்கம்
பூர்வத்து லிங்கத்திற்குப் பூசைசெய்ய வந்தவனே!
மதுரை அழகரோ! மாவூற்று வேலவரோ!
திருமா லழகரை நீ சேவிக்க வந்தவனே!
சாகரத்து மீனாகிச் சாஸ்திரத்தைக் காத்தவனே!
பாற்கடலில் ஆமையாய்ப் பருமலையைச் சுமந்தவனே!
பன்றி யுருக்கொண்டு பாரதனைக் காத்தவனே!
இரணியன் நெஞ்சதனை இருதுண்டாய்ப் பிளந்தவனே!
ஈரடியில் மூவுலகை ஏற்றளந்த பெம்மானே!
தந்தையி னுத்தரவால் தாய்சிரத்தைக் கொய்தவனே!
இராவணனைக் கொன்றுலகை ரக்ஷித்த ரகுபதியோ!
அச்சுதனுக் கண்ணனாய் அவதரித்த அரவமோ நீ!
மூர்க்ககுணக் கம்ஸன் முடிசிதறச் செய்தவனே!
தங்கம் பிறந்து தவழ்ந்துவிளை யாடையிலே
பட்டெடுங்கள் தொட்டில்கட்டப் பவுனெடுங்கள் பொட்டு
[வைக்க
தங்கத்லைதயே யுருக்கித் தமாடித்துத் தூண்நிறுத்தி
வெள்ளிவளை யம்பூட்டி விதவிதமாய்க் கற்பதித்த
பொன்னூஞ்சல் மேலிருந்து பொழுதெல்லா மாடுமென்
கண்ணினுட் கண்ணான கருமணி நீ யுறங்கு.



# விசித்திர விநோதம்.

## பிரசங்கம்.



எஸ். எஸ். பிள்ளைக்குப் பிரசங்கம் செய்து பூமாலைகள் பெற்று மோட்டாரில் ஊர்வலம் வர வேணும் என்பதில் அளவு கடந்த மோகம். சட்ட சபைத் தேர்தல் வந்தது. தலைப்பட்டி மிட்டா தாருக்காக வேலை செய்யச் சென்னையிலிருந்து வந்திருக்கிறார். கூட்டத்தில் பேச மேடை மீது எப்படியோ ஏறிவிட்டார். அவருக்கு உலகமே இருண்டு விட்டது!

க. க. க. கனம்—த. த. த. தலைவரே! ச. ச. சகோதரர்களே! இனி என்ன பேசுவது?

ஆண்டவனுக்கே அர்ப்பணம்!

***

## வரவேற்பு.

ஒரு பெண் பள்ளிக்கூடத்தில் பரீக்ஷை நடத்தும் பொருட்டு இன்ஸ்பெக்டர் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. உபாத்தியாயர் பெண்களை நோக்கி, "பெண்காள்! இன்ஸ்பெக்டர் உள்ளே பிரவேசித்தவுடன் எழுந்து நின்று 'குட் மார்னிங் சார்' என்று மரியாதை செய்யவேண்டும் தெரியுமா?" என்று புத்தி புகட்டித் தயார் செய்து வைத்திருந்தார்.



உடனே வகுப்பு அறைக் கதவைத் தட்டித் தள்ளிக்கொண்டு ஒரு மனிதன் பிரவேசித்தான். திடீரென்று பெண்கள் எழுந்து நின்று "குட் மார்னிங் சார்!" என்று மரியாதை செய்தனர்.

எல்லாரும் ஏககாலத்தில் எழுந்து கத்தியதைக் கேட்டவுடன் பாவம் அந்த ஏழை மனிதனுக்கு காபரா பிறந்துவிட்டது! அவன் ஒரு தச்சன். ஒரு மேஜையைச் சரி செய்ய அன்று காலையில் அழைக்கப்பட்டிருந்தான்.

---

நாட்டின் விடுதலைக்காக நம் நாட்டுச் சகோதரிகளே முனைந்திருப்பதைக் கண்டு வாலிபர்கள் அவமானமடையட்டும்.

## ;" ஆசை "

கால் பந்து போட்டிக்காக ஒரு கூட்டம் வேற்றூருக்குப் போய்விட்டுத் திரும்பியது. அதில் ஒருவருக்குத் தூக்கம் தள்ளியது. தமது டிக்கட்டைப் பாக்கெட்டில் போட்டுவிட்டு நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டார். ஒரு நண்பன் மெதுவாய் அவரது டிக்கட்டை எடுத்து வைத்துக்கொண்டான். உடனே டிக்கட் பரிசோதகர் "சார்! டிக்கட் ப்ளீஸ்" என்று கத்திக்கொண்டு வந்தார். நண்பர்கள் அவரை எழுப்பிவிட்டார்கள். அவரது டிக்கட்டைக் காணோம்; தேடித் தேடிப் பார்த்தார் கிடைக்கவில்லை. எல்லாரும் இன்ஸ்பெக்டர் போகிறவரை பெஞ்சுக்கு அடியில் போய்ப் படுத்துக்கொள்ளும்படியாகத் தூண்டினார்கள். அந்த அறைக்குள் இன்ஸ்பெக்டர் வந்தவுடன் காணாமல் போன டிக்கட்டையும் சேர்த்து அவரிடம் கொடுத்தார்கள்.



" இன்ஸ்பெக்டர் :—(ஆச்சரியத்தோடு) இதென்ன என்னிடம் ஆறு டிக்கட்டுகள்! நீங்கள் ஐந்து பேர் தானே இருக்கிறீர்கள் !"

" அப்படியா? எங்கள் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவருக்குப் பெஞ்சுக்கடியில் இருந்து பிரயாணம் செய்யவேணும் என்று ஆசை—இதோ தலை தெரிகிறது பாருங்கள்."

***

ஒருவன்:—" யாரையும் நம்பி விடுகின்றவர்களைக் கண்டால் எனக்கு மகா சந்தோஷம் !"

வியாபாரி:—" கை மேல் ரொக்கம் கொடுத்துவிடுகிறவர்களைக் கண்டால் எனக்கு மகா மகா சந்தோஷம்."

***

மனைவி:—" நான் ஆண் பிள்ளையாகப் பிறந்திருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்."

புருஷன்:—" எதனால் ?"

மனைவி:—" ஜவுளிக் கடைத்தெரு வழியே போகும்போது எவ்வளவு அழகான புடவைகள் தென்படுகின்றன! நான் ஆண் பிள்ளையாயிருந்தால் என் வீட்டுக்காரிக்குத் தினுசுக்கு ஒரு புடவையல்லவா வாங்கி வாங்கி அலங்கரித்துக் கண் குளிரப் பார்ப்பேன்."

---

உன்னால் வாங்கப்படும் அன்னியநாட்டுப் பொருள்களின் மூலம் அனுப்பப்படும் ஒவ்வொரு தம்பிடியும் உன்னை வறியவனுக்கி உனது வாழ்நாளை நாசமாக்கும் வேர்ப்புழு என்று நினை.



## நல்ல மனைவி.

மாம்பலத்திலிருந்து சென்னையை நோக்கி ரயில் வண்டி வந்துகொண்டிருக்கிறது. ஆபீஸ் வேளை. ஒருவருக்குத் தமது மனைவியின் நடவடிக்கைகளை நினைக்க நினைக்க உற்சாகம் பொங்கிவிட்டது. அவர் கூறுகிறார் :—



" நான் பொய் சொல்லுகிறேன் என்று நினைக்காதீர்கள் — உலகத்திலே மனைவி என்றிருந்தால் என் வீட்டுக்காரியைப் போல் இருக்க வேணும். என்ன ஒழுங்கு! என்ன ஜாக்கிரதை! என்ன ஆசாரம்! இப்பேர்ப்பட்ட ஒரு பெண்ணை நீங்கள் எங்கும் பார்த்திருக்கமாட்டீர்கள்! "ஒழுக்கமில்லாத பெண் இருக்கிறவீடு புலி கிடந்த தூறு" என்கிற வசனம் பொய்யல்ல. சற்றேனும் ஏறுமாறாக இருந்தால் கூறாமல் சந்நியாசங் கொண்டு விடுவது மேல். நீங்கள் ஒரு நாளைக்கு எங்கள் வீட்டுக்கு வந்து பாருங்கள்—அப்பொழுது உண்மை விளங்கிவிடும்."

ஒருவர் :—" அதெல்லாம் வீண் பேச்சு! வாயில் என்ன வேணுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். எப்பேர்ப்பட்டவர்களும் தவறி விடுகிறார்கள்."

" இதென்ன இப்படிச் சொல்லிவிட்டீர்கள்? எங்கள் வீட்டில் அப்படி இல்லை. எந்தெந்தச் சாமான் எங்கெங்கே இருக்கவேணுமோ அதெல்லாம் அங்கங்கேயே இருக்கும். ட்ரஸைப் பற்றியும்கூட நான் கவலை கொள்ளுவதில்லை. எந்த நாளைக்கு எந்த ட்ரஸ் வேணுமோ அதெல்லாம் அவளுக்குத் தெரியும். கைக் குட்டையுங் கூட ஜேபியில் தயாராகப் போட்டு வைத்து விடுவாள்! இதோ பாருங்கள்!" என்று ஒரு துணியை வெளியே எடுத்துக் காட்டினார்.

அது அடுப்பங்கரையிலிருந்த கரித்துணி. எல்லாரும் கொல்லென்று சிரிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

***

போட்டோகிராபர்:—" உங்களுக்குச் சிறிய போட்டோ வேணுமா? பெரிய போட்டோ வேணுமா ?

ஒருவர்:—" சிறிய போட்டோ."

போட்டோகிராபர்:—" ஆனால் தயவு செய்து கொஞ்சம் வாயை மூடிக் கொள்ளுங்கள்."

***

---

அடிமைத்தனத்தைக் கற்றுக்கொள்ளப் பிரியப்படும் ஓர் அன்னியன் இந்தியாவுக்கு வந்தால் வாத்தியார் தேவையில்லை.

## "ஜால வித்தை".

ஒரு பள்ளிக்கூடத்துக்கு ஜாலவித்தைக்காரன் ஒருவன் வந்தான். சீட்டு ஜாலம், கற்கண்டு ஜாலம், ரூபாய் ஜாலம்—எல்லாம் முடிந்தன. இவற்றுள் கூரையிலிருந்து புறாவை வரவழைக்கும் ஜாலமும் ஒன்று. இதற்காக முகட்டின் மீது ஒரு பையனை வைத்துத் தான் குறிப்புக் காட்டும் போது மெல்லப் புறாவைக் கீழே இறக்கவேண்டும் என்று திட்டம் செய்திருந்தான். இது யாருக்கும் தெரியாது. அவன் கூறுகிறான் :—சீமாட்டிகளே! சீமான்களே! நான் இப்பொழுது கூரையிலிருந்து ஒரு புறாவை வரவழைக்கிறேன். மேலே ஒன்றும் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். "ஓ! கமான்! கமான்!"





அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அநேகமாய் கண்ணுக்குத் தெரியாத கயிற்றினால் கட்டப்பெற்ற பூனை ஒன்று ஜாலவித்தைக்காரன் தலைக்கு மேல் மெல்ல வந்துகொண்டிருந்தது.

ஜால :—"புறா எங்கே?"

முகட்டிலிருந்து ஒரு சப்தம்:—"புறா கண்ணுக்குத் தெரியாது—அது பூனையின் வயிற்றில் இருக்கிறது".

***

## கடமையில் கவலை.

திம்மனுக்கு ஒரு பெரிய சீமை ஜவுளிக் கடையில் எடுபிடி வேலை கிடைத்தது. அக்கடையிலிருந்த தலைமை வேலைக்காரனோடு இரவில் அங்கேயே படுத்துக் கொள்வது வழக்கம்.

மார்கழி மாதம். நல்ல பனிக்காலம். அசாத்தியக் குளிர். இரவு ஒரு மணிக்குத் தலைமை வேலைக்காரனுக்குத் திடீரென்று விழிப்பு வந்துவிட்டது. காரணம் என்ன?



திம்மன் கட்டிலில் இருந்த ஜமக்காளம், கம்பளி, போர்வை முதலிய எல்லாவற்றையும் பிடுங்கி எடுத்து நன்றாக மடித்து வைத்துவிட்டான். தூங்கி விழுந்துகொண்டே கட்டிலின் ஓரமாய் உட்கார்ந்து கொண்டு கேட்கிறான் :—

"சார்! வாங்கோ! உங்களுக்கு என்ன வேணும்? அம்மா வாங்கோ! உங்களுக்கு எந்தப் புடவை வேணும்?"

பெரிய வேலைக்காரன் :—"(திடுக்கிட்டு) என்னடா திம்மா! யார் வந்திருக்கிறார்கள்? யாரைப் பார்த்துக் கேட்கிறாய்?

---

இந்தியாவின் க்ஷேமத்தை நாடி நீ செய்யும் அறப்பணிகளில் அதனின் பயனை அடைய இஷ்டப்படாதே.



திம்மன் :—"உம்—உம்—உம்" என்று கண்ணை விழிக்காமலே தூங்கி விழுந்தான். கன்னத்தில் பளீர் என்று ஒரு அறை விழுந்தவுடன் கண் விழிக்கிறான்.

***

## வழி காட்டுதல்.

ஒருவன் :—மூர்மார்க்கெட்டுக்கு வழி எது? தயவு செய்து கொஞ்சம் தெரிவிக்கவேணும்.



காவற்காரன் :— "மூர்மார்க்கெட்டுக்கா? நேரே இந்தப் பாதை வழியாய் மேற்கே போய், வடக்கே திரும்பிக் கொஞ்ச தூரம் நடந்து, கிழக்கே ஒரு சந்தில் நுழையவேணும். பிறகு கொஞ்ச தூரம் நடந்தால் ஒரு பார்க் தென்படும். அங்கிருந்து தெற்கு நோக்கி நடந்தால் மூர்மார்க்கெட்டுக்கே கொண்டு போய் விடும்."

பாவம் அந்த மனிதன் அவன் சொன்னபடியே சுற்றிச் சுற்றி நடந்து கடைசியில் அதே இடத்திற்கு வந்து சேர்ந்தான். அப்பொழுதும் தனக்கு வழிகாட்டியவன் அங்கேயே நின்றுகொண்டிருந்தான். அவனை நோக்கிக் கோபத்தோடு கேட்கிறான்:

"நீ என்ன சுத்த மடையனாய் இருக்கிறாய்? இப்படித்தானா வழி காட்டுவது? தெரியாது என்றால் வாயை மூடிக்கொண்டிருக்கக்கூடாதா? எவ்வளவு அலைச்சல் நாராயணா! நாராயணா!!

"நீங்கள் மூர்மார்க்கெட்டுக்குத்தானே வழி கேட்டீர்கள்?"

"ஆமாம்!"

"ஆனால், நான் காட்டிய வழி தப்பல்லவே! இது தான் மூர்மார்க்கெட்!"

***

திம்மன்:—"எங்கள் ஊர் எவ்வளவோ பரவா இல்லை. ஒரு ரூபாய் எறிந்தால் ஒரு வீசை நெய் கிடைக்கும்."

பொம்மன்:—"ஆனால் எங்கள் ஊருக்கு ஏன் வந்தாய்?"

திம்மன்:—"அந்த ரூபாய் இல்லாததால்."

***

நாடகப்பிரியர்:—"என்னிடம் டிக்கட்டு இருக்கிறது. தயவுசெய்து கொஞ்சம் கதவைத் திறங்கள்."

மானேஜர்:—"கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்! உங்களுக்காகக் கதவைத் திறந்தால் எல்லாரும் வெளியில் வந்து விடுவார்கள்."

லி. ரா.

---

அறிவுள்ள பலரும் தங்கள் சுயநலம் ஒன்றையே கவனிப்பதால் நாட்டின் நிலைமை கெட்டுகின்றது.




# கிருஷ்ணாஸிங் அல்லது துப்பறியும் சீடன்.

(638-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

## 20-வது அத்தியாயம்

இன்னொரு சந்தேக மென்னவெனில் ஜெயராமனுடைய குடும்பத்தார் நாட்டுக் கன்னிகையை மருமகளாய் ஏற்றுக்கொள்ள இன்னும் சம்மதிக்கவில்லை யென்பதே. எப்படி யிருந்தாலும் அவர்கள் சுந்தரம்மாள் குடும்பத்திற்கு நன்றி பாராட்டவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது. எவ்வாறெனில் ஜெயராமன் திடீரென்று அபாயகரமான வியாதி யுற்றான். சுந்தரம்மாள் குடும்பத்தார் அவனை உடனே தங்கள் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு சென்று, அவன் தாய் தந்தையர்களுக்குச் சங்கதி தெரிவித்தார்கள்.

அவன் தாய் தந்தையர்கள் மிக்க பெருமையுடையவர்கள். அவர்கள் பணத்தால் செய்யக்கூடியவை யாவும் செய்தார்கள். சுந்தரம்மாள் தன் காதலால் செய்யக்கூடிய உபசாரமனைத்தும் செய்தாள். என்ன செய்தும் அவன் கடைசியில் இறந்தேபோனான். சுந்தரம்மாள் மனமுடைந்து விட்டாள். மரகதம் அடிக்கடி வந்து வியாதியஸ்தனைப் பார்த்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தாள். அவன் இறந்ததே அவள் மிக்க கடு கடுப்புடையவளாய் எதிலும் பிரவேசியாமல் ஏகாந்தத்தி லிருக்கத் தொடங்கினாள்.

இரண்டு மாதங்கள் கழித்து இந்த இரண்டு கன்னிகைகளும் மறுபடியும் அங்கு வரக்கூடாதென்ற தீர்மானத்தோடு சேவபுரியைவிட்டுப் புறப்பட்டார்கள். ஆனால் அச்சமயம் இருவரும் நவீனபுரியி லுள்ள மரகதத்தின் சுற்றத்தாரிடம் சென்று கொஞ்சகாலம் அங்கிருந்து வரவே செல்கிறார்கள் என்று ஊரிலுள்ளோர் கருதி யிருந்தார்கள்.

ஆனால் அவர்கள் இருவரும் சென்ற விஷயத்தில் ஏதோ பெரிய மர்மம் இருப்பதாகவே தெரிகிறது. ஏனெனில் அதுமுதல் சுந்தரம்மாளின் வயோதிகத் தாய் தந்தையர் தங்கள் மரணமட்டும் வீட்டைவிட்டு வெளியில் எங்கும் செல்லாமலும் வெளியார் ஒருவரையும் தங்கள் வீட்டிற்கு வரவழைக்காமலும் சுந்தரம்மாளுடைய பெயரையே பிரஸ்தாபிக்காமலு மிருந்தார்கள்.

சில மாதங்களுக்குப் பின் சுந்தரம்மாள் ஒரு செல்வம் பொருந்திய குடும்பத்தில் வீட்டுக்காரியஸ்தி வேலையில் அமர்ந்திருப்பதாய்ச் சமாசாரம் எட்டிற்று.

---

கல்வியறிவில்லாததினாலேயே இந்தியா அடிமைப்பட்டிருக்கிறது.



இன்னும் சில நாட்கள் கழித்து அவள் மிக்க செல்வனான ஒரு பாங்கிக் காரனாகிய உலகநாதம் பிள்ளை யென்பவனை மணம் புரிந்துகொண் டிருப்பதாய்த் தெரியவந்தது.

மரகதத்தைப்பற்றியோ அவள் ஊரைவிட்டுச் சென்றபின் ஒரு சங்கதியும் தெரியவே யில்லை.

இவ்வளவு சங்கதியே இராஜவேல் அனுப்பியது. ஆனால் ஆனந்தஸிங்குக்கு அது மிக்க திருப்தியாகவே யிருந்தது.

ஆனந்தஸிங் அதை வாசித்தபின் சற்றுநேரம் ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான். இக்கதை சாதாரணமானதாகவே தோன்றினாலும் ஒரு பெரிய துக்ககரமான சம்பவம் இதில் மறைந் திருக்கிறதென்று அவன் மனதிற்பட்டது. "இறந்துபோன ஜெயராமனுக்குத் திடீரென்று நேர்ந்த அத்தகைய அபாயகரமான வியாதி என்ன வியாதியா யிருக்கும்?" என்ற பிரச்சினை யவனுக்குள் உண்டாயிற்று.

அதோடு சுந்தரம்மாள் "ஜெ—" என்ற வெழுத்தைத் தன் கையொப்பத்தின் முன் சேர்த்து எழுதுவதேன்? அவள் மரகதத்திற் கெழுதிய கடிதத்தில் குழந்தை யென்று பிரஸ்தாபித் திருப்பது எந்தக் குழந்தையைப்பற்றி? அக்குழந்தை தனக்கு விரோதமாய்ச் சாக்ஷிகூறக் கிளம்பாதபடி தடுக்கப்பட வேண்டும் என்று அக்கடிதத்தில் கூறுகிறாளே, எவ்வகையாய்த் தடுக்க வேண்டுமென்பது அவளுடைய கருத்து? அது ஏன் அப்படித் தடுக்கப்பட வேண்டும்? நடந்துபோன மேல்கண்ட சரித்திரத்திற்கும் இப்போது செய்யப்படும் சதியாலோசனைக்கும் உண்டாயிருக்கும் சம்பந்தம் எவ்விதமானது? கற்பகமும், மனோன்மணியும் இதில் சம்பந்தப்பட்டது எப்படி? மங்கம்மாள் மேட்டு வீதியிலுள்ள வீட்டைப் பழையவிடம் என்று குறித்திருக்கிறாளே, அவ்வீடு கடந்த சரித்திரத்தில் எவ்விதமாய்ச் சம்பந்தப்பட்டது?" என்ற இத்தனை கேள்விகளும் அவன் மனதில் ஏககாலத்தில் தோன்றின. ஆயினும் மர்மம் இன்னதென்று சற்றும் புலப்படவில்லை.

"ஆ! கற்பகத்தைமட்டும் சந்தித்தால்—அல்லது மனோன்மணிமட்டும் தான் வீட்டை விட்டோடிய காரணத்தை மட்டும் வெளியிட்டால்!" என்று நினைத்தான்.

இதுதான் பெரிய விடுகதைபோல் அவனை ஒரு முடிவான தீர்மானத்திற்கு வரவிடாமல் தடுத்தது. அவசரப்பட்டால் எந்த மர்மமும் வெளிவராமல் அவன் ஜெயம் அரை குறையாய்ப்போம்.

* * *

ஆனந்தஸிங் நகரத்தில் பிரவேசித்ததும் தனக்குக் கடிதங்கள் வருமிடத்திற்குச் சென்று ஏதேனும் வந்திருக்கிறதா வென்று பார்த்தான். அன்று ஒன்றும் வரவில்லை. மறுநாள் காலை சென்றபோது ஒரு கடிதம் வந்திருந்தது. அதன் மேல் விலாசத்தின் கையெழுத்தைக் கண்டதும் மிகக வியப்படைந்தான்.

---

நீ நியாயமாய்ச் சம்பாதிக்கும் பொருள் உனது நாட்டவனே அடைவதைக் கண்டு சந்தோஷமடைக.

அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோது அதில் "பிரியமுள்ள சுந்தராராவுக்கு—நான் மறுபடி அதேவிடத்திற்கு வந்திருக்கிறேன். சீக்கிரம் வந்து என்னைச் சந்திக்கக் கோருகிறேன்—கற்பகம்" என்று இருந்தது.

ஆனந்தஸிங் வியாகுலத்தோடே தலையசைத்து,

"கடிதத்தில் நேற்றைய தேதி யிருக்கிறது. கடித உறைமேலிருக்கும் தபால் முத்திரையும் நேற்று மாலை 6-30-க்கு போடப்பட் டிருக்கிறது. கடிதத்தில் மசி உலர்ந்திருப்பதை நோக்க, எழுதி 24 மணி நேரம் ஆயிருக்கவேண்டும். கற்பகம் நேற்றுமாலை 4-மணிக்குமுன் புவனகிரியி லிருந்திருந்தால், அதன் பிறகு புறப்பட்டு நவீனபுரிக்கு வந்து அந்த வீட்டிற்குச் சென்று கடிதம் எழுதி மாலை 6-30-க்குத் தாபாலில் போடமுடியாது" என்று தனக்குத் தானே சிந்தித்துக்கொண்டு உடனே வண்டியேறி குறித்த வீட்டிற்குச் சென்றான்.

கதவைத் தட்டியதும் மூதாட்டி வந்து திறந்தாள். ஆளையறிந்துகொள்ள அவளால் முடியவில்லை. ஆனந்தஸிங் "அம்மா கற்பகம் இங்கிருக்கிறாளோ? நான் சுந்தராராவ்" என்றான்.

அம்மாது கோபத்தோடு "நீ உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ. சுந்தராராவை நான் அறிவேன்" என்றாள். ஆனந்தஸிங் "நான்தான் சுந்தராராவ். நேற்று நான் இங்கு வந்தபோது மாறுவேடம் அணிந்திருந்தபடியால் இன்று உனக்கு யாரென்று தெரியவில்லை. இதோபார் கற்பகத்தின் கடிதம் என்றான்.

அம்மாது:—இருக்கலாம். ஒருவரையும் இக்காலத்தில் நம்பக்கூடவில்லை. எப்படியாயினும் இப்போது அதைப்பற்றி அவசியமில்லை. கற்பகம் திரும்பிப் போய்விட்டாள்.

ஆனந்தன்:—அப்படியாயின் இங்கு வந்திருந்தாளோ?

அம்மாது:—"ஆம். இரவு ஏழு மணிக்குமேல் புவனகிரியிலிருந்து வந்தாள். இரவு முழுதும் நித்திரையின்றி உனக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். நீ வரவில்லை. உன்னைக் கொன்றுவிட்டிருப்பார்களென்று மிக்க பீதியடைந்து காலையில் உன்னைத் தேடிப் பார்ப்பதற்காகச் சென்றாள்".

ஆனந்தஸிங் "ஐயோ கற்பகமே!" என்று கூறிக்கொண்டே அம்மூதாட்டிக்கு வந்தன மளித்துச் சென்றான்.

அவன் மனதில் பலவிதமாய்ச் சிந்தித்துக் கொண்டே நகரின் கீழ்ப் பாகத்தை நோக்கிச் சென்றான். அவள் சூது செய்கிறாள் என்று புது அத்தாட்சி கிடைத்தும் அவள்மேல் கொண்ட மோகம் அவனைவிடவில்லை.

அவன் சென்றுகொண்டே யிருக்கையில் ஒரு புருடனும் ஸ்திரீயும் வீதியைத் தாண்டிப் பக்கத்திலிருக்கும் உத்தியான வனத்தில் நுழைவதைத் திடீரென்று கண்டான். அவன் உடனே ஒரு எச்சரிக்கையுமின்றித் துணிகரமாய் அவர்களைத் தொடர்ந்து சென்று நெருங்கினான்.

அச்சமயம் அம்மாது தன்கூடவிருக்கும் ஆடவனை நோக்கி, அன்போடு "எனக்காக இதைச் செய். நீ செய்வாயென்று பூரணமாய் நம்புகிறேன்" என்றாள்.

---

நீ செலவழிக்கும் ஒவ்வொரு தம்பிடியும் உனது நாட்டிற்கு உபயோகப்படுமா என்று யோசித்துச் செலவு செய்.



அதற்கு அந்த ஆடவன், "கற்பகம்! அப்படியே செய்கிறேன். உண்மையாகவே செய்கிறேன்" என்றான். அம்மாது யாரென்று தெரிந்துவிட்டது. அந்த ஆடவன் யாரெனில் முனியனே. இதைக் கேட்டதே ஆனந்தஸிங்குக்கு அதற்குமேலும் பொறுக்க முடியவில்லை. அவன் பாய்ந்துபோய் முனியனை யொருபுறம் தள்ளிவிட்டு "ஆ கற்பகம்!" என்றான்.

அவள் அவனைக் கண்டதும் அடங்கிய குரலாய், 'ஓ சுந்தரஸிங்" என்று கூவினாள். அவள் முதலில் அடைந்த பயம் நீங்கியதே, சந்தோஷமும், நிம்மதியு மடைந்ததுபோல் அவள் முகக்குறியால் தெரிந்தது.

"ஹா! உன்னைக் கண்டதால் நான் எவ்வளவோ சந்தோஷமடைகிறேன்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்ட ஆனந்தஸிங் அவளைப்பற்றி இன்னது நினைப்பது என்று தெரியாமல், "நான் தற்செயலாய் உன்னைக் கண்டதேயாயினும், இதைப்பற்றி மிக்க சந்தோஷமடைகிறேன்" என்றான்.

கற்பகத்தின் முகத்தில் மிக்க வியப்பும் வருத்தமும் தோன்றின. மிக்க நாணமும் தோன்றியது.

அவள் ஆனந்தஸிங்கை நோக்கி, "ஏன் தற்செயலாய் என்று கூறுகிறீர். நான்தான் பத்துமணிக்கு இங்கிருப்பேனென்று என் கடிதத்தில் கூறியிருக்கிறேனே" என்றாள்.

ஆனந்தஸிங் வெறுப்போடு எந்தக் கடிதம்? என்றான்.

இதைக் கேட்ட கற்பகம் அதிசயத்தோடு அவன் முகத்தை நோக்கி, "சுந்தரஸிங்! நான் ஏதாவது குற்றம் செய்துவிட்டேனோ?" என்றாள்.

ஆனந்தஸிங்:—அந்த விஷயம் என்னைவிட உனக்கே நன்றாய்த் தெரியும். இதுவரையில் நான் உன்னைக் சத்தியவதி யென்றே நம்பியிருந்தேன். இப்போது, அக் கொலையாளிகளாகிய கள்ளர்கூட்டத்தில் ஒருவனாயிருக்கும் இவனோடு பேசிக்கொண்டிருப்பதையும் அதிலும் அன்போடு நீங்கள் பேசுவதையும் கண்டபோது........" என்றான்.

கற்பகம் ஏதோ நிம்மதி யடைந்தவள் போல் "ஆ! இதுமட்டுமா யிருந்தால், இன்னும் நாம் நண்பர்களாவே யிருக்கலாம்; அன்பும் சினேகபாவமும் ஒரு சகோதரனிடத்தில் காட்டுவது குற்றமல்லவே" என்று தன் கரத்தை நீட்டினாள்.

ஆனந்தஸிங் வெறுப்போடு பின்னிடைந்தான்.

கற்பகம்:—ஆ! சுந்தரஸிங்! நீ என்மேல் சரியான காரணமின்றியே வெறுப்படைகிறாய். குற்றம் சாட்டுகிறாய். ஆகையால் நான் உண்மையாகவே குற்றவாளியாயிருந்தால் எப்படிச் சமாதானம் கூறவேணோ அப்படியே கூறுகிறேன். உன் எண்ணங்களை நீ கூறு. அப்போது எல்லாம் சரிப்பட்டுவிடும். என்றாள்.

சாதாரணமாகவே அவளுடைய கோரிக்கைக்கு யாரும் எதிர்த்துக் கூற மாட்டார்கள். அப்படியிருக்க அவள் மேல் அன்புகொண்டிருக்கும் ஆனந்தஸிங் எப்படி மறுப்பான்? ஆகையால் "என் சங்கதிகளைக் கூற நான் ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான்.

---

எப்பொழுதும் சந்தோஷமுள்ளவனாய் இருக்கவேண்டுமானால் நீ இளமையில் துக்கத்தைச் சம்பாதித்துக்கொள்ளாதே.




### 56-எஜமானரைத் திருப்தி படுத்தியவர்:—

லண்டன் நகர மேயரின் அந்தரங்கக் காரியதரிசியாக இப்போது இருக்கும் சர். வில்லியம் சோஸ்பி என்பவர், மேயர் பதவிக்கு வந்த 56-பேர்களுக்கு அந்தரங்கக் காரியதரிசியாய் இருந்து ஒவ்வொருவரிடமும் அவரவர் குணதிசயப்படி நடந்து கொண்டு அவர்களைத் திருப்தி படுத்தியுள்ளார். இப்போது அவர் அப்பதவியினின்றும் விலகிக் கொள்ளப் போவதால் இத்தனை மேயர்களுக்கும் திருப்தி படுத்தியவரும், தக்க அனுபவம் பெற்றவருமான அவரையே மேயராக நியமிக்க வேண்டுமெனச் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

### குதிரைப்பந்தயம் தோன்றிய காலம்:

நம்நாட்டில் குதிரைப்பந்தயங்கள் நடைபெறுவது சகலருக்கும் தெரிந்த விஷயம். இவ்வாறே எல்லா நாடுகளிலும் குதிரைப் பந்தயங்கள் நடைபெறுகின்றன. பலர் அவ்வழக்கம் நவீனகாலத்தில் ஏற்பட்ட தென்கின்றனர். ஆனால் சமீபத்தில் மெசபொட்டோமியாவில் அகப்பட்ட சாசனங்களால் அங்கு குதிரைப்பந்தயம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வழக்கத்தில் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அக்காலத்தில் ராஜாக்கள் மட்டுமே அதில் ஈடுபட்டிருந்தனர். குதிரைப்பந்தயத்தில் ஈடுபடும் குதிரைகளை வளர்க்கும் முறைகள் பல அச்சாசனங்களில் மிக ஆச்சர்யமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

### சங்கீத வித்வானான தொழிலாளன்:-

பிரிட்டனைச் சேர்ந்த வேல்ஸில் சுரங்கத்தில் வேலைசெய்யும் தொழிலாளர்கள் பலர் பிற்காலத்தில் சங்கீதத்தில் தேர்ச்சி பெற்று மேடையில் சங்கீதம் பாடும் திறமைபெறுவது சகஜமாக இருக்கின்றது. ஸ்ரீ. டிராபர் ஜோன்ஸ் என்பவர் இப்போது ஹாமர்ஸ்மித் நகரிலுள்ள லிரிக் தியேட்டரில் பெரிய சங்கீத வித்வானாக இருக்கிறார். அவர் வாலிபத்தில் சுரங்கத்தில் பத்து வருஷ காலம் எளிய தொழிலாளியாக இருந்தார். பிறகு அவர் சங்கீதப்பரீட்சையொன்றில் தேறி லண்டனுக்கு வந்து விரைவில் பிரபலமடைந்தார்.

### டைப் அடிக்கும் மிஷின் சரிதை:—

டைப் அடிக்கும் மிஷினை இங்கிலாந்திற்கு முதல் முதலாகக்கொண்டு வந்தவர் யார் தெரியுமா? அவர்தான் சர். ஆல்பிரட் யார்ரோ என்பவர். அவருக்கு இப்போது வயது 90. அவர் சுமார் அறுபத்து நான்கு வருஷங்களுக்குமுன், முதன் முதலாக டைப் அடிக்கும் மிஷினை அமெரிக்காவிலிருந்து கொண்டுவந்தார். அப்போது இங்கிலாந்தில் ஒருவருக்காவது அதை உபயோகிக்கத் தெரியவில்லை. டைப் அடித்தல் என்றால் என்ன என்றும் தெரியாது. பிறகு தான் சில இளைஞர்கள் அதைக் கற்றுக்கொண்டனர். இப்போது அது இங்கிலாந்தில் சாதாரண பவுண்டன் பேனாவைப்போல் சர்வ சாதாரணமாகிவிட்டது.

### உலகில் சிறந்த மோட்டார் டிரைவர்கள்:—

லண்டனில் அப்போதைக் கப்போது சில மோட்டார்கள், ஜன நெருக்கடி அதிகமாயுள்ள இடங்களிலும், சாதாரண ரஸ்தாக்களிலும் கண்ணுக்குத் தெரியாத அளவு வேகமாகவும், எத்தகைய ஆபத்துமின்றியும் செலுத்திச் செல்லப்படுவதைக்கண்டு லண்டன் வாசிகள், 'அந்த டிரைவர்கள் பைத்தியக்காரர்களோ' என்ன நினைப்பதுண்டு. ஆனால் உண்மை விஷயம் வேறு. லண்டன் போலீஸ் இலாகாவிலேயே, திருடர்களையும், திருட்டுக் கூட்டத்தாரையும் தொடர்ந்து செல்வதற்காகச் சிலர் அவ்வாறு பயிற்சியளிக்கப்பட்டு அந்தப் பிரத்யேக உத்தியோகத்தில் அமர்த்தப்படுகின்றனர். அவர்கள் தக்க பயிற்சியடைவதுடன் பத்து வருஷகால அனுபவம் பெற்ற பின்னரே அவ்வேலையில் நியமிக்கப் படுகின்றனர். அவர்களே உலகில் சிறந்த டிரைவர்கள். அவர்கள் மிகவேகமாகவும், எப்படிப்பட்ட நெருக்கடியான இடத்திலும் ஆபத்து நேராதபடியும் மோட்டாரைச் செலுத்துவர்.

### சீசன் டிக்கேட்டை யுடைய நாய்:—

தினசரி ஒரு ஊரிலிருந்து அருகிலுள்ள மற்றொரு ஊருக்கு ரயில் மார்க்கமாகப் போகும் பிரயாணிகளுக்கு சீசன் டிக்கெட் கொடுப்பது வழக்கம். அவ்வாறு லண்டனிலிருந்து அதற்கடுத்த ஒரு ஊரிலுள்ள தன் காரியாலயம் செல்லும் வியாபாரி ஒருவர் தினசரி தன்னுடன் தன் நாயையும் அழைத்துச் சென்றார். முதலில் தினசரி ஒரு மனிதரின் கட்டணத்தை அதற்குச் செலுத்தி இட்டுச்சென்றார். பின்னர் அதிகாரிகள் அந்த நாய்க்கும் ஒரு சீசன் டிக்கெட்டைக் கொடுக்க ஒப்பினார்கள். ஆரம்பத்தில் மாதம் இரண்டு பவுன் வாங்கப்பட்டது. பின்னர் அதுவும் குறைக்கப்பட்டது. சீசன்டிக்கெட்டையுடைய நாய் இவ்வுலகில் அது ஒன்றுதான்.

### அதியாச்சர்ய ஞாபகசக்தி:—

இங்கிலாந்தில் செண்ட் டன்ஸ்டன் என்னும் நகரின் முனிசிபல் சபைத் தலைவரான காப்டன் பிரேசர் என்பவர், ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது தன் கண்களை இழந்துவிட்டார். எனினும் அவர் சமீபத்தில் பல பரீட்சைகளில் தேறினார். அவ்வாறு தேர்வதற்கு அவருக்குதவியாக இருந்தது அவருடைய அதியாச்சர்யமான ஞாபகசக்திதான். யாரேனும் ஒருவர் ஒரு முறை ஒரு புஸ்தகத்தை உரக்க அவர் எதிரில் படித்துவிட்டால் அவர் பிறகு அதிலுள்ள விஷயங்களை அப்படியே எடுத்துக் கூறுவார். இப்படிப்பட்ட சாமர்த்தியத்தால் தான் அவர் கண்போன பிறகும் பரீட்சைகளில் தேறினார்.

### சுதந்தர மில்லாததால் தற்கொலை:—

கல்கத்தா வங்கவாசி கல்லூரியில் இண்டர் மீடியேட் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்த விரேந்திர சந்திர பௌளிக் என்னும் மாணவன் பிப்ரவரிமாதம் 21-ந் தேதி தற்கொலை செய்துகொண்டான். அவன் இறக்கையில் காசியில் வாசிக்கும் தன் நண்பன் ஒருவனுக்குப் பின்வரும் கடிதம் எழுதியிருந்தான்: 'இந்தியா விரைவில் சுயாரஜ்ய மடையுமென எதிர் பார்த்தேன். ஆனால் அது இப்போது கிடைப்பதாகத் தெரியவில்லை. இந்தியா சுதந்தரம் பெற்றபின்னர் மீண்டும் இந்நாட்டில் ஜன்ம மெடுப்பேன் என்னும் நம்பிக்கையுடன் இப்போது தற்கொலை செய்துகொள்கிறேன்.'

# “ஆனந்தபோதினி” பஞ்சாங்கம்.

பிரஜோற்பத்தி௵ சித்திரைமீ—கலியுகாதி 5033, சாலிவாகனம் 1854,
பசலி 1840, கொல்லமாண்டு 1106, ஹிஜரி 1849,
இங்கிலீஷ் 1931௵ ஏப்ரல்மீ—மேமீ.

| சித்திரை | ஏப்ரல் | வாரம். | திதி. | நக்ஷத்திரம் | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | [புண்யகாலம் |
| 1 | 14 | செவ் | து43-55 | சத18-3 | மர60 | வருஷப் பிறப்பு, விஷு |
| 2 | 15 | புத | திர50-20 | பூர25-53 | அ25-53சி | பிரதோஷம், மாடு வாங்க |
| 3 | 16 | வியா | சது56-20 | உத்33-18 | சித்60 | மாசசிவராத்திரி |
| 4 | 17 | வெ | ● அமா60 | ரே39-58 | அமி60 | சர்வத்திர அமாவாசை |
| 5 | 18 | சனி | அமா1-20 | அஸ்45-50 | சித்60 | தானியம் செலவிட |
| 6 | 19 | ஞா | பிர5-20 | பர50-35 | சித்60 | கரிநாள், சந்திர தரிசனம் |
| 7 | 20 | திங் | துதி8-15 | கி☓54-10 | ம54-10அ | கிருத்திகை, பரசுராம ஜய |
| 8 | 21 | செவ் | திரி10-3 | ரோ56-45 | அ56-45சி | மாசசதுர்த்தி விரதம் [ந்தி |
| 9 | 22 | புத | சது10-35 | மிரு58-0 | சித்60 | |
| 10 | 23 | வியா | பஞ்9-58 | திரு58-10 | ம58-10அ | |
| 11 | 24 | வெ | சஷ்8-10 | புன57-8 | சி57-8மர | |
| 12 | 25 | சனி | சப்5-8 | பூச54-23 | சி54-23மர | |
| 13 | 26 | ஞா | அஷ்0-55<br>நவ55-35 | ஆயி51-30 | சி51-30மர | |
| 14 | 27 | திங் | தச49-20 | மகம்47-18 | மர47-18சி | |
| 15 | 28 | செவ் | ஏகா42-23 | பூரம்42-15 | சி42-15அ | |
| 16 | 29 | புதன் | து34-53 | உத்36-48 | அ36-48ம | |
| 17 | 30 | வியா | திர27-10 | அஸ்31-0 | சித்60 | |
| 18 | 1 (1931௵ மே) | வெ | ச○19-33 | சித்25-23 | சித்60 | சித்ரா பௌர்ணமி |
| 19 | 2 | சனி | பவ12-13 | சுவா20-18 | அ20-18சி | சித்ரா பௌர்ணமி விஷ்ணு ஆலயங்களில் |
| 20 | 3 | ஞா | பிர5-48 | விசா15-50 | மர60 | வைசாகபகுனம் |
| 21 | 4 | திங் | துதி0-18<br>திரி56-23 | அனு12-35 | சித்60 | கத்தரி ஆரம்பம், அக்கினி நக்ஷத்திரம் நா-10-30-வி |
| 22 | 5 | செவ் | சது54-10 | கே10-58 | ம10-58அ | சங்காஷ்ட சதுர்த்தி |
| 23 | 6 | புதன் | பஞ்53-50 | மூல10-58 | ம10-58அ | வராஹ ஜயந்தி, மாடுவாங்க |
| 24 | 7 | வியா | சஷ்55-30 | பூரா12-55 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 25 | 8 | வெ | சப்58-55 | உத்16-45 | சி16-45மர | விவாகம், சர்வ முகூர்த்தம் |
| 26 | 9 | சனி | அஷ்60 | திரு22-13 | சித்60 | வியாதியஸ்தர் குளிக்க |
| 27 | 10 | ஞா | அஷ்3-53 | அவி29-0 | ம29-0சித் | மரணயோகம் |
| 28 | 11 | திங் | நவ9-50 | சத36-28 | சி36-28மர | சுப முகூர்த்தம் செய்ய |
| 29 | 12 | செவ் | தச16-18 | பூர44-18 | ம44-18அ | கபிலை, ஏற்றம் ஸ்தாபிக்க |
| 30 | 13 | புத | ஏகா22-30 | உத்51-40 | சி51-40மர | சர்வ மத்வ ஏகாதசி, சுப முகூர்த்தம், ருதுசாந்தி |

| | | | |
|---|---|---|---|
| ராகு | சூரி<br>புத | | குரு |
| சுக் | 6-மீன-சுக் | | செவ் |
| சனி | | | |
| | | | கே |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
No. 6, LAWYER CHINNATHAMBI MUDALI ST., MADRAS.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

92 பக்கங்கள் கொண்ட

## பிரஜோற்பத்தி வருஷத்திய

(கேத்திர ஜீவகக்ஷத்திராதி சாந்திர ஸௌரமான)

சர்வமுகூர்த்த

“ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்”

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமை வாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன் பி. ஏ. (B. A. Mathematics) அவர்களால் இப் பஞ்சாங்கம் சுத்தமாகக் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இருக்க வேண்டிய, கேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், விவாகசக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விரதாதி விசேஷங்கள், நசாபுத்தி, கிரக சாரங்கள், நக்ஷத்தப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு, நவநாயகர்கள் பலன் முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ்வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நட்சத்திர ஓரை, சந்திர உதயம், கிரக உச்சம், வக்கிர நிரயன சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

இது ஜோதிடர்களுக்கு கிரக ஸ்புடம் செய்ய உபயோகமாகும்.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணு 2.

6-பஞ்சாங்கங்கள் 0—8—0. 12-பஞ்சாங்கங்கள் 0—14—0.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணு சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முன்பு அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். ரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

☞ எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

6-ம் நே. 28-ம் நே. பஞ்சாங்கங்கள்.

தனலக்ஷ்மி கம்பெனியார் வெளியிடும் 6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே நல்ல விதத்தில் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணு ½.

6-பஞ்சாங்கம் அணு 2½. 12-பஞ்சாங்கம் அணு 4.

ஷை வருஷத்திய தேவுங்கு நிம்மகேட்ட பஞ்சாங்கம் 1-க்கு அணு ½. 6-க்கு அணு 2½. 12-க்கு அணு 4.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நே. 167, மதராஸ்.

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் என் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, சில் வாயு முதலான பலவித நோய்களுக்கு உட்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக் கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகாற்றதான.

# Amrutanjan

# அமிருதாஞ்சன்

### ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கை கண்ட மருந்து. விலை அணா 10.

---

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும்.

விலை டப்பி 1-க்கு அணா 6.

---

### மோஹினி தைலம்.

ஸ்த்ரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 துலாம் எண்ணெய் சீசா 1-க்கு விலை அணா 12.

---

### தந்த சூரணம்.

பல் துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும்.

விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.


## அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

எமது சிலோன் சப் ஏஜென்ஸி :- } 16, கீமன்ஸ் கேட், கொளும்பு.



## அமெரிக்கன் ரோல்டு கோல்டு மார்பு பொத்தான்கள்.



இப் பொத்தான்கள் அமெரிக்கா தேசத்தில் சிரிமெண்ட்ஸ் கம்பெனியாரால் தயார் செய்யப்பட்டது. இதன் பொன்னிறம் எப்பொழுதும் மங்காது எக்காலமும் சவரன் பொன்னைப் போலவே பிரகாசிக்கும். இதைப் பார்ப்பவர்கள் சவரப்பொன்னால் செய்ததென்றே நினைப்பார்கள். 3-பொத்தான் சேர்ந்த செட் 1-க்கு விலை ரூபா 1—8—0:

## இரகசிய சுகானந்தன்.



இது ஒரு அதிசயமான ரப்பர் குழாய். ஆண்கள் சம்போக காலங்களில் உபயோகிக்க ஸ்பெஷலாக தயார் செய்யப்பட்டது. பெண்களிடமிருந்து நோய்களை வாங்கிக்கொள்ளாமல் தடுப்பதற்கு இதைவிட வேறுவழி கிடையாது. இதை சம்சாரிகளும் உபயோகிக்கலாம். இதனால் கெடுதல் ஒன்றும் கிடையாது. இதன் விலை ரூ. 1.

## பெண்களுக்கேற்ற கருவி.

அடிக்கடி கர்ப்பம் தரிப்பதைத் தடுக்கவேண்டுமானால் இந்த ரப்பர் கருவியை உபயோகிக்க வேண்டும். இக்கருவி மிகவும் மெல்லியதாகவும், சில்க்செட்; சில்க்டேப் முதலியவைகள் உள்பட இதன் விலை ரூபா 2—8—0.

இராஜலட்சுமி கம்பெனி, நெ. 44, நம்புலையர் தெரு, மதராஸ்.


---


## G. W. M. REYNOLDS.

### BOLD TYPE EDITIONS.

| Title | Vols. | Rs. | As. | Title | Vols. | Rs. | As. |
|---|---|---|---|---|---|---|---|
| Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 | Pope Joan ... | 3 vols. | 1 | 12 |
| Joseph Wilmot | 8 ,, | 5 | 0 | Necromancer | 3 ,, | 2 | 4 |
| Ellen Percy | 8 ,, | 5 | 0 | Wagner, the Wehr Wolf | 3 | 1 | 12 |
| Mary Price | 8 ,, | 5 | 0 | Soldier's Wife | 2 ,, | 1 | 8 |
| Rye House Plot | 4 ,, | 3 | 0 | May Middleton | 2 ,, | 1 | 8 |
| Young Duchess | 4 ,, | 3 | 0 | Faust ... | 2 ,, | 1 | 8 |
| Omar | 4 ,, | 3 | 0 | Leila ... | 2 ,, | 1 | 8 |
| Rosa Lambert | 4 ,, | 3 | 0 | Robert Macaire | 2 ,, | 1 | 4 |
| Margaret ... | 4 ,, | 3 | 0 | Mary Stuart | 2 ,, | 1 | 4 |
| Loves of the Haram | 4 ,, | 3 | 0 | Seamstress | | 1 | 0 |
| Massacre of Glencoe | 4 ,, | 3 | 0 | Alfred ... | | 1 | 0 |
| Virgin's Kiss | 4 ,, | 3 | 0 | Grace Darling | | 0 | 12 |
| Canonbury House | 3 ,, | 2 | 4 | Young Fisherman | | 0 | 10 |
| Mysteries of Old London | 3 ,, | 2 | 4 | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| | | | | Mysteries of Paris by Eugene Sue | | 1 | 0 |

SUPERIOR WATCH CO., P. B No. 167, MADRAS.

# ஞானத்தைப் போதிக்கும் நூல்கள்.

| | ரூ. | அ. | | | |
|---|---|---|---|---|---|
| ராமர் அஸ்வமேத யாகம் | 1 | 4 | மஹாராஜா துறவு | 1 | 0 |
| அகஸ்தியர்தேவாரம் | 1 | 4 | ஞானசூரியோதயம் | 1 | 0 |
| ஞானக்கோவை | 1 | 4 | வாதவௌமியம் | 1 | 0 |
| | | | தோடகம் | 0 | 8 |

[illegible] நந்திதேவர் திருவாய் மலர்ந்தருளிய

## ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல்.

## இதன் விலை அணு 8.

சகல [illegible]ங்களையும் கற்றுணர்ந்த நம் முன்னோர்கள் நமக்கு இம்மை [illegible] பயன்களைத் தருவனவாக அருளிச்செய்த நூற்களில் இது சிறந்த [illegible]. மனிதர் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஆயுள், செல்வம், புகழ், புத்திரகளத்திராதி சம்பத்து, சீலம், இன்பம் முதலியவைகளைப் பூரணமாக அறிந்து கொள்ளும்படி இந்த ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோலென்னும் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. சோதிடரை விரும்பாமலே ஒவ்வொருவரும் தாம் தாமே ஜாதக கணிதம் பண்ணவும், ஒன்பது கிரகங்களையும் பன்னிரண்டு இராசிகளில் அடைத்து ஆட்சி யுச்சம் இவைகளைக் கண்டு பலாபலன் சொல்லவும், இராசியில் 1-2-3-4-5-6-7-கிரகங்கள் ஒன்றாகக் கூடியிருப்பினும், இரண்டு மூன்று கிரகங்கள் சேர்ந்திருப்பினும் வேறு விதமாக மாறி மாறி யிருப்பினும் அவைகட்கு அனுபவமாகப் பலன் தெரிந்து சொல்லவும் உரிய மார்க்கங்களை இதனால் தெரிந்து கொள்ளலாம். இந்த ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோலைக் கையிலெடுத்துப் பார்த்த ஒவ்வொருவரும் சோதிடர்களாவதற்குத் தடையிராது. இந்த நூல்போல் எந்த நூலுமிராது.

**ஆனந்தபோதினி ஆபீஸ்,** தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வ தேவதா வசியம்

### (பீஜாக்ஷர யந்திரங்களடங்கியது.)

மனிதர், பேய் பிசாசுகளால் வருந்துன்பங்களினின்று நீங்கி, பகைவர் செய்யும் பில்லி சூனியம் மரணம் முதலியவை தங்களிடம் ஏறுதபடி செய்தும், நோய் நொடிகள் அணுகாமல் தடுத்தும், தேவதைகளையும் மனிதர்களையும் வசப்படுத்தியும், எவ்விடத்தும் எக்காரியத்திலும் ஜெயம் பெற்றும், மிகுந்த ஐசுவரியத்தையும் செல்வாக்கையும் அடைந்தும் வாழ்வதற்கே பிரியப்படுவார்கள். இவற்றை எல்லாம் எளிதில் அடையக்கூடிய மந்திர யந்திரங்களும், அவற்றை அனுஷ்டித்துச் சித்திபெறக்கூடிய மார்க்கங்களும் இதில் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதில் ஒவ்வொரு தேவதைக்கு முரிய மந்திரங்களும், மூல மந்திரங்களும், யந்திரங்களும், பூஜைகளும், தண்ணீர் மந்திரித்தல், வேப்பிலை மந்திரித்தல், விபூதி பிடித்தல், பிசாசு விலக்கல், கழிப்புக் கழித்தல், மந்திரங்கட்டல் முதலியவைகளும், நக்ஷத்திர பலாபலன்களும், அவற்றிற்குச் சாந்திகளும் வெகு தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. முதல் பாகமும் இரண்டாம் பாகமும் சேர்ந்து விலை ரூபா 1.

---

**இராஜலட்சுமி கம்பெனி, சௌகார்பேட்டை போஸ்டு. மதராஸ்.**